உ

சிவமயம்.

# சிகாளத்தி

# புராண வசனம்



ஸ்ரீகாளத்தி

கேசா - சுப்புராயலு நாயுடு அவர்க

பிரசுரிக்கப்பட்டது.

Copy. Right Reserve

இதன் விலை] 1929.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சீகாளத்தி புராண வசனம்.

அமரர் கி.
அவர்களின்
திருமதி சி
(1967)
சீர்காழி.

இவை

ஸ்ரீ கருணைப்பிரகாச சுவாமிகள்,

ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள்

ஸ்ரீ வேலைய சுவாமிகள் முதலிய

இம்மூவர்களால் திருவாய் மலர்ந்தருளிய

சீகாளத்தி புராண செய்யுள்களுக்கிணங்க

நெ. மு. ஷ. ஷண்முகசுந்தர நாயனாரால்

எழுதப்பட்டு,

சென்னை, இராயபுரம், வித்துவான் பாலபாரதி

ஸ்ரீலஸ்ரீ, V. N. மோகன புருஷோத்தம பிள்ளை R. S. C.

அவர்களால் பார்வையிடப்பெற்று.

ஸ்ரீகாளத்தி

கேசா. சுப்புராயலு நாயுடு அவர்களால்

சென்னை,

அமெரிக்கன் டைமெண்ட் பிரஸில்

பிரசுரிக்கப்பட்டது.

1929.

---

*Copy-right Reserved.*

இதன் விலை] [அணா 6.



 

ஸ்நானகாலத்தில் செய்யும்

# மந்திரம்.

ஸுலோகம்

சுத்திக்ஷேம சிவாபேக்ஷீ சுவர்ண முகரீம் சுபாம்
அகஸ்தியாசல சம்பூதாம் தத்பூர்வோ ததிகாமினீம்
சமஸ்தபாப ஹந்த்ரீம்த்வா மஹாம் ஸ்நாதும் சமாஸ்ரயே।
மஹாபாதகசம்ப்லுஷ்டம் காத்ரம்மம சுபோதகைః
க்ஷாளயாமி ஜகத்தாத்ரீ ஸ்ரேயசா பூர்வயஸ்யமாம்.

---

# స్నానకాలమంత్రము.

---

శ్లో॥ శుద్ధిక్షేమ శివాపేక్షీ సువర్ణముఖరీం శుభాం।
అగస్త్యాచల సంభూతాం తత్పూర్వోదధిగామినీం।
సమస్తపాప హంత్రీంత్వా మహాంస్నాతుం సమాశ్రయే।
మహాపాతక సంప్లుష్టం గాత్రం మమ శుభోధకైః।
క్షాళయామి జగద్ధాత్రీ శ్రేయసా పూర్వయస్యమామ్

---

சீகாளத்தி புராண

# சருக்க வட்டவணை.


| | பக்கம். |
|---|---|
| சிவப்பிரகாச சுவாமிகள் சரித்திரம் | |
| சீகாளத்தித்தேவாரம் | 11 |
| சீகாளத்தி திருப்புகழ் | 20 |
| சீகாளத்தி புராண பாயிரம் | 21 |
| விடசங்கமச்சருக்கம் | 25 |
| தென்கைலாயச்சருக்கம் | 31 |
| பொன்முகரிச்சருக்கம் | 35 |
| நான்முகச்சருக்கம் | 41 |
| சீகாளத்திச்சருக்கம் | 48 |
| கண்ணப்பச்சருக்கம் | 53 |
| நக்கீரச்சருக்கம் | 65 |
| கன்னியர்ச்சருக்கம் | 72 |
| சிலந்தி முதல முற்கதை சருக்கம் | 81 |

உ

சிவமயம்.

## ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள்

# திவ்ய சரித்திரம்.

இற்றைக்கு சற்றேறக்குறைய இருநூற்றெண்பதாண்டுகட்கு முன்னர் திருக்காஞ்சியில் தொண்டைமண்டல வேளாளர்க்கு தீக்ஷா குருவாய் விளங்கிய குமாரசாமி தேசிகரென்பாருக்கு அண்ணாமலையார் திருவருளினால் ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள், வேலைய சுவாமிகள், கருணைப் பிரகாச சுவாமிகள், ஞானாம்பிகை யம்மை என்னும் நால்வரவதரித்து முதல் மூவருங் கல்வி பயிலுங் காலத்தில் இவர்களரிய பிதா சிவலிங்க வயிக்யமுற்றனர்.

சிவப்பிரகாச சுவாமிகள் தனது தந்தையாருக்கு செய்யவேண்டியவைகளைச் செய்துவிட்டு தம்முடன் பிறந்தாருடன் திருவருணைக்கேகி ஸ்ரீ குருதேவரை தரிசித்து சோணசைலமாலை யெனப் பெயரிய ஓர் பிரபந்தத்தைப் பாடி அவ்வாடா மாலையை அண்ணாமலையாருக்கு சாத்தியருளி இன்னும் பேரிலக்கணங் கற்கவேண்டுமென்னும் பேராவலால் தன் சகோதரருடன் துறைமங்கலஞ் சேர்ந்து ஆங்கு தம்மையடைந்த குருலிங்க சங்கம பக்தியிற் சிறந்த சிவலிங்கதாரியான அண்ணாமலை ரெட்டியாரை அடிமைகொண்டு அவரால் சென்ன வசவையா மடத்திற்கு மேற்கில் கட்டுவித்த திருமடத்திலெழுந்தருளி அவருக்கு நல்லருள் சுரந்து ஆங்கு இரண்டாண்டளவு மிருந்து தங்கல்வியின் விருப்பை யாவருக்குந் தெரிவித்து அவரால் குருதக்ஷிணையாக வழிச்செலவிற் களித்த முந்நூறு பொன்னையும் பெற்று திருநெல்வேலியையடைந்து, சிந்து பூந்துறையில் தருமபுர வாதீனத்து வெள்ளியம்பலவாண சுவாமிகள் இலக்கண விலக்கியங்களில் மிக்க ஞானமுடையவரென்றறிந்து தஞ்சகோதரருட னவரை யடைந்து தங்கருத்தை வெளியிட அவர் சுவாமிகளுடைய இலக்கியப் பயிற்சியை யறிவான் வேண்டி கு. என்பதை முதலிலுங் கடையிலும். ஊருடையான் என்பதை இடையிலும் வைத்து ஓர் வெண்பாப் பாடுகவென்றருளலும், சுவாமிகள் உடனே,

### வெண்பா.

"குடக்கோடு வானெயிறு கொண்டாற்குக் கேழன்
முடக்கோடு முன்னமணி வாற்கு — வடக்கோடு
தேருடையான் றெவ்வுக்குத் தில்லைதோன் மேற்கொள்ள
வூருடையா னென்னு முலகு."

என்னும் வெண்பாவைப் பாடி யருள அவ்வெண்பாவில் வடக்கோடு தேருடையான் என்றமைந்திருத்தலை வியந்து சுவாமிகளைத் தழுவி தம் மருகிருத்தி வேலைய சுவாமிகட்கும், கருணைப் பிரகாச சுவாமிகட்கும் பஞ்ச லட்சணங்களையும் ஓர் பக்ஷத்துள் பாடஞ் சொல்லி முடிக்க சிவப்பிரகாச சுவாமிகள் அண்ணாமலை ரெட்டியாரளித்த முந்நூறு பொன்னையுங் குருதக்ஷிணையா யளிக்க வெள்ளியம்பலவாண ரதை மறுத்து திருச்செந்தூரிற் றம்மை சதா தூஷித்துக் கொண்டிருக்கும் ஒரு புலவரின் இருமாப்பை யொழிக்கில் அஃதே தமக்கு ஆனந்தமாமென, சுவாமிக ளதற்கியைந்து அங்கு தஞ்சகோதரருடன் சென்று அப்பெரும் புலவரைக்காண அவர். இவர் வெள்ளியம்பலவாண சுவாமிக ளருஞ் சீடரெனத் தெரிந்து வழக்கப்படியே அவரை தூஷிக்க இருவருக்கும் பெருமனத் தாங்கலுண்டாய் திருச்செந்தூர் முருகபிரான் மீது நீரோட்டக யமக வந்தாதி யார். முன்பாகப் பாடுகிறார்களோ அவர்களே ஜயித்தவராவார். அவருக்கு தோல்வி யுற்றோர் அடிமை செய்தே ஆகவேண்டுமென உறுதி செய்துக்கொண்டு உடனே தாம் முப்பது கலித்துறை பாடிமுடித்தனர். அவ்வித்துவானே அதுவரையினும் எவ்வளவோ பாடுபட்டும் ஒரு பாட்டேனும் எழுதவியலாது சுவாமிகளை வணங்கி அடிமையாயினேன், அடிமையாயினே னென்று கூற, சுவாமிக ளவ் வித்துவானை தம்மாசிரியருக்கு அடிமை செய்வித்தருளி ஆசிரியர் கட்டளைப்படி சிலகாலஞ் சிதம்பரத்தி லெழுந்தருளி பிறகு சிவஸ்தலங்களை தரிசித்துக்கொண்டு மீண்டும் அண்ணாமலை ரெட்டியார்பால் விஜயஞ்செய்து அவரால் திருவேங்கைமா நகரத்தில் கட்டுவித்த திருமடத்தி லெழுந்தருளி அத்தலத்திலுள்ள பழமலை நாதர்மீது திருவேங்கைக்கோவை, திருவேங்கைக் கலம்பகம், திருவேங்கையுலா, திருவேங்கை யலங்காரம் என்னும் பிரபந்தங்களியற்றி ஆங்கெழுந்தருளி யிருக்கையில் அவ்வூர்ப் பிடாரியின் இரதத்தினால் அடியவர்கட்கு மிக்க உபயோகமான திருமடத்தின் முருங்கைமரம் முறிந்தது கண்டு,

### அறுசீர் விருத்தம்.

"திருந்துதமி ழிலக்கணவைந் திணைக்கோவை
விருத்தகிரிச் செல்வற் கோதும்
பெருந்தகைமை யுடையம்பா்ம் விடுமோலை
வெங்கைநகர்ப் பிடாரி காண்க

விரும்புவியி லொருமுருங்கைக் கொம்பொடியா
மற்காத்தின் கிருக்கு நீகம்
முருங்கைதனை வேரோடுங் களைந்தனையென்று
னுனக்கு முறைய தாமோ."

### விருத்தம்.

"சேய்கொண்டா ருங்கமலச் செம்மனுட னேயரவப்
பாய் கொண்டானும்பரவும் பட்டீச் சுரத்தானே
நோய்கொண்டா லுங்கொளலா நூறுவய தளவிருந்து
பேய்கொண்டா லுங்கொளலாம் பெண்கொள்ள லாகாதே."

### அறுசீர் விருத்தம்.

"திட்டையிலே யிருந்துமனத் துறவடைந்து
பெரியோர்க ணிமலன் முளைக்
கிட்டையிலே தொடுத்துமுத்தி பெறுமளவும்
பெரியசுகங் கிடைக்கும் காம
வெட்டையிலே மதிமயங்குஞ் சிறுவருக்கு
மணம்பேசி விரும்பித் தாலி
கட்டையிலே தொடுத்துநடுக் கட்டையிலே
கிடத்துமட்டுங் கவலை தானே."

என்று விடையளித்தருளினர். சுவாமிகள் கருத்துணர்ந்த அண்ணுமலை ரெட்டியார் விவாகஞ் செய்துக்கொள்ள வேலைய சுவாமிகளை வேண்ட அவர் தம் மரிய தமையனுரின் கருத்தெதிர் பார்த்தவராய் மௌன முற்றனர். பிறகு ரெட்டியார் கருணைப் பிரகாச சுவாமிகளிடந் தங்கருத்தை வெளியிட. அவர்,

### விருத்தம்.

நாணியென்பதை நாரி யென்றுரைத்திடு நாசையால்
வேணு வானது வளைந்து போய்ப் புகுந்தது வென்றுற்
காணலாவதோ ருருவமெய்ந் நாரியைக் கண்டாற்
பூணுவார் மயல்காளைய ரென்பதும் புதிதோ.

என்றதைக் கேட்டருளிய சிவப்பிரகாச சுவாமிகள் தாம் துறவு பூண்டிருத்தலை யாவர்களுக்குந் தெரிவித்து அவர்களை விவாகஞ் செய்துக் கொள்ளக் கட்டளையிட்டு அவ்விவாக காலத்தி லியாவரும் பேருவகை பூக்க,

## இரட்டாசிரிய விருத்தம்.

"ஐயநின் சென்னிமிசை யுறைகின்ற மடமங்கை
யாரென்ன வுமை வினவவு
மன்னதொரு மடமங்கை யன்றுவெண் டிரைகொழித்
தழகொழுகு தண்புன லெனத்
துய்யவொளி யானனங் கரியவி விழிகாதுவாய்
தேயத்தி லுண்டோ வெனச்
சொல்லருங் கமலமலர் காவிமலர் கொடிவள்ளை
தூயசெங் குமுத மென்னப்
பொய்யென நினைத்துநற் கொங்கையுங் கூந்தலும்
புனலினிடை யுண்டோ யெனப்
*புற்பிதஞ் சைவலம தெனவே மறித்திப்
புகன்றிடுதி நங்கா யெனத்
தையலவ ளேனென்ன நாணோடு வணங்கியென்
றன்பிழை பொறுத்தி டென்றே
சங்கர னுரைத்திடத் திருவுள மகிழ்ந்தசிவ
சங்கரி யுமைக் காக்கவே." (1)

அரனவ னிடத்திலே ஐங்கரன் வந்துதா
னையவென் செவியை மிகவு
மறுமுகன் கிள்ளினு னென்றே சிணுங்கிடவு
மத்தன் வேலவனை நோக்கி
விரைவுடன் வினவவே அண்ணனென் சென்னியில்
விளங்கு கண்ணெண் ணினனென
வெம்பிடும் பிள்ளையைப் பார்த்துநீ யிப்படி
விகட மேன்செய் தாயென
மருவுமென் கைந்நீள முழமளந் தானென்ன
மயிலவ நகைத்து நிற்க
மலையரைய னுதவவரு முமையவளை நோக்கிநின்
மைந்தரைப் பாரா யெனக்
கருதரிய கடலாடை யுலகுபல வண்டங்
கருப்பமாய் பெற்ற கன்னி
கணபதியை யருகழைத் தகமகிழ்வு கொண்டனள்
களிப்புட னுமைக் காக்கவே, (2)

*புற்புதம் எ-து. நீர்க்குமிழி.

‘அம்பிகை யரன்றன்னை நோக்கியுன் னாபரண
மரவமென வுமையை நோக்கி
யரியரவ சயனத்தை யரவுருவ மானத்தை
யறியாய்கொல் சிறிது மென்ன
நம்பிமனை தொறுமிரந் துணுமாண்டி நீயென்ன
நான்றாத னறிவே னென
நவையுறும் பொய்புகன் றீரெனப் பாரத
நடந்ததே குறியா மென
வெம்பியொரு வன்பிரம் பாலடித் தானென
விளங்கிழை யொருத்தி தாம்பால்
வீசினது சொல்லென்ன வெண்ணா யிரம்பெண்கள்
மிருகற்பை நீக்கினை யெனப்
பம்புகற் பினிலோ ரிரட்டிப்பு நீக்கினது
பதரும னீகே ளெனப்
பரமருட னிவ்வாறு விளையாடு பச்சைப்
பசுங்கொடி யுமைக் காக்கவே’ (3)

அச்சுத னளிப்பனில முமதுநே யன்வித்தை
யருளு வன்பல பத்திரன்
அழமுதவு வன்சமன் பகடீவ னந்தமக்
கானதோ ரெருது முண்டே
முச்சிர வயிற்படை யினைக்கொழுவ தாக்குவோ
மொய்ம்புட திழுத் திறுக்க
முந்திய வடக்கயிற் றுடன்மற்று நமதன்பர்
முன்போ யிரந்து கொள்வோ
மிச்சையுடை நமதிளைய தனையனு கியகந்த
னினிமையொடு மாடு மேய்ப்ப
னினியுழுது பயிரிடுத னன்று நன்றிதை
விட்டிரந் துண்பதீன மெனவே
கச்சுமுலை மாதுமை யுரைத்திடும் புத்தியைக்
கைக்கொண் டுளத்தி விதுநற்
காரியமெனக் கருதி மெத்தக் களித்திடுங்
கண்ணுத லுமைக் காக்கவே. (4)

கவுரிகம லாயர னிரந்தசோ றுணவெனக்
கமலைமண் கண்டே னெனக்
காளைபொன் றேபரற் கெனமாடு மேய்த்ததைக்
கட்டிடைய னுரோ வெனச்
சிவனொருவர் தூதென்ன வத்தூது சென்றகதை
செப்பிலொரு பாரத மெனச்
சேரோடு திருடினு னரனெனக் கட்டுண்ட
செய்தி நாமறி வோ மென
வலையினட மாடினு னரனென்ன வவ்வாட
லரவமறி யாதோ வென
வாலமதை யுண்டன னரனென்ன மண்ணுண்ட
வதனையறி யோமோ வென
விவரமொடு மலைமகளு மலர்மகளு மிவ்வாறு
விளையாடு மிவர்க டுணையா
மேவிவரு புத்ரமித் திரக்களத் திரருடன்
மேன்மேலு மிக வாழியே. (5)

என ஆசீர்வதித்து, ரெட்டியாரால் சிதம்பரத்தி லமைத்த திரு மடத்தி லெழுந்தருளி தருக்கபரிபாஷை, சிவப்பிரகாச விகாசம், சத மணிமாலை, நால்வர் நான்மணிமாலை யென்னும் பிரபந்தங்களியற்றி ஆங்கிருந்து மற்றுஞ் சிவஸ்தலங்களை வணங்கி திருக்காட்டுப்பள்ளி யடைந்து கல்வியிற்சிறந்த ஓர் பெண் உப்புவிற்றலைக் கண்டுளமிரங்கி அவள் நல்லூழையும் பரிபக்குவத்தையுங் கண்டு, அவளருமையை உலகறிய,

வேண்பா.

"நிறைய வுளதோ வெளிதோ கொளுவோம்
பிறையை முடிக்கணிந்த பெம்மா — னுறையுந்
திருக்காட்டுப் பள்ளி திரிபாவாய் நீயிங்
கிருக்காட்டுப் பள்ளி யெமக்கு."

என்றோர் வெண்பாவை யருள அதற்கப்பெண்.

வேண்பா.

"தென்னோங்கு தில்லைச் சிவப்பிரகா சப்பெருமான்
பொன்னோங்கு சேவடியைப் போற்றினே — மன்னோ
திருக்கூட்ட மத்தனைக்குந் தெண்டனிட்டோந் தீராக்
கருக்கூட்டம் போக்கினோங் காண்."

என பாடியதைக்கேட்ட சுவாமிகள் அவளுக்கு ஞானோதய முண்டாகுமாறு கருணை செய்தருளி, அண்ணாமலை ரெட்டியாருடன் திருக்காஞ்சியைத் தரிசிக்க வருகையில் வழியில் ஸ்ரீ சாந்தலிங்க சுவாமிகளை சந்தித்து அவருடன் ஸ்ரீ சிவஞான பாலைய தேசிகரைக் கண்டானந்திக்கக் கருத்துகொண்டு, பொம்மைய பாளையத்தை சமீபிக்கையில் பாலை சுவாமிகள்மீது பாடவேண்டுமென்று வேண்டிய சாந்தலிங்க சிவாமிகளின் வேண்டுகோளை நரஸ்துதி செய்யோமென மறுத்து அவருடன் ஆங்கிருக்கும் ஐயனார் கோயிலின் பின்புறத்தில் துயில் கொள்ள சுவாமிகள் கனவில் சிவசுப்ரமணியர் மயில்வாகனரூடாரா யொரு பாத்திரத்தில் விபூதி புட்பங்கள் கொண்டுவந்து இதை மாலையாய் தொடுத்து நமக்கணிவிக்கக் கடவாயென திருவாய் மலர்ந்தருள உடனே சுவாமிகள் விழித்து தம்மருகி லிருக்குஞ் சாந்தலிங்க சுவாமிகளுக்குரைக்க அவர் தேசிகருக்கும், சுப்ரமண்யருக்கு மிருக்கும் ஒப்பற்ற பற்றை யுரைக்க சுவாமிகள் மனங்களித்து தேசிகர் மீது, நெஞ்சு விடு தூது, தாலாட்டு என்னும் பிரபந்தங்களைப்பாடி சந்நிதான மடைந்து அரங்கேற்றி அவரனுமதியின்வாறு தன் தங்கையார் ஞானம்பிகையம்மையாரை சாந்தலிங்க சுவாமிகட்கு திருமணஞ் செய்வித்து, தம்மை நிழல்போல் காத்திருந்த அண்ணாமலை ரெட்டியாரை துறைமங்கலத்திற் கனுப்பிவிட்டு ஞானாசிரியர் திருமடத்திலேயே சிலகாலம் வசித்திருந்து ஆசிரியர் அனுமதியால் காஞ்சிமா நகரை யடைந்து ஏகாம்பரேசுரர் இணையடிகளை இறைஞ்சிக்கொண்டிருக்கும், நாளில் சித்தாந்த சிகாமணி, வேதாந்த சூடாமணி பிரபுலிங்கலீலை, தம் ஞானாசிரியர் மீது திருப்பள்ளி யெழுச்சி பிள்ளைத்தமிழ், கூவப்புராணம் இவைகளைப் பாடிக்கொண்டுவந்து ஞானாசிரியரை தரிசித்து ஆங்கிந் நூல்களை யரங்கேற்றிக்கொண்டு வருகையில் ஓர் நாள் ஆசிரியருடன் ஏகாந்தமாய் ஷடுஸ்தல இலிங்கானுபவ முதலியவற்றை ஆராய்ந்து ஆனந்த மடைகையில் சந்திரோதயத்தைக் கண்டு,

### வெண்பா.

"கடன்முரச மார்பக் கதிர்கயிற்றா லேறி
யடைமதி விண்கழைநின் றாடக் — கொடைமருவு
மெங்கள் சிவஞான வேந்த லிறைத்தமணி
தங்கியவே தாரகைக டாம்."

என்னும் வெண்பாவை யருளி சிலகாலத்திற்குப் பிறகு ஞானசிரியர் நல்லநுமதியால் விருத்தகிரியை யடைந்து சிதம்பர பூபதியென்பார் தம்மை யெதிர்நோக்கி வணங்கியிருந்து தமக்காகச் சமைத்த அத்திருமடத்தை யடைந்து,

**கலித்துறை.**

"வெங்கை பழமலை யார்மீது கோவை வியந்துரைக்கு
மெங்கட் கினிய சிவஞான தேவ னிசைவுகொடு
திங்கட் பவனி யிருகான் முதுகுன்றர் சேர்மறுகின்
மங்குற் சிதம்பர பூபதி நல்கு மடமிதுவே."

என்னுங் கலித்துறையால் அச்சிதம்பர பூபதியை சிறப்பித்து அங்கிருந்து பழமலையந்தாதி பிக்ஷாடன நவமணிமாலை, கோச்சகக் கலிப்பா, பெரிய நாயகியம்மை, நெடுங்கழி நெடிலாசிரிய விருத்தம், பெரிய நாயகியம்மை கட்டளைக் கலித்துறை என்னும் பிரபந்தங்களைப் பாடி பரவசப்பட்டு ஆங்கிருக்கையில் ஓர் நாள் மணிமுத் தாற்றில் ஸ்நானஞ் செய்து ஓர் மாஞ்சோலை வழியாக திருமடத்திற் கெழுந்தருளியபோது வழியில் கிடந்த ஓர் மாம்பழத்தை சிவபெருமான் நைவேத்தியத்திற் காமென வெடுக்கையில் அச்சோலைக்காரன் வெகுண்டு சுவாமிகளை யவமரியாதையாக பேசி மடிபிடித்துத் தொந்தரை செய்ய சுவாமிகளுக்கு கோபமுண்டாய்,

**வெண்பா.**

"அடுத்துவருந் தொண்டனுக்கா வந்தகனைத் தாளா
லடர்த்ததுவுஞ் சத்தியமே யானா — லெடுத்தவொரு
மாங்கனிக்கா வென்னை மடிபிடித்த மாபாவி
சாங்கனிக்கா தித்தன்வரத் தான்."

எனப்பாடி யருளி அருணோதயத்திற்குள் அவன் ஆயுளை முடித்தருளினர். நிற்க,

சிவஞான தேசிகர் தமது ஐந்நூறும் வயதில் உலகத்தை திரணமென வெறுத்து தஞ்சீடரி லொருவருக்கு ஞானோபதேசஞ் செய்து அவரைத் தமக்குப்பின் தமது திருமடத்தி லமைத்து, வைகாசி மாதம் பௌர்ணமி திதியோடு கூடிய விசாக நக்ஷத்திரத்தில் சர்வ பரிபூரண சச்சிதானந்த பரமசிவத்துடன் கலந்தருளினர். இதனை யறிந்த சிவப்பிரகாச சுவாமிகள் தம்மாசிரிய ரொடுங்கிய குகையைத் தரிசித்து கன்றிழந்த பசுபோல் கண்ணீராறுய்க் கரைந்து ஐயனே! இவ்வெளியேனையும் திருவடித் தாமரையிற் சேர்த்தருள வேண்டுமெனப் பன்முறையும் பணிந்து மூன்றும் பட்டத்து சுவாமிகளுட னிருந்தருளினர்.

சிவப்பிரகாச சுவாமிகள் ஒரு நாள் கருணைப் பிரகாச சுவாமிகளுக்கு தாமருளிய நன்னெறி வெண்பா நாற்பதையுங் கடலோரத்தி லெழுதிவரக் கட்டளையிட்டு, பின் தாம் பாடல்பெற்ற ஸ்தலங்களைத் தரிசித்துக்கொண்டு வருகையில் இந்துக்களைப் போலவே நடித்து சதுரகராதி முதலியவைகளை யியற்றி ஆஷாடபூதி வேஷம் போட்டிருந்த ரெவரண்ட் பெஸ்கியென்னும் பெயருடைய வீரமாமுனியை சந்தித்து அவர் இயேசு மதமே சிறந்ததென ஏமாற்றித் திரிந்ததை இழிவுபடுத்தி இயேசுமத நிராகரணம் எனப் பெயரிய ஓர் நூலியற்றி யவர் வாயை யடக்கி மீண்டும் ஒவ்வொரு க்ஷேத்திரங்களையும் இரண்டிரண்டு வெண்பாக்களால் தோத்தரித்து ஞானசிரியர் திருமடத்தில் வீற்றிருந்தருளினார்.

சிவப்பிரகாச சுவாமிக ளனுமதி பெற்றுச் சென்ற கருணைப் பிரகாச சுவாமிகள் இஷ்டலிங்க வகவல் பாடி முடித்து சிகாளத்தி புராணத்தில் சீகாளத்தி சருக்கம் வரையில் பாடியருளி ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள்போல் தம் பதினெட்டாம் வயதில் பரசிவலிங்க வயிக்கிய முற்றனர். இதனையறிந்த சிவப்பிரகாச சுவாமிகள் ஆங்கடைந்து,

அறுசீர் விருத்தம்.

"முன்னமொரு தமிழ்ப்புலவன் றனையுண்டு
 கண்டசுவை முதிர்ச்சி யாலே
தன்னியலை முழுதுமுரைத் தமையாமுன்
 னினைக்கவர்ந்து தடங்கா ளத்தி
மன்னவனுண் டானெனது மாதவத்தின்
 வலிதீர மண்ணின் மீதே
யென்னுடன்வந் தவதரித்த விளங்கருணைப்
 பிரகாச னென்னுங் கோவே."

என்னும் திருவிருத்தத்தைப் பாடி சோகிக்க, இவரருகிலிருந்த வேலைய சுவாமிகள்.

அறுசீர் விருத்தம்.

"ஆண்டதனு லெனையொவ்வாய் வித்தையினிற்
 றமையனினு மதிக மென்றே
பூண்டவுல கதனிலுள்ளோர் புகல்வதுகேட்
 டிருந்துமென்ன புதுமை தானே
காண்டகுகண் மணியேநல் விளங்கருணைப்
 பிரகாசக் காளாய் நீதான்
மாண்டனையென் றறிந்திருந்து முயிர்தரித்தேன்
 யானுமிகு வன்னெஞ் சேனே."

என்னும் விருத்தத்தைப் பாடி, மனமுருகி, சிவப்பிரகாச சுவாமி களைப் பிரிய மனமிலராய் நிற்பதையறிந்த சுவாமிகள் அவரையாற்றிப் பிறகு திருமடத்திற் கெழுந்தருளி சிவநாம மகிமை, அபிஷேக மாலை, நெடுங்கழிநெடில், குறுங்கழிநெடில், நிரஞ்சன மாலை, கைத் தல மாலை, சீகாளத்தி புராணத்தில் கண்ணப்பச் சருக்கம், நக்கீரச் சருக்கம் இயற்றியருளி சில காலத்திற்குப் பிறகு ஸ்ரீ மணிவாசகப் பெருமான்போல் தமது முப்பத்திரண்டாம் வயதில் புரட்டாசி மாதம் பௌர்ணமி திதியில் பரசிவத்தில் இரண்டறக் கலந்தருளினர். இதைக் கண்ட வேலைய சுவாமிகள்,

வெண்பா

"அல்லிமலர்ப் பண்ணவனு மாராய்ந் தறிகவிதை
சொல்லு மிருவரிடைத் தோன்றியயான் — முல்லை
யரும்பிற் பொரலியு மணிமுறுவ னல்லாய்
கரும்பிற் கணுநிகர்த்தேன் காண்."

என்னும் வெண்பாவைப் பாடியருளி எல்லையில்லாத் துயரெய்தி தமக்குள் ஒருவாறு தேறி, பிறகு நல்லூர்ப்புராணம், இஷ்டலிங்க கைத்தல மாலை, வீரசிங்காதனப் புராணம், நமச்சிவாய லீலை, மயிலைத் திரட்டை மணிமாலை, பாரிசாத லீலை, மயிலைத்துலா என்னும் பிரபந் தங்களையருளி, தம்மிரு சகோதர ராலுமருளிய சீகாளத்தி புராணத் தையு முடித்தருளி பெருமத்தூர் மடத்தில் சற்றேறக்குறைய ஸ்ரீ அப் பர் சுவாமிகளைப்போல் தமது எழுபத்திரண்டாம் வயதில் சிவலிங்க வயிக்கிய முற்றனர்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் திருவடிகளே சரணம்.

சிவமயம்.



# திருக்காளத்தி தேவாரம்.

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்.

பண் — கொல்லி.

சந்த விருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

சந்தமா ரகிலொரு சாதிதேக் கும்மர
முந்துமா முகலியன் கரையினி லுமையொடு
மந்தமார் பொழில்வளர் மல்குவண் காளத்தி
யெந்தையா ரிணையடி யென்மனத் துள்ளவே. (1)

ஆலமா மரவமோ டமைந்தசீர்ச் சந்தனஞ்
சாலமா பீலியுஞ் சண்பக முந்தியே
காலமார் முகலிவந் தணைதரு காளத்தி
நீலமார் கண்டனை நினையுமா நினைவதே.

கோங்கமே குரவமே கொன்றையம் பாதிரி
மூங்கில்வந் தணைதளி முகலியின் கரையினி
லாங்கமர் காளத்தி யடிகளை யடிதொழ
வீங்குவெந் துயர்கெடும் வீடெளி தாகுமே. (3)

கரும்புதேன் கட்டியுங் கதலியின் கனிகளு
மரும்புநீர் முகலியின் கரையினி லணிமதி
யொருங்குவார் சடையினன் காளத்தி யொருவனை
விரும்புவா ரவர்கடாம் விண்ணுல காள்வரே. (4)

வரைதரு மகிலொடு மாமுத்த முந்தியே
திரைதரு முகலியின் கரையினிற் றேமலர்
விரைதரு சடைமுடிக் காளத்தி விண்ணவ
னிரைதரு கழலிணை நித்தலு நினைமினே. (5, 6, 7)

முத்துமா மணிகளு முருமலர்த் திரள்களு
மொத்துமா முகலியின் கரையினி லெழில்பெறக்
கத்திட வரக்கனைக் கால்விர லூன்றிய
வத்தன்றன் காளத்தி யணைவது கருமமே. (8)

மண்ணுமா வேங்கையும் மருதுகள் பீழ்ந்துந்தி
கண்ணுமா முகலியின் கரையினி னன்மைசேர்
வண்ணமா மலரவன் மாலவன் காண்கிலா
வண்ணலார் காளத்தி யாங்கணைந் துய்ம்மினே. (9)

வீங்கிய வுடலினர் விரிதரு துவருடைப்
பாங்கிலார் சொலைவிடும் பரனடி பணியுமி
ஞோங்குவன் காளத்தி யுள்ளமோ டுணர்தர
வாங்கிடும் வினைகளை வானவர்க் கொருவனே. (10)

அட்டமா சித்திக ளணைதரு காளத்தி
வட்டவார் சடையனை வயலணி காழியான்
சிட்டநான் மறையவ ஞானசம் பந்தன்சொ
லிட்டமாப் பாடுவார்க் கில்லையாம் பாவமே. (11)

திருச்சிற்றம்பலம்.

# திருவிராகம்.

## பண் — சாதாரி.

அறுசீராசிரிய சந்த விருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

வானவர்க டானவர்கள் வாதைபட வந்ததொரு மாகடல் விடந்
தானமுது செய்தருள் புரிந்தசிவன் மேவுமலை தன்னை வினவி
லேனமின மானினொடு கிள்ளிதினை கொள்ள வெழிலார் கவணினாற்
கானவர் தமாமகளிர் கனகமணி விலகு காளத்தி மலையே. (1)

முதுசினவி லவுணர்புர மூன்றுமொரு நொலிவரையின்மூளவெரிசெய்
சதுர்மதி பொதிசடையர் சங்கரர் விரும்புமலை தன்னை வினவி
லெதிரெதிர வெதிர்பிணையு வெழுபொறிகள்சிதரவெழிலெனமுழுதக்
கதிர்மணியின் வளரொளிகொ ளிருளகல நிலவு காளத்தி மலையே. (2)

வல்லைவரு காளியை வகுத்து வலியாகி மிகுதா ரகனைநீ
கொல்லென வுடுத்தருள் புரிந்தசிவன் மேவுமலை கூறி வினவிற்
பல்பல விருவிருங் கனிபருங்கி மிகவுண் டவைநெருங் கினமாய்க்
கல்லதிர நின்றுகரு மந்தி விளையாடு காளத்தி மலையே. (3)

வேயனைதோ ளுமையோர் பாகமது வாகவிடை யேறிசடை மேற்
றாயமதி சூடிசுடு காடினட மாடிமலை தன்னை வினவில்
வாய்கலச மாகவழி பாடுசெயும் வேடன்மல ராகு நயனங்
காய்கணையி னாலிடந் தீசனடி கூடு காளத்தி மலையே. (4)

மலையின் மிசைதனின் முகில்போல் வருவதொரு மதகரியை மழைபோன்றக்
கொலைசெய் துமையஞ்ச வுரிபோர்த்த சிவன்மேவு மலைகூறி வினவி
வலைகொள் புனலருவி பலசுனைகள் வழியிழிய வயனிலவு முதுவெய்
கலகலென வொளிகொள் கதிர்முத்த மவைசிந்து காளத்தி மலையே. ()

பாரதம் விளக்கிய பகீரத னருந்தவ முயன்ற பணிகன்
டாரருள் புரிந்தலை கொள்கங்கை சடையேற்ற வரன்மலையை வினவில்
வாரத ரிருங்குறவர் சேவலின் மடுத்தவ ரெரித்த விரகிற்
காரகி லிரும்பிகை விசும்பு கமழ்கின்ற காளத்தி மலையே, (6)

ஆருமெதி ராதவலி யாகிய சலந்தரனை யாழி யதனு
லீரும்வகை செய்தருள் புரிந்தவ னிருந்தமலை தன்னை வினவி
லூருமரவம் மொளிகொண் மாமணி யுமிழ்ந்தவை யுலாவி வரலாற்
காரிருள் கடிந்துகன கம்மென விளங்கு காளத்தி மலையே. (7)

எரியனைய சுரிமயி ரிராவணனை யீடழிய வெழில்கொள் விரலாற்
பெரியவரை யூன்றியருள் செய்தசிவன் மேவுமலை பெற்றி வினவில்
வரியசிலை வேடுவர்க ளாடவர்க ணீடுவரை யூடு வரலாற்
கரியினொடு வரியுழுவை யரியினமும் வெருவு காளத்தி மலையே. (8)

இனதளவி லிவனதடி யிணையுமுடி யறிதுமென விகலு மிருவர்
தனதுருவ மறிவரிய சகலசிவன் மேவுமலை தன்னை வினவிற்
புனவர்புன மயிலனைய மாதரொடு மைந்தரு மணம் புணருநாட்
கனகமென மலர்களணி வேங்கைக ணிலாவு காளத்தி மலையே. (9)

நின்றுகவ ளம்பலகொள் கையரொடுமெய் விடுபோர்வை யவரு
நன்றியறி யாதவகை நின்றசிவன் மேவுமலை நாடி வினவிற்
குன்றின்மலி துன்றுபொழி னின்றகுளிர் சந்தின்முறி தின்று குலவிக்
கன்றினொடு சென்றுபிடி நின்றுவிளை யாடு காளத்தி மலையே. (10)

காடதிட மாகநட மாடுசிவன் மேவு காளத்தி மலையை
மாடமொடு மாளிகைக ணீடுவளர் கொச்சைவய மன்னு தலைவ
னாடுமலி நீடுபுகழ் ஞானசம் பந்தனுரை நல்ல தமிழின்
பாடலொடு பாடுமிசை வல்லவர்க ணல்லர்பர லோக மெளிதே. (11)

திருச்சிற்றம்பலம்.

# திருநாவுக்கரசு நாயனார்.

## திருத்தாண்டகம்

எண்சீராசிரிய விருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

விற்றூணொன் றில்லாத நல்கூர்ந் தான்காண்
வியன்கச்சிக் கம்பன்காண் பிச்சை யல்லான்
மற்றூணொன் றில்லாத மாசது ரன்காண்
மயானத்து மைந்தன்காண் மாசொன் றில்லாப்
பொற்றூண்காண் மாமணிநற் குன்றொப் பான்காண்
பொய்யாது பொழிலேழுந் தாங்கி நின்ற
கற்றூண்காண் காளத்தி காணப் பட்ட
கணநாதன் காணவ னென்கண் ணுள்ளானே. (1)

இடிப்பான் காணென் வினையையே கம்பன்கா
ணெனும்பா பரணன்கா ணெல்லா முன்னே
முடிப்பான் காண்மூ வுலகுமாயி னான்காண்
முறைமையா லெம்புரியு வழுவா வண்ணம்
படித்தான் றலையறுத்த பாசுபதன் காண்
பராய்த்துறை யான்பழனம் பைஞ்ஞீலி யான்காண்
கடித்தார் கமழ்கொன்றைக் கண்ணியான் காண்
காளத்தி யானவ னென்கண் ணுளானே. (2)

நாரணன்கா ணான்முன்கா ணால்வேதன் காண்
ஞானப்பெருங் கடற்கோர் நாவா யன்ன
பூரணன்காண் புண்ணியன்காண் புராணன்றான் காண்
புரிசடைமேற் புனலேற்ற புனிதன் றான்காண்
சாரணன்காண் சந்திரன்காண் கதிரோன்றான் காண்
டன்மைகட் டானேகாண் டக்கோர்க் கெல்லாங்
காரணன் காளத்தி காணப் பட்ட
கணநாதன் காணவ னென்கண் ணுளானே. (3)

செற்றான்கா ணென்வினையைத் தீயாடி காண்
டிருவொற்றி யூரான்காண் சிந்தைசெய் வார்க்
குற்றான்கா ணேகம்ப மேவி னான்கா
ணுமையாணற் கொழுநன்கா ணிமையோ ரேத்துஞ்
சொற்றான்காண் சோற்றுத் துறையுளான் காண்
சுறாவேந்தனே வலத்தை நீறா நோக்கக்
கற்றான்காண் காளத்தி காணப் பட்ட
கணநாதன் காணவ னென்கண் ணுளானே. (4)

மனத்தகத் தான்றலைமே லான்வாக்கி னுள்ளான்
வாயாரத் தன்னடியே பாடுந் தொண்ட
ரினத்தகத்தா னிமையவர்தஞ் சிரத்தின் மேலா
னேழண்டத் தப்பாலா னிம்பாற் செம்பொன்
புனத்தகத்தா னறுங்கொன்றைப் போதி னுள்ளான்
பொருப்பிடையா னெருப்பிடையான் காற்றி னுள்ளான்
கனத்தகத் தான்கயி லாயத்துச்சி யுள்ளான்
காளத்தி யானவ னென்கண் ணுள்ளானே. (5)

எல்லாமுன் றோன்றுமே தோன்றி னான்கா
ணேகம்ப மேயான்கா ணிமையோ ரேத்தப்
பொல்லாப் புலனைந்தும் போக்கினான் காண்
புரிசடைமேற் பாய்கங்கை பூரித் தான்கா

ணல்லவிடை மேற்கொண்ட நாகம் பூண்டு
நளிசிர மென்றேந்தி யோர் நாணுயற்ற
கல்லாடை மேற்கொண்ட கபாலி காண்
காளத்தி யானவ னென்கண் ணுள்ளானே. (6)

கரியுருவு கண்டத்தன் கண்ணுள்ளான் காண்
கண்டன்காண் வண்டுண்ட கொன்றை யான்கா
ணெரிபவள வண்ணன்கா ணேகம்பன் கா
ணெண்டிசையுந் தானுய குணத்தி னான்காண்
டிரிபுரங்க ளெயிட்ட தீயாடி காண்
டீவினைக டீர்த்திடுமென் சிந்தை யான்காண்
கரியுரிமெய் போர்த்துகந்த கபாலி காண்
காளத்தி யானவ னென்கண் ணுள்ளானே. (7)

இல்லாடிச் சிலபலிசென் றேற்கின் றான்கா
ணிமையவர்க டொழுதிறைஞ்ச விருக்கின் றான்காண்
வில்லாடி வேடனு யோடி னான்காண்
வெண்ணூலுஞ் சேர்ந்த வகலத் தான்காண்
மல்லாடுதிர டோண்மேன் மழுவா ளன்காண்
மலைமகடன் மணாளனன்காண் மகிழ்ந்து முன்னுட்
கல்லாலின் கீழிருந்த கபாலி காண்
காளத்தி யானவனென் கண் ணுளானே. (8)

தெனப்பூ வண்டுண்ட கொன்றை யான்காண்
டிருவேகம் பத்தான்காண் டேனார்ந் துக்க
ஞானப்பூங் கோதை யாள்பாகத் தான்கா
ணம்பன்காண் ஞானத்தொளி யானுன் காண்
வாணப்பே ரூரு மறிய வோடி
மட்டித்துநின் றான்காண் வண்டார் சோலைக்
கானப்பே ரூரான்காண் கறைக்கண் டன்காண்
காளத்தி யானவ னென்கண் ணுளானே. (9)

இறையவன்கா ணேழுலகு மாயினான் கா
ணேழ்கடலுஞ் சூழ்மலையு மாயி னான்காண்
குறையுடையார் குற்றேவல் கொள்வான் றான்காண்
குடமூக்கிற் கீழ்க்கோட்ட மேவினான் காண்
மறையுடைய வானோர் பெருமான் றான்காண்
மறைக்காட் டுறையு மணிகண்டன் காண்
தறையுடைய கண்டத்தெங் கபாலி காண்
காளத்தி யானவ னென்கண் ணுளானே. (10)

உண்ணாவரு நஞ்ச முண்டான் றான்கா
ணூழித்தீ யன்றான்கா ணுகப்பார் காணப்
பண்ணாரப் பல்லியம் பாடினான் காண்
பயின்றநால் வேதத்தின் பண்பி னான்கா
ணண்ணாமலை யான்கா ணடியா ரீட்ட
மடியிணைக டொழுதேத்த வருளுவான் காண்
கண்ணாரக் காண்பார்க்கோர் காட்சியான் காண்
காளத்தி யானவ னென்கண் ணுளானே. (11)

திருச்சிற்றம்பலம்.

## சுந்தரமூர்த்தி நாயனார்.

### பண் - நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

செண்டாடும் விடையாய் சிவனேயென் செழுஞ்சுடரே
வண்டாருங் குழலா ளுமைபாக மகிழ்ந் தவனே
கண்டார் காதலிக்குங் கணநாதனெங் காளத்தியா
பண்டாவுன்னை யல்லா லறிந்தேத்த மாட்டேனே. (1)

இமையோர் நாயகனே யிறைவாவென் னிடர்த்துணையே
கமையார் கருணையினாய் கருமாமுகில் போன்மிடற்றா
யுமையோர் கூறுடையா யுருவேதிருக் காளத்தியு
ளமைவே யுன்னையல்லா லறிந்தேத்த மாட்டேனே. (2)

படையார் வெண்மழுவாய் பகலோன் பல்லுகுத்தவனே
விடையார் வேதியனே விளங்குங்குழைக் காதுடையாய்
கடையார் மாளிகைசூழ் கணநாதனெங் காளத்தியா
யுடையா யுன்னையல்லா லுகந்தேத்த மாட்டேனே. (3)

மறிசேர் கையின்னே மதமாவுரி போர்த்தவனே
குறியே யென்னுடைய குருவேயுன் குற்றேவல்செய்வே
னெறியே நின்றடியார் நினைக்குந்திருக் காளத்தியு
ளறிவே யுன்னையல்லா லறிந்தேத்த மாட்டேனே. (4)

செஞ்சேலன்ன கண்ணார் திறத்தேகிடந் துற்றலறி
நஞ்சேனா னடியே னலமொன் றறியாமையினாற்
றுஞ்சேனா னொருகாற் றொழுதேன்றிருக் காளத்தியா
யஞ்சா துன்னையல்லா லறிந்தேத்த மாட்டேனே. (5)

பொய்யவனு யடியேன் புகவேநெறி யென்றறியேன்
செய்யல னாகிவந் திங்கிடரானவை தீர்த்தவனே
மெய்யவனே திருவே விளக்குந்திருக் காளத்தியென்
னையனுன் றன்னையல்லா லறிந்தேத்த மாட்டேனே. (6)

கடியேன் காதன்மையாற் கழற்போ தறியாதவென்னுட்
குடியாக்கோ யில்கொண்ட குளிவார் சடையங்குழகா
முடியால் வானவர்கண் முயங்குந்திருக் காளத்தியா
யடியே னுன்னை யல்லா லறியேன்மற் றொருவரையே. (7)

நீறூர் மேனியனே நிமலாநினை யன்றிமற்றுக்
கூறே னாவதனாற் கொழுந்தேயென் குணக்கடலே
பாறூர் வெண்டலையிற் பலிகொண் டுழல்காளத்தியா
யேறேயுன்னை யல்லா லினியேத்த மாட்டேனே. (8)

தளிர்போன் மெல்லடியா ளுனையாகத் தமர்ந்தருளி
யெளிவாய் வந்தென் னுள்ளம் புகுதவல்ல வெம்பெருமான்
களியார் வண்டறையுந் திருக்காளத்தி யுள்ளிருந்த
வொளியே யுன்னையல்லா லினியொன்று முணரேனே. (9)

காரூரரும் பொழில்சூழ் கணநாதா னெங்காளத்தியு
ளாராயின் னமுதை யணிநாவ லாரூரன் சொன்ன
சீரூர் செந்தமிழ்கள் செப்புவார்வினை யாயினப்போய்ப்
பேரா விண்ணுலகம் பெறுவார் பிழைப் பொன்றிலரே. (10)

திருச்சிற்றம்பலம்.

---

## திருக்காளத்தித் திருப்பதிகம்-4.

சுவாமி காளத்திநாதர் - தேவி ஞானப்பூங்கோதை யம்மை

ஆக திருப்பதிகம் - 4.

# திருவெண்காட்டடிகளருளிய

## வெண்பா.

பொய்யை யொழியாய் புலாலைவிடாய் காளத்தி
யையரை யென்னு யறஞ்செய்யாய் — வெய்ய
சினமே யொழியாய் திருவெழுத் தைந்தோதாய்
மனமே யுனக்கென்ன மாண்பு. (1)

---

## கட்டளை கலித்துறை.

பத்தும் புகுந்து பிறந்து வளர்ந்துபட் டாடைசுற்றி
முத்தும் பவளமும் பூண்டோடி யாடி முடிந்தபின்பு
செத்துக் கிடக்கும்பிணத் தருகேயினிச் சாம்பிணங்கள்
கத்துங் கணக்கென்ன காண்கயி லாயபுரிக் காளத்தியே. (2)

பொன்னாற் பிரயோசனம் பொன்படைத் தாற்குண்டு பொன்படைத்
தன்னாற் பிரயோசனம் பொன்னுக்கங் கேதுண்டத் தன்மை [தோன்
லுன்னாற் பிரயோசனம் வேணதெல்லாமுண் டுனைப்பணியு [மைப்போ
மென்னாற் பிரயோசன மேதுண்டு காளத்தி யீச்சுரனே. (3)

வாளான்மக வரிந்தூட்ட வல்லேனல்லன் மாதுசொன்ன
சூளாலிளமை துறக்கவல் லேனல்லன் றொண்டுசெய்து
நாளாறிற் கண்ணிடந்தப்ப வல்லேனல்ல னினிச்சென்
றாளாவ தெப்படியோதிருக் காளத்தி யப்பருக்கே. (4)

முப்போதுமன் னம்புசிக்கவுந் தூங்கவு மோகத்தினாற்
செப்போதிள முலையாருடன் சேரவுஞ் சிவன்விடு
மப்போதுகண் கலக்கப்படவு மமைத்தா யையனே
யெப்போதுகாண வல்லேன்திருக் காளத்தி யீச்சுரனே. (5)

இரைக்கே யிரவும்பகலுந்திரிந் திங்கிளைத்து மின்னா
ரரைக்கேயவலக் குழியருகே யசும் பார்ந்தொழுகும்
புரைக்கேயுழலுந் தமியேனை யாண்டருள் பொம் முகரிக்
கரைக்கே கல்லாலநிழற்கீ ழமர்ந்தருள் காளத்தியே. (6)

நாறுங்குருதிச் சலதாரை தோற்புரை நாடொறுஞ்சீ
யூறுமலக் குழிகாமத் துவாரமொளித் திடும்புண்
ணேறுந்தசைம் பிளப்பந்தரங் கத்துளசிற் றின்பம்விட்
டேறும்பதந் தருவாய்திருக் காளத்தி யீச்சுரனே. (7)

---

# திருக்காளத்தி திருப்புகழ்.

**தாதத்த தாதத்த தாதத்த தாதத்த**
**தாதத்த தாதத்த—தனதான**

தோடுற்ற காதொக்க நீடுற்ற போதுற்ற
தோர்மைக்க ணுண்மிக்க நுதலாலே
தோள்வெற்பி னுன்விற்கை வேளுக்கு மேன்மக்கள்
சோகிக்கு மால்மிக்கு மடவார்தம்
மேடைக்கு ளேபுக்கு வாடிக்க லாமிக்க
வேசிக்கு நேசித்திங் குழலாதே
யூன்பெற்ற காளத்தி வாழ்முத்த னேபத்தி
யோதற்கு நீசாற்று மருளாயோ
வேடர்க்கு நீள்சொர்க்கம் வாழ்விக்க வேவெற்பின்
மீதுற்ற பேதைக்கு மணவாளா
வேழத்தி னுபத்தை மீள்வித்த மாலொக்க
வேதத்தி லேநிற்கு மயனுருந்
தேடர்கோ ணுநிற்கும் வேடத்தர் தாம்வைத்த
சேமத்து நாமத்தை மொழிவோனே
தீதற்ற நீதிக்கு ளேபத்தி கூர்பத்தர்
சேவிக்க வாழ்வித்த பெருமாளே

---

**தைய தானத் தனன தைய தானத் தனன**
**தைய தானத் தனன—தனதான.**

உய்யு ஞானத்து நெறிகைவிடாகெப் பொழுது
முள்ள வேதத் துரைகொ டுனையோதி
யுள்ள மோகத் திருளை விள்ள மேகப் பொருளை
யுள்ள மேகத் தருளி யுறவாகி
வைய மேழுக்கு நிலை செய்ய நீதிப் பழைய
மஞ்ஞை மேலுற் றுருச யிலமேவும்
வள்ளி கானிற் புதியவள்ளி யோடுற் றெனது
வல்ல நோயைக் களைய வருவாயே
பைய ராவைப் புனைய மையர் பாகத்து வளர்
தைப லாள்பெற்று மகிழ் புதல்வோனே
பவ்வ மீதிற் றுயில்வா செல்லி தோளைப் புணரு
மைய வாலுக் குறிய மருகோனே
செய்ய மால்வெற் புருவ வெய்ய வேல்சுற்றி விடு
செல்வ காளத்தி மலை யுறைவோனே
தெய்வ நாடர்க் குரிய வெள்ளை யானைத் தலைவர்
தெய்வ யானைக் கினிய பெருமாளே

---

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

# சீகாளத்திபுராண வசனம்.

## பாயிரம்.

### காப்பு கலிவிருத்தம்.

தருமஞ் சந்திகழ் தகமரை யோன்பதங்
கருமஞ் சந்தி கடுப்பவர் வாழ்பதந்
திருமஞ் சந்திரற் றேய்திருக் காளத்தி
வருமஞ் சந்தி மழைமத யானையே.

### காளத்திநாதர்.

அறுசீர்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

நீர்கொண்ட பொலம்பூங் கொன்றை நெடுஞ்சடை வனத்து டுத்த
சீர்கொண்ட புலித்தோர் கஞ்சிச் சென்றுபுக் கொளிப்பத் தாவு
மேர்கொண்ட வுழையி னங்கன் றிலங்கிய திருக்கரத்துக்
கார்கொண்ட பொழிற்கா ளத்திக் கடவுளை மனத்துள் வைப்பாம்.

### ஞானப்பூங்கோதை யம்மை.

பூமக ளிறைஞ்ச நெற்றிப் புதுமணித் திலகந் தோய்ந்து
தாமரை * நகுமு கத்தோர் தான்பெறப் பணிக ளங்க
மாமதி புரையு மங்கேழ் வயக் † குகிர் மலர்த்தாட் குன்றக்
கோமக ளருண்ஞா னப்பூங் கோதையை வணக்கஞ் செய்வாம்,

---

* நகுமுகம் — எ-து — சிரித்த முகம்
† குகிர் — எ-து — நகம் இக்கு உகிர் என்பது குகிர்

### விநாயகக்கடவுள்.

தாய்குறங் கேறித் தந்தை சடையிடை மதிக்கீ துப்போக்
காய்சின வரவென் றஞ்சிக் கடுக்கையுட் புகக்கை நீட்டிப்
பாய்புனன் முகந்து நின்று பழிச்சுனர் வாயி லின்றோர்
வாய்நகை தளைப்ப வீசு மழைமதக் களிற்றைத் தாழ்வாம்.

### சுப்பிரமணியக் கடவுள்.

பன்னிரு கமலக் கையும் பற்பல தொழில்வி ளைப்பத்
தன்னமர் தாய்மு லைப்பா ருன்கவா ளிருந்துண் ணுங்கான்
முன்னவ னகலந் தாழ்ந்த மொய்தலைத் தொடைபு ரட்டும்
பொன்னடி விளைய சேயம் புந்தியி னுலவு மன்றே.

வளர்செழுங் குருதிச் சூட்டு வாரணம் வலனு யர்த்த
வொளிகெழு பரிதி வைவே லொருபெருங் கருணை மூர்த்தி
களிமகிழ் சிறந்து தான்வாழ் கற்களி னெருகல் லென்றோ
வளியவென் மனத்தி னுள்ளு மகன்றில னிருக்கு மன்னே.

### வீரபத்திரக்கடவுள்.

அருவரைக் குளங்கள் பந்தி னடிபெயர்ந் துருள வார்க்கும்
விரிதிரைக் கடல்பு ரண்டு வியனில முழுதும் போர்ப்பக்
குருமல ரண்ண லண்டங் குலுங்கிடச் சிறைய டிக்கொள்
சாபமாய் நரம டங்க றனையடர்த் தவனைத் தாழ்வாம்.

### திருநந்திதேவர் கலிவிருத்தம்.

செம்பொரு ளாகமத் திறந்தெ ரித்தரு
நம்பவ மருததனன் னந்தி வானவ
னும்பர்த மணிமுடி யுரிஞ்சக் கன்றிய
வம்பவிழ் மலரடி மனத்தி ருத்துவாம்.

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்.

மேவ ரும்பர மானந்த வீட்டினுட்
டாவி னன்மணங் காணிய சார்ந்தவர்
யாவ ரும்புகு வித்தருள் செந்தமிழ்ப்
பாவ லன்மலர்த் தாண்முதல் பற்றுவாம்.

### திருநாவுக்கரசு நாயனார்.

வேற்று ருக்கொள் விதியறி யாவரன்
கீற்று வெண்பிறைக் கேழ்கிளர் செஞ்சடை
யாற்று ணச்சுமை யேற்று மருந்தமிழ்
[illegible]ருந்தவத் தோனை வழுத்துவாம்.

### சுந்தரமூர்த்தி நாயனர்.

மாத ரிற்கண் மழுவலத் தேந்திப
வாதி யைத்திரு மாலு மறிகலாப்
பாத முற்றுஞ் சிவந்திடப் பண்டொர்நா
டூது விட்ட புலவற் றெழுவமால்.

### மாணிக்கவாசக சுவாமிகள்.

வஞ்சி நுண்ணிடை மால்வரை மங்கைபூண்
டுஞ்சு வெம்முலைத் தொய்யி லெழுதுகைக்
கஞ்ச நோவக் கடவு லெழுதுமச்
செஞ்சி வைத்தமி ழோனடி சேர்குவாம்.

### காரைக்காலம்மையார்.

தோற்ற மில்பரஞ் சோதிதன் வாய்திறந்
தாற்ற னன்புட னம்மையே யென்னுமோர்
பேற்றை முன்பெறப் பேயுரு வெய்திய
சாற்ற ரும்புகழ்த் தாயை வணங்குவாம்.

### சேரமான் பெருமாணயனர், காடவர்கோனயனர்.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

வெள்ளியங் குன்றத் துச்சி வீற்றிருந் தருள்வோன் கேட்பத்
தெள்ளமு தனைய தீஞ்சொற் றிருவுலாச் செய்யுள் செய்தோன்
றள்ளுடம் பிழித்து முன்னேன் றலந்தோறும் புனை வெண்பாட்டு
வள்ளலென் றிவர்கள் செம்பொன் மலரடி வணக்கஞ் செய்வாம்.

### தமிழ்த் தெய்வம்.

மறைமுதர் கிளந்த வாயான் மதிமுகிழ் முடித்த வேணி
யிறைவர்தம் பெயரை நாட்டி யிலக்கணஞ் செய்யப் பெற்றே
யிரைகடல் வரைப்பிற் பாடை யனைத்தும் வென்றாரி யத்தோ
டுறழ்தரு தமிழ்த்தெய் வத்தை யுண்ணினைந் தேத்தல் செய்வாம்.

### பொய்யடிமை யில்லாப்புலவர்.

தடவரை முனிவ னீன்ற தமிழ்க்கொழுங் குழவி தன்னைப்
படர்வெயி லுமிழுஞ் சங்கப் பலகையந் தொட்டி லேறி
நடைவர வளர்த்து ஞால நனந்தலை மறுகில் விட்ட
மடனறு புலமை யோரை மனத்தியா நினைந்து மன்றே.

## குருதேவர்.

புனிற்றிளந் திங்கள் வேய்ந்த புரிவளர் சடையு நெற்றிக்
கனற்றிரு விழியு மானுங் கரந்துவந் தென்னைப் பாச
மனைத்தையு மறுத்தாட் கொண்ட வருட்குரு தேவ னென்னுந்
தனிப்பெருங் கருணை வள்ள றன்னடி மனத்துள் வைப்பாம்.

## சிவப்பிரகாச சுவாமிகள்.

புனையெழில் வடிவி னுளோர் பொதுமகட் கண்ட மைந்தர்
மனமெனப் புலவர் நெஞ்ச மருளுமின் றமிழ்ப்பா மாலை
சினவிடை யவர்கே சாத்துஞ் சிவப்பிர காசனென்னு
முனைவனெம் மடிகள் பாத முளரிகள் சென்னி சேர்ப்பாம்.

எவனொரு நெடியி லெண்ணு திசைத்ததோர் செய்யுண் மற்றைக்
கவிகள்பன் னுணி னைந்த காப்பியங் கட்கு மேலா
மெவனிறை முதனு மத்தோ டியைதரும் விளக்கப்பேரோ
னவனெடு பிறப்பே மக்கீண் டளித்தபால் வாழ்க மன்னோ.

## அவையடக்கம்.

நூற்றுறை பயின்று பெற்ற நுண்ணுணர் வுடைய னல்லோன்
சாற்றமிப் போலிச் செய்யுள் சான்றவ ரிகழ்தல் செய்யார்
மேற்படு முணர்வின் மூத்தோர் மென்னடைச் சிறுவர் செய்வாய்ப்
பார்கடி கமழு மென்சொற் பழிப்பவ ருலகி னுண்டோ.

முரிதிரைக் கங்கை நீந்த முனையினஞ் சுமிழெ யிற்று
வெருவரு சினத்த பாம்பை வெண்டலை முழையிற் சேர்க்கும்
புரிசடைக் கடவுள் வாழும் பொருவிரென் கயிலா யத்தின்
பெருமையிற் சிறித றிந்த பெற்றிசெந் தமிழாற் சொல்வேன்.

பாயிர முற்றிற்று.

---

## சிறப்புப்பாயிரம்.

எழுசீர்க்கழிநெடி லடியாசிரிய விருத்தம்.

பொன்றிகழ் சடிலப் புனிதனெம் பெருமான்
புலமலர்க் கோதையோ டமர்ந்த
தென்றிருக் கயிலைப் புகழமு ததனைத்
தீங்கவித் தாரை பெய் ததுவாற்
குன்றலி லிசையார் சிவப்பிர காசக்
கோதிலாத் தமிழ்க் கடன் முகந்தே
யென்று நின் றுறவே பொழிதரு கருணை
விளக்கமென் றியம்புமா முகிலே.

---

உ

சிவமயம்.

# விடசங்கமச் சருக்கம்.

### கலித்துறை.

கடலு டைப்பெரு மாநில மடந்தைக்குக் கவின்ற
சுடர் விழிக்கரு மணியினுட் பாவையாய்த் தோலா
விடையு யர்த்தவற் குட்புற மாகிய வியன்சீ
ரொடிவில் காளத்தி நகரணி யறிந்தவா றுரைப்பாம்.

### இதுவுமது.

மகர மைக்கட லிலவல யத்திடை வளங்கூர்
துகளில் சீர்த்திரு நாட்டினுட் டொண்டைநா டென்னத்
திகழ்ம ணிக்கணங் குயின்றொளிர் செம்பொனீண் மாட
நகரெ வற்றினுஞ் சிறந்தது காளத்தி நகரம்

கடலாடை யுடுத்த பூமிதேவிக்குக் கண்ணின் கருமணியுட் பாவையாகவும், இடபாரூடராகிய பெருமானுக்கு அதிக பிரீதியுடைய தாகவும் விளங்கும் திருக் காளத்தி நகரின் சிறப்பைச் செல்லுவாம் :

"மேற்குப் பவளமலை வேங்கட நேர்வடக்கு
ஆர்க்கு முவரி யணிகிழக்கு—பாக்குலுயர்
தெற்குப் பிநாகிமலை சேரிருப தின்காதம்
நற்றொண்டை நாடெனவே நாட்டு."

என்றபடி இருபதுகாத விஸ்தீரணம் பெற்றதாகிய, பவளமலைக்குக் கிழக்கு, திருவேங்கடத்திற்குத் தெற்கு, கடலுக்கு மேற்கு, பிநாகிமலைக்கு வடக்கு என்னும் நாற்பாங் கெல்லையுடையதும், சான்றோருடையதெனக் கலைமகளின் அவதாரமாய் விளங்கிய ஔவைப் பிராட்டியாரால் வியந்தோதப் பெற்றதும், செந்தமிழ் நாட்டின் ஒரு பகுதியாய் இலகுவதும், மாநுட சரீரத்திற் குரிய முப்பத்திரண்டு அவயவங்களைப்போல முப்பத்திரண்டு சிவஸ்தலங்களைத் தன் பாலுடையதுமாய், சோழனொருவன் பிதத் துவாரத்தின் வழியேபோய் நாக கன்னிகையை மணந்த காலத்து, அவள் யான் பெற்ற புதல்வனை யாதுசெய்வதென வினவ, நீ தொண்டைக்கொடியை அடையாளமாகக் கட்டிக் கடலிலே விட, அவன் வந்து கரையேறின் அவனுக்கு நான் அரசுரிமைசெய்துவித்து நாடாட்சி கொடுப்பமெனக் கூறியபடி, அவளும் அங்ஙனம் வரவிட, அவனைத் திரை (அலை) தருதலின்,

இளந்திரயனேன்றும், தொண்டைக் கொடி யணிந்து வந்தமையின் தொண்டைமான் என்னும் பெயரிட்டு அவனுக்குக் கொடுத்தமையின் தொண்டை நாடெனுங் காரணப் பெயர் தாங்கிய நாட்டிலே, சிறந்த நகரங்கள் பலவற்றினுஞ் சிறந்துள்ளது சீகாளத்தி நகரம், அஃதெப்படியென்றால், ஏனைய சிவதலங்கள் மோட்ச நீங்கிய போக பாக்கியங்களையே தருவதாலும் இந்நகரம் அற்றோடு மோட்சத்தையுந் தருவதாலு மென்றுணர்க. இந்நகரமோ அந்தணர், அரசர், வணிகர், சூத்திரரெனும் உத்தம குலத்து நாற்பெருங் குடியும், உயர்ந்த வுமிழ்த்த வுமயங்கத் தோன்றிய அநுலோமர் பிரதிலோமர் அந்தராளர் விராத்தியர், ஏனைய சங்கர ஜாதியர் யாவரும் நிறைந்து தங்கள் குலாசாரதர்மங்களும், பிரமசாரியாதிய ஆசிரம தர்மங்களும் குறைபாடின்றி, தர்மார்த்த காமமோட்சங்களுக்கு உறைவிடமாக விளக்கத்தக்கது இந்நகரத்திலே ஸ்ரீ காளத்தியப்பரென்னும் பெயரேற்றுச் சிவபிரான், ஞானப்பூங் கோதையென்னுந் தேவியாரோடு ஒரு காலமும் நீங்காது வீற்றிருந்து பஞ்ச கிருத்தியங்களை நடத்தி அடியவர்க்கு இஷ்ட சித்திகளை யனுகிரகித்து அருள் புரிகின்றனர். இந்நகரம் கயாரணியம், வில்வாரணியம், தென் கைலாய முதலிய பல காரணத் திருநாமங்க ளுடையது.

முன்னொரு காலத்தில், கடல்போன்ற சேனையுடையவனாய், பூர்ண சந்திரன்போன்ற வெண்கொற்றக்குடை நீழலிலிருந்து மநு முறை புறழாது செங்கோல் செலுத்திய யாதவ மகாராஜன் என்பார் நாராயணபுரத்தில் அரசு செய்திருந்தினர். அவர் க்ஷத்திரிய குலத்திலுதித்தவரும், சகலகலா நிபுணரும்,

"படைகுடி கூழமைச்சு நட்பாணுறு
முடையா னரசரு ளேறு"

என்றபடி, அமைச்சு, நாடு, அரண், பொருள், படை, நட்பென்று சொல்லப்பட்ட ஆறங்கங்களையும் உடையதாகிப் புண்ணிய பாவங் கட்கஞ்சி, குருலிங்க ஜங்கம பக்தி மிகுந்து, தன்னுயிர்போல மன்னுயிர்களிடத்தே பெருங்கருணை நிரம்பிய கிருபாசாகரமாக இன்சொல், ஈகை முதலிய சகல சற்குணங்களோடு அரசுபுரிந்து வருகையில். அவரது சிவபுண்ணிய முதிர்ச்சியால் சிவபெருமான் அவரை யடிமைகொள்ளத் திருவுள்ளக் கருத்துடையராய், திருவெண்ணீற்றுத் தூளன திரிபுண்டரங்கள் பிரகாசிக்கவும், உருத்திராக்க மாலிகாபரணங்கள் ஒளிசெய்யவும், இஷ்டலிங்கதாரண மிலகவும் சொல்லற்கு அ வுபடாத பேரழகுவாய்ந்த விடசங்கம வடிவமெடுத்து அந்த நாராயணபுரமெனு நகரத்தை நண்ணி, ஆகாயமளாவிய மாளிகைகள் நெறுங்கிய தோரணங் கட்டிய தெருவழியே மெல்ல நடந்து, செல்லுகையில் அவ்விடசங்கமரைக் கண்ட நங்கையர் நாண முதலிய காவல் கடந்து, தமது மேகலாபரணமும், வளையலு மிழந்து உடல் பசந்து,

தமது கண்களாகிய நீலோற்பலங்களைப் பரப்பி, காற் சிலம்புகள் புலம்ப இடந்தோறுஞ் சேர்த்து, ஒருவரோடொருவர் ஏடி இவன் செவ்வேளோ அன்பர்க்கருளும் மான்மழுவேற்ற கண்ணுதலாகிய பரமேசுவரனோ என்பர் சிலர். அணிவோர் வினையை நீறுசெய்யும் திருநீறு பூத்த நெற்றியையும், உருத்திராக்க மணியையும் முத்து மணியையும் கலந்து கோத்தணித்த மார்பையும், மலர்மாலை சூடப்பெற்றுச் செவியின்மேல் தொங்குந் தலை மயிரையும் நாம் இன்னொருமுறை கனவிலாது காணப்பெறுவோமோ வென்பார் சிலர். மெல்லிய மான் கன்றின் செவியழகினை வென்ற வெற்றிலை யடுக்கியுள்ள இடது கையும், பொற் பிரம்பு பிடித்த தாமரை மலர்போன்ற வலக்கையும், உத்தரீயமானது ஒளிவிட்டு அசைகின்ற மலைபோலப் பூரித்த தோளும், நம்முடைய கண்ணையும் கருத்தையுங் கவர்ந்தன இது யாது எனக்கூறுவர் சிலர். ஊரார் பழிக்கும்படி நமது உடையையும் வளையலையுங் கவர்ந்து, ஸ்தனங்களை நிறம் வேறுபடுத்தி, மனதையுங் கிரகித்துக்கொண்டு வீதியைக் கடந்து, விரைந்து செல்லும் அன்பில்லாத இச்சங்கமனைக் கண்டால், உலகத்தை யெல்லாம் மயக்கச்செய்யும் மன்மதனும் மயங்கி விடுவானென்பர் சிலர்.

இவ்வாறு பலபடக்கூறிக் காமக்கினியினாற் சுடப்பெற்ற மங்கையர் வருந்தியிருக்க, விடசங்கமர் மேலே செல்லுகையில், யாதவ மகாராசனுக்குக் கலந்திருத்திவைக்கும் சிற்றேவலையுடைய மங்கை யொருத்தி, இயற்கையாகச் சிவபக்தி முதிர்ந்தவள் எதிர்ப்படவும், விடசங்கமருடைய தாமரை மலர்போன்ற பாதங்களில் சாஷ்டாங்கமாகப் பணிந்து நேர்நின்று, அனலிற்பட்ட நெய்போ லுருகிய மனத்துடன் முகமலர்ச்சி கொண்டு கைகூப்பி, சுவாமிகளே ! தேவரீரைத் திருவடி பணிந்து இம்மாநுட வடிவேற்ற பயனைப் பெற்றேன், ஆயினும் அடிமையின் விடயமாக மனமிரங்கி அடியாள் * குடலுக் கெழுந்தருளித் திருவமுது செய்து † பரிகலச்சேட மளித்தருள வேண்டுமென மீண்டும் நமஸ்கரிக்க, விடசங்கமர் ஆசையோடு நோக்கி பெண்ணே ! சிவபக்தியுடைய மாதர்களில் உன்னை யொப்பவர் ஒருவருமிலர். உனக்குச் சொல்லவேண்டுவ தொன்றுண்டு யான் உன்பால் மன்மத விகாரங் கொண்டுள்ளேன். அதற்கு நீ தடையின்றி விருப்போ டிடங்கொடுப்பதாகில் வருவேனென, கலந்திருத்துங் காரிசை சந்தோஷித்துப் புன்னகை செய்து, இழி ‡ தகைமையுடைய என்னுடலைக் கலக்கத் தேவரீர் திருவுள்ளங்கொண்டது அடியாள் பல காலஞ் செய்த தவப் பயனேயாமாதலின், திருக்கருத்தின்படி யாகுகவென வணங்கி விடசங்கமறைக் கொண்டு வீடடைந்து அவர் பாதங்களை யலம்பி,

---

* குடில் — எ-து — ஓலை வீடு.

† பரிகலச்சேடம் — எ-து — உண்ட எச்சில்.

‡ தகைமை — எ-து — தன்மை.

பீடத் திருத்தி, நல்லுண வூட்டி, பின்னர்க் கலவைச் சாந்துபூசி, பரிமளமிகுந்த தாம்பூல மளித்து நிற்ப, சங்கமர் (அம்மங்கையினது அன்பையும், சீகாளத்தியின் சிறப்பையும் விளக்கி, யாதவ மன்னனை யாட்கொண்டருள நடித்துக் காட்டிய திருவிளையாட்டாக) காமம் வெளிப்படு குறிகள் காட்டி அவளைத் தழுவினர்போலக் காமக்கடலி லமிழ்த்தினர். இதனால் அம்மாது மாயசங்கமர் வலையிலகப்பட்டு மன்னவன் குற்றேவலை மறந்தனள். அரசனோ உரிய காலத்தில் நீராடித் திருநீறணிந்து பூசைமுடித்து உண்ணுதற்குக் கிழ்த்திசை நோக்கியிருந்து, பணிப்பெண் * ணின்மை யறிந்து கண்கள் நெருப்பெழக் கோபித்து, கைகட்டி வாய்பொத்தி அருகே நிற்கும் சேவகரை நோக்கி அவளை விரைவிற் கொண்டு வருகவென, அவர்கள் மனவேகத்தி † கடிது சென்று கோபத்துடன் விளிப்ப, அம்மாது துண்ணென உடல் நடுங்கவெழுந்து ஐயரே! செல்லாதீரென வேண்டிப் புறத்தே வருமுன், அரசனே வலர் வாவென வெக் கோபித்து அப்பொழுதே அரசன்முன் செலுத்த, காவலன் கண்டு கடுங்கோபத்துடன், இவள் மலரணிந்த கூந்தலைக் களைந்து மழிக்கவிடக் கடவீரெனக் கட்டளை தர, அவர்கள் மஞ்சிகனைக்கொண்டு அங்ஙனமே செய்வித்தார்கள். நெய்பூசப் பெற்று முனையிற் குழைவுற்று மேகத்தையும் நீலரத்தினத்தையும், வண்டினையும், கருமணற்படிவையும் நிறத்தால்வென்று கொடிப்பாசி போலப் படர்ந்து, மலர் மணம் பெற்று நீண்டுள்ள கூந்தலை யிழந்த அப்பெண்கலாப மிழந்த மயில்போலாகிய அதனால் மனந்தாளாது முத்துக்கள்போல நீர்த்துளிகளைச் சிந்தி மிகவுந் துக்கித்து அரசவீதியில் கண்டோரனைவரும் மனவருந்த மெய்தும் வகையாகப் போயினள்.

அதனைக்கண்ட அந்நகர வாசிகள், ஐயோ! கலந்திருத்தத் தவறிய குற்றத்திற்கே இப்பெண்ணின் கூந்தலை மழிப்பித்த மன்னவன் வேறு குற்றமொருவர் செய்யின் எவ்வண்ணந் தண்டிப்பானோவென்பாரும் வஸ்திரம் பொன்னாபரண ரத்தினாபரணங்கள் சந்தனம் புஷ்பம் முதலியவற்றால் அதிக அலங்கரிப்பினும், பெண்களுக்குக் கூந்தலொன்றில்லையாயின், அவையெலாங் குறைவுபடுமென்பாரும், அந்நாவிதனுக்குத்தான் இப்பெண்ணின் கூந்தலைக் களையக் கையெழுந்ததோ வென்பாரும், அரசன் கட்டளை யிட்டது அழகன்றாயினும் அதனைத் தடுக்கும் ‡ ஆற்றல் யாருக்குண்டோ மென்பாரும், எவ்வளவு வறுமை வந்தடையினும் ஒருவர் கட்டளைக்குட்பட்டு வாழாதிருத்தலே நல்லதென்பாரும், பெருஞ் செல்வம் உண்டாவதாயினும் ஐயோ! குற்றேவல் புரிவது மிக்க கொடியது என்பாருமானார்கள்.

---

* இன்மை — எ-து — இல்லாமை.

† கடிது — எ-து — துரிதம்.

‡ ஆற்றல் — எ-து — வல்லமை.

இவ்விதமாக இருபக்கத்தி லுள்ளாரும் மனந்தாளாது கூறிய வார்த்தைகளெல்லாம் தனது துன்பத்தை அதிகப்படுத்த தன் வீட்டையடைந்து, சந்திர சூரியன் முதலியவற்றை மறைந்து சங்கம வடிவோடு வந்துள்ள சிவபெருமான் றிருவடியில் நமஸ்கரித்துக் குறை கூறியழுது கொத்தாகிய மலர்களை யிழந்த பூங்கொடி போலப் புரண்டாள். அதுகண்ட விடசங்கமர் பெண்ணே! வருந்தற்கவென்று அவள் சிரமிசைக் கரம் வைக்க, உடனே அவள் கூந்தல் பண்டையை வளர்ச்சியும் நீண்டு செழித்து வளர்ந்தது. அதுகண்ட மாத்திரமே பாலை நிலத்தில் மேகத்தின் வருகை நோக்கிய மயில் போலவும், நாடோறும் பசியால் வருந்தி ஒருநாள் விசேடமுண்ண நேர்ந்த ஒரு வறியவன்போலவும், செய்யுளில் அரிய நுண்பொருள் கண்டறிந்த புலவன் போலவும், அவள் சந்தோஷ சாகரத்தி லழுந்தி, சங்கமர் பால் விடை பெற்று அரசன் அவைக்கள் * நண்ண, அதிபன் வெகுண்டு இதுகாறும் இவள் கூந்தலை மழுக்கவில்லையா? எனக்கூற, பகைஞர் மகுடத்தில் பொருந்தும் பாதமுடைய பார்த்திபனே! உன் கட்டளை ஒருகணமேனுங் கடக்கப்படுமோ? யான் பூர்வம் புரிந்த புண்யத் தவப்பயனால் இப்போது என்வீட்டில் வசிக்குஞ் சிவபக்தர் அருளுடன் தமது கரத்தைச் சிரத்திலிருத்த கரிய கூந்தல் பெருகலுற்றது எனக்கூறினள். அரசன் அதிசயமும் அன்பும் அதிகரித்தி அநேகர் அருகேசூழ அவள் வீடடைந்து அங்கிருந்த அடியவர் அடிகளில்



சிவபிரான்.



யாதவ மகாராஜன்.

* நண்ண — எ-து — அடைய.

அஷ்டாங்க பஞ்சாங்கமாகப் பணிந்து எதிர் நின்று, யான் செய்த பெருந்தவத்தால் தேவரீரை இங்கெய்தப் பெற்றேன் தேவரீரிருக்கும்படி தவம்புரிந்த நாடு யாது? தேவரீர் எவ்விடத்திற்குப் போவது? என வினவினர்.

---

## யாதவ மன்னனுக்கு
## விடசங்கமர் சீகாளத்தியின் சிறப்புரைத்தல்.

இவ்வாறு வினவிய மன்னனை விடசங்கமர் அருள் விழியால் நோக்கி நாம் உலக முழுதுஞ் சஞ்சரித்து சிவ ஸ்தலங்களில் வசிப்போம். தென் கைலாயமெனுந் தலஞ் சிறந்ததெனப் பலருஞ் சொல்லக்கேட்டு இங்குவந்தோம். இவ்விடத்தில் பரமேசுவரனுக்கு ஓராலயமுமில்லாமை நோக்கி, மனம் வருந்தி, நெருப்பிற் பற்ற புழிவானேம், சர்வலோக நாயகனுன உனக்குக் கோயிலெடுப்பவர் ஒருவருமிலரோ சங்காரவென்று அவன் திருவடிகளை ஸ்மரித்து இந்நிலைமை யுண்பாற் சொல்ல வந்தோம். நீயே யதனைச் செய்து முடிக்கவெனக்கூற யாதவ மகாராசன் பொருள்களி * துளும்பினவனுய், தேவரீர் அடியேனைத் திருந்தும்படி திருவாய் மலர்ந்தருளியதால், அச்சொல்வழி நிற்றலே நன்று. ஆயினும் அத்தென் கைலாயத்தின் சிறப்புகளையெல்லாம் சிறியேன் தெரியும்படி நன்குபதேசிக்க வேண்டுமென வேண்ட, அரசனே! அத்தென் கைலாயச் சிறப்பினைக் கேட்க அவாவினையாயின் நாம் சொல்லுவோம் கேட்பாயாக. வசிட்டன், அகத்தியன், பிரமன், சிலந்தி பாம்பு, யானை, வேடன், சிவகோசன், நக்கீரன், கன்னியர் முதலிய கணக்கிலாதவர் அங்கு நற்கதி பெற்றுளர். அவர் சரிதை யெல்லாம் ஆதியந்தமாகச் சொல்லப் புகுந்தால் அநேக யுகங்கள் செல்லும். அவற்றுட் சிலவற்றைச் சொல்லுகின்றேமென்று, விடசங்கம வடிவமாக எழுந்தருளிய சிவபெருமான் நாராயணபுரத்திலே யாதவ மகாராசனுக்குச் சொல்லினர். அவ்விதமாகவே யானும் தீவினை விலகிய புண்ணியர் ஏற்றுக் கொள்வார்களென்று கருதிச் சொல்லத் தொடங்கினேன்.

விடசங்கமச் சருக்க முற்றிற்று.

---

* துளும்பி — எ-து — எழும்பி (அல்லது) மேற்கொண்டு.

உ

சிவமயம்.

# தென் கைலாயச் சருக்கம்.

## வசிட்டர் ஐந்தலை நாகலிங்கத்தை பூசித்து பேறு பெருதல்.

---

கலி விருத்தம்

ஆதி யாக வலவிள ருண்டவண்
மீது தீர்ந்தவ ரவ்வத் திருக்கதை
யோத வேண்டி லுகம்பல செல்லுமக்
கதை யுட்சில காவல கூறுவோம்.

அறுசீர்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

திங்களங் கண்ணி வேய்ந்த செஞ்சடைக் கருமி டற்றுச்
சங்கரன் றேவர் தம்முட் டலைவனு மாறு போல
வங்கண்மா ஞாலத் தண்ண லரும்பெறல் வீட விப்பத்
தங்கிய தலங்க டம்முண் காளத்தி தலைமத் தாமால்.

சிவபெருமான் எல்லாத் தேவர்களுக்குந் தலைவராக இலகுவது போல, தென் கைலாயமாகிய காளத்தி நகரம் முத்தி நகரங்களெல்லாவற்றுக்குந் தலைமையானது அது மோட்சமெனப்படுந் திருமகள் வசித்ததற்குறிய கமலர் போன்றது. அங்குள்ள ஊர்வன, நடப்பன, தத்துவன, பறப்பன, நீர்வாழ்வனவாகிய யாவும் சிவகணங்கள். ஜலாசய முழுவதும் ஆகாயகங்கை அதுவே பூலோக சிவலோகம் அந்தக் காளத்தியெனும் பெயர்கொண்ட வொருவனை கூப்பிடும்போது அப்பெயரைச் சொல்வோனும், அவ்வோசையைக் கேட்போனும் சூரியனெதிர்ப்பட்ட பனியைப் போலப் பாவத்தே யொழிவ தென்றால் அதன் பெருமை சொல்லமுடியுமா? ஆயினும் வசிட்ட முனிவர் நற்கதியடைந்த சரித்திரத்தைச் சொல்லுவேன் கேட்பாயாக.

பூர்வம் சில யுகங்களின் முன்னர் சூரிய மாபிலுதித்த மித்திர சகனெனு மன்னவன் வேட்டமேற்கொண்டு வனமடைந்தபோது தன்னை எதிர்த்த அரக்கனொருவனைக் கொன்று, வேட்டை முடித்து நகர் சார, அவன்றம்பி தன்றமையனைக் கொன்ற பழிவாங்கக் கருதிப் பரிசாரக வேட மேற்று மன்னனை யடைந்து தொழில் புரிந்திருப்ப, அக்காலத்தில் வசிட்டர் விருந்தினராகச்செல்ல அப்பரிசாரகன் நர

மாமிசத்தைப் பாகஞ்செய்து முனிவர்க்குப் படைக்க, முனிவர் வெகுண்டு சபிக்க, உதிரனெனும் பெயர்கொண்ட அரக்கனாகி வனத்தில் அலைந்துக்கொண்டிருந்தான், விசுவாமித்திரருக்கும், வசிட்டருக்கும் உள்ள பகைமையால், விசுவாமித்திரர் அந்த உதிரனை யனுகி வசிட்ட புத்திரராகிய, சத்தி முதலிய நூற்றுவரையும் மடிக்கும்படி கட்டளையிட உதிரனெனு மரக்கன் அப்படியே அவர்களை முற்றுங் கொன்றனன். அதனால் வசிட்டமுனிவர் புத்திர சோக மேலிட்டு, தாமிறக்கக் கருதி உயர்ந்த மலைச் சிகரத்திலேறி அங்கிருந்து உருண்டனர். அப்படி விழுகையில், பூமிதேவியானவள் நூற்கேள்விகளாலும் தவத்தாலும், மிகுந்த அவருடல் ஒரு சிறிதும் வருந்தாவண்ணம் திருக்கையாற் றாங்கிக்கொண்டு, தபோ மகிமையுடைய வசிட்ட முனிவரே உமக்கு இது தகுதியாமோ நீர் மலைமிசையிலிருந்து நிலத்திலுருண்டால் உமது துன்பம் விலகுமா? பரமேசுவரனை நோக்கித் தவஞ் செய்வீராகில் உமது துன்ப மகல்வதன்றி முத்தியும் பெருவீரென்று கூற, அதுகேட்ட வசிஷ்டமுனிவர் துக்கமகன்று, அதுவே நன்றெனக்கூறிப் புண்ணிய தலங்களிலுமேம்பட்ட இந்தக் கயாரணிய க்ஷேத்திரமடைந்து சிறந்தவிடத்தில் மனமொடுங்கிப் பஞ்சேந்திரியங்களையுமடக்கி உணவாதிகளை யொழித்து கொன்றை மாலையணிந்த சிவபெருமானை இதய தாமரையிலிருத்தி, நெருப்பு, வெய்யில், மழை குளிர், பனி, காற்று, மிருக முதலியவற்றினா லுண்டாகுந் துயரத்தையுங் கருதாது பசி தாக நித்திரைகளின்றி நெடுங்காலம் அருமையாகிய தவத்தைச் செய்தனர்.


பரசிவலிங்கமூர்த்தி.


வசிட்ட முனிவர்.

இவ்வகையாகத் தவம்புரியும் வசிட்ட முனிவருக்குத் திருவருள் புரியவேண்டி, பரமசிவன் தனிமையாக, ஐந்தலை யரவ வுருவத்தோடு பரசிவலிங்க மூர்த்தியாய் மேற்குத் திருமுகமாய்த் தரிசனந் தந்தருள, வசிட்ட முனிவர் கண்டு மன நடுங்கி மயிர்க்கூச் செரிந்து அடியற்ற மரம்போல நிலமிசை விழுந்து, சிவபெருமான் ஏழுகவே

னத் திருவாய்மலர்ந்தருள மெழுந்து, உஞ்சிற் கூப்பிய கையராய் அருவியாறுபோல ஆனந்தபாஷ்பஞ் சொரியுங் கண்ணராய், நெருப்பிலிட்ட மெழுகுபோலுருகிய மனத்தராய், குழறிய மொழியராய், கொன்றைமாலை யணிந்த சடை முடியும் திரிநேத்திரமு முடைய சிவபெருமானைத் தோத்திரஞ் செய்வாராயினர். இவ்வுலகத்தில் தேவரீரோடு உடனெண்ணக்கிடந்த பிரம விஷ்ணுக்களாலும் அறியப்படாத நீர், பிறவியாகிய பெருங்கடலில் வீழ்ந்து வருந்தி, அறிவு மயங்கித் திரியும் அறிதற்கெளிதானவரோ? தவசிகள் மனத்திற் றங்குபவரோ! எல்லாக் கலைகட்கும் ஆதியாகிய வேதங்களாலும் புகழ்தற்கரிய தேவரீர் நூற்கல்வி யின்மையும் அறிவின்மையுமுடைய அடியேனது அற்ப இழிதகைமையுடைய சொற்களால் புகழத்தக்கவரோ? கைலாயமலை வாசியே! சரீர வாஞ்சை முதலியன நீங்கி ஐம்புலன்களையும் வெறுத்து மனமிறந்து அருந்தவம் புரிந்தவர்க்கும் தேவரீர் அடைதற்கரியராயிருந்தால், பரந்த ஆசைக்கடலில் செலுத்தும் பஞ்சேந்திரியங்கட்கு அடிமைபுரியும் என்னுற் றொடர்ந்து அடைதற் கெளியவராவீரோ? என்றிவ்வகையாகத் துதித்தார்.

அதனுல், அகமகிழ்ந்த அரவாபரணர் நீ கருதிய வரமியாது? அதனைக் கேட்பின் அங்ஙனமே யருள் புரிவோமென, வசிட்ட முனிவர் மனமகிழ்வுடன், பத்தியென்பதே ஒரு சிறிதுமில்லாத கன்மனத்தனுகிய என் விடயத்தில் பேரருள்கொண்டு காட்சிதந்த இந்தச் சிவலிங்கத் திருமேனியுடன் எக்காலத்தும் தேவரீர் இந்த க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருந்து பலர்க்கும் இஷ்ட சித்திகளை யளித்தருள வேண்டினேன். அதுவுமன்றி, தேவரீர் அடியேனுக்கு ஞானேபதேசஞ் செய்யவும் விரும்பினேனெனப் பணிய, இறைவர் அவ்வண்ணமே யாகுகவென் றருள்புரிந்து, அங்கோர் கல்லால மர நிழலிலே தக்ஷணுமூர்த்தி வடிவமாய் வீற்றிருந்து வசிட்ட முனிவரை அருகிருத்தி, இயற்கையாகவே வினையினின்று விலகி விளங்கிய ஞானமாய், பரமானந்த வெள்ளமாய், தம்மை யறிந்தவர்களுக்கு அபேதமாய், பூவில் மணம்போல உலகமுழுதுங் கலந்திருந்தாலும் அவற்றிற்கு வேறாய், ஜீவான்மாக்கட்கெல்லாம் பரவான்மாவாய், சர்வஞான மயமாய், வேதப்பொருள் கடந்த சோதி மயமாய், மனுதிகளுக் கதீதமாய், உயர்ந்து விளங்கிய தமது தன்மையையும், இச்சா மாத்திரையாகத் தாம் * சகளிகரித்த வடிவத்தையும், சுத்தமாயை முதலிய மூன்றின் இயற்கையும் பிருதிவியாதி தத்துவ விலக்கணங்களையும் முத்தி யிலக்கணத்தையும், அதனைப்பெறும் வகையையும் விளக்கமாகத் திருவாய் மலர்ந்தருள, வசிட்ட முனிவர் அவற்றையெல்லா முணர்ந்து ஞானமுற்று, துன்பத்தை விலக்கித் தோன்றிய பேரின்ப மயமாகி, பிரியா விடைபெற்றுச் சுயேச்சையின் வழிச்சென்றனர். சிவபெருமானும் அத் திருக்கோலத்தோடு அங்கெழுந்தருளி யிருப்பாராயினர்.

* சகளிகரித்த — எ-து — மாயாரூப.

அப்பொழுது உமாதேவியார் பரமேசுவரருடைய பிரிவுக்காற்றாமல் கயாரணிய க்ஷேத்திரமடைந்து ஞானப்பூங்கோதை யென்னுந் திருநாமத்தோடு எழுந்தருளி யிருந்தனர். அதுகண்ட விநாயகக் கடவுள், முருகக்கடவுள், வீரபத்திரக்கடவுள், வைரவக்கடவுளாகிய குமாரர்களும், உருத்திரர்களும், சிவகணங்களும் முதலாகவுள்ள ஏனையோரும், சிவபெருமானும், உமாதேவியாரும் எழுந்தருளியுள்ள கயாரணிய க்ஷேத்திரத்தை யடைந்து பரமேசுவரனுடைய திருவருள் பெற்றவராய் அங்கு வசித்திருந்தனர். வெள்ளிமலையாகிய திருக்கைலாயமானது சிவபெருமான் குடும்பத்துடன் தன்னைப் பிரிந்த வகையைக் கண்டு, பெற்றோரைப் பிரிந்த குழந்தைகள்போலக் கலங்கிய மேருமலையுடன் கயாரணிய க்ஷேத்திரமடையக் கருதி ஆகாய வழியெழும்பி (பூர்வம் கடலினைத் தாவிச்சென்ற வாயு புத்திரரான அநுமந்தனையும், அண்டகடாகத்தையும் பிளக்கும் ஆற்றலுடைய வீரவாகு தேவரையும்போல) அவ்விருமலைகளும் அங்குற்றன. அவற்றுள், திருக்கைலாயமானது சிவபெருமானுக்குக் கிழக்கிலிருந்தது. மேருமலை அதன் வடக்கிலிருந்தது. அது காரணமாக, அன்றுமுதல் அந்தக் கயாரணிய க்ஷேத்திரம் தென் கைலாயமெனும் பெயர்பெற்று விளங்கியது. அந்தத் தென் கைலாயத்தின் சிறப்பு முழுவதுஞ் சொல்லவேண்டுமானால் ஆதிசேஷன் தன் ஆயிரம் வாய்களாலும் ஆயுள்கால முழுதுஞ் சொன்னாலும் முடிவதன்று. பூலோகம்போலத் தெய்வலோகமும் மகாப்பிரளய ஜலத்தில் மூழ்குங் காலத்திலும், அழியாது விளங்குகின்ற அத்திவ்விய க்ஷேத்திரத்திற்குப் பிற தலங்கள் ஒப்பாகுமோ? இத்தென் கைலாயத்தில் நாற்புறத்திலும் ஒவ்வோர் காதத் தெல்லைமட்டுமுள்ள கல், மர முதலிய தாவரங்களும், மக்கள் முதலிய சங்கமங்களும் யாவும் சிவரூபமேயாம். அம்மலையிலிருந்த புலி, யானை, இடபம், ஸர்ப்பம், மான், சிங்கம் முதலிய பிராணிகளும் சிவசாரூபமெய்துமென்று திருவாய்மலர்ந்தருளிய விடசங்கம வடிவாகநின்ற சிவபெருமானை நோக்கி, யாதவ மகாராஜன் மற்றொரு சரிதையைச் சொல்லவேண்டுமெனக் கேட்க பொன்முகரி நதியின் விர்த்தாந்தங்களைச் சொல்லத் தொடங்கினர்.

தென் கைலாயச் சருக்கம் முற்றிற்று.

உ

சிவமயம்.

# பொன்முகரிச் சருக்கம்.



பிரமதேவர் அகஸ்திய முனிவருக்கு பொன்முகரி புண்ணிய நதியை அருளல்.

### கலி விருத்தம்

ஆதியங் கயிலையி னடைவு கூறினாந்
தீதில்பொன் முகரியின் செய்தி கூறுதும்
யாதவ மன்னமர்ந் தினிது கேளென
மாதவ வடிவருள் வள்ளல் கூறுவான்.

---

### அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

(குளகம்)

மாநிலஞ் செம்மைத் தாக மாதவ நீதெற் கேகி
மேனிமிர் மலய வெற்பின் மேவுதல் வேண்டு மன்றே
ஞானவில் புலவ நாமே நொடிசெலத் தக்க தென்றான்
வானுயர் புகழி னானும் வணங்கிவாய் புதைத்து நின்று.

திருமறு வணிந்த மார்பன் றிசைமுகன் முதலோர் நிற்பக்
கருணையங் கடலே நாயிற் கடையனேன் றன்பால் வைத்த
வருளினாற் பணித்த வேவ லாற்றுவ லருளி னென்று
விரைமல ரடியிற் றாழ்ந்து விடைபொறீஇ விரைந்து சென்றான்

முன்னொரு காலத்தில் நீலகண்டராகிய பரமசிவன் இமாசலத்தி லே மலையரசன் புதல்வியா யுதித்த உமாதேவியாரை மணஞ் செய்துக் கொள்ள வெழுந்தருளியபோது கருடர், காந்தருவர், வித்தியாதரர், இராக்கதர், சித்தர், தாபர், அசுரர், கிம்புருடர், கின்னரர், யக்ஷர், பூதர், வேதாளர், தேவர், அந்தரர், உரகர், தைத்தியர், ஆகாய வாசிகள், போகபூமியுள்ளார் முதலினோர்களுடன் காலாக்கினி ருத்திரர், கூஷ்மாண்டர், ஆடகேசர், தாரகேசர், வைரவர், வீரபத்திரர், ஐயனார் சதருத்திரர், ஏகாதசி யுருத்திரர், புத்தியட்டகர், அட்டமூர்த்திகள், குண்டோதர், கும்போதர், சங்குகன்னர் முதலிய கணத்தலைவர்கள், பிரம்ம, விஷ்ணுக்கள், இந்திராதியர், திக்குப்பாலகர், அகஸ்தியர், காசிபர், கௌதமர், பாரத்துவாசர், வசிட்டர், விசுவாமித்திரர் முதலிய முனிவர்கள், திருநந்திதேவர் முதலிய பரிசனங்கள் புடைசூழ்ந்து வரவும், விநாயகக்கடவுள் பூதகணங்களோடு முன்செல்லவும், இறைவர் இடபவாகன மூர்ந்து சர்வ மங்களங்களோடும், வாத்திய கோஷத்தோடும் இமாசலமடைய, பர்வதராசன் எதிர்கொண்டு பணிந்து, மாளிகையினுட் கொணர, சிவபெருமான் அவரவர் கேற்ற ஆசனத்தி லிருக்கச்செய்து, தாமும் உயர்ந்த இரத்தின சகிதமான சிங்காதனத்தில் வீற்றிருந்தருளினர். தெய்வத் தொகுதி முழுவதும் அங்கே ஒன்றுறச் சேர்ந்தபடியால், பூமியானது தென்முனை யுயர்ந்து வடமுனை தாழ்ந்ததாயிற்று. அதனை நீக்க வேண்டுமென்று கிருபா மூர்த்தியாகிய சிவபெருமான் கும்பயோனியாகிய அகஸ்திய முனிவரை யருகழைத்து, அகஸ்திய முனிவனே! இப்பூமி சமநிலையெய்தும்படி நீ தென்றிசை சென்று உயர்ந்த பொதிய மலையில் வாழ்ந்திருப்பாயாக அல்லாவிடில், நாமே விரைவில் அங்குச் செல்லவேண்டுமெனத் திருவாய் மலர்ந்தருள, அகஸ்திய முனிவர் பணிந்து, வாய் பொத்தி நின்று, கடவுளே! திருமால் பிரமன் முதலினோ ரிருக்கவும், நாயிற்கடைப் பட்டேனாகிய என்னை யொரு பொருளாக மதித்துத் திருவுளங் கனிந்தளித்த கட்டளையைத் திருவருளின்படி நிறைவேற்றுவேனென்று பாதங்களிற் பணிந்து விடை பெற்று, தம்மனைவி, உலோபா முத்திரையாருடன் புறப்பட்டு, கேதார மலையைக் கடந்து கங்கையாறு சூழந்த காசியைத் தரிசித்து, விரூபாக்ஷம், தாக்ஷாராமபுரம், நந்திகிரி முதலிய தலங்களைப் பணிந்துக்கொண்டு தென்றிசை நோக்கி வருகையில் தென் கைலமலையைக் காணவும் பணிந்து நமஸ்கரித்து ஆநந்தக் கண்ணீர் சொரிய உடல் மயிர் கூச்செறியத் துதி செய்துக்கொண்டு, அருந்ததிபோலுங் கற்பினை வாய்ந்த உலோபா முத்திரையாருடன் அந்த க்ஷேத்திர மகிமையைச் சொல்லிக்கொண்

டே உள்ளே பிரவேசித்து, தாய்ப் பசுவின்பாற் செல்லுகின்ற இளங்
கன்றுபோல நாகலிங்கப் பெருமான் றிருமுன்னரெய்தி மனம் நெக்
குறுகவும், கண்கள் இடையறாது நீர் பெருகவும், உச்சியில் கைகளைக்
குவித்தும், அந்தக்கரண புறக்கரணங்களை யொடுக்கியும், நெடுநேரம்
உடல் தம்பித்து நின்றும், பின்னர் அவர் நீங்கிப் பலவாறு துதிசெய்
தும், அங்கிருந்து அரிதில் நீங்கிக் கல்லாலின் கீழ் எழுந்தருளிய
தக்ஷிணாமூர்த்தியைத் தாழ்ந்து, துதித்து, ஐஞ்சந்தி விநாயகரைப்
பணிந்து, இளைய பிள்ளையாராகிய முருகவேளை நமஸ்கரித்து, சர்வ
லோக மாதாவாகிய ஞானப்பூங் கோதையாரைப் பிரதக்ஷிணம் வந்து
துதிசெய்து பணிந்து அரிதில் அங்கு நின்றகன்று, துர்க்கை மலையி
லேறி அத்துர்க்கா தேவியையும் நமஸ்கரித்து, அங்குள்ள பல அதி
சயங்களையுங் கண்டு அவ்விடத்தில் ஒரு புனிதமான நதி யில்லாமை
யைக் கண்டு, இங்கதனை யுளதாகச் செய்ய வேண்டுமென்று கருதி,
பஞ்சேந்திரியங்களையும் அடக்கி யருந்தவஞ்செய்து ஆங்கு வசிக்கும்
முனிவர்களிடஞ்சென்று ஐபன்மீர்! இங்கோர் புனித நதி உண்டாக்க
வெனக்கு அநுக்கிரகம் புரிவீராகவென்று வேண்டிக்கொண்டு அந்தத்
தென் கைலாயத்தை யகன்று, அதற்கு நான்கு யோசனை தூரத்தில்
நிருதி திசையில் ஒரு மலையிலேறிச் சிவபெருமானிடத்தில் மனதைப்
பதித்துப் பஞ்சேந்திரியங்களையு மொடுக்கி, உடலிளைக்கப் பட்டினி
யிருந்து உலோபா முத்திரையார் பணிசெய்ய அரிய தவஞ்செய்தனர்
வேனிற்கால முழுவதும் பஞ்சாக்கினி மத்தியி னின்றும், மழைக்கா
லத்திலும், பனி காலத்திலும், வாயளவு ஜலத்தி லிருந்தும் அருந்
தவம் புரிவதுகண்ட இந்திரன் முதலிய தேவர்கள், இம்முனிவர்
கருத்தெதுவோமென மயங்கிப் பிரமதேவனை யடைந்து கூற, பிரம
தேவர் அத்தேவர்களோடுங் கைலாயகிரியை நோக்கிச்சென்று, திரு
நந்திதேவர் விடைபெற்றுச் சந்நிதி யடைந்து சிவபெருமானைப் பணி
ந்து நமஸ்கரித்து வேத வாக்கியங்களால் துதிசெய்து நிற்க, அவர்
களில் பிரமதேவர் ஐபனே! அகஸ்திய முனிவர் யாது கருதியோ
கடுந்தவம் வெகு காலமாகப் புரிகின்றனர். அவர்க் கருள்புரிவீராக
வென்றனர். சிவபெருமான் இவ்வாறு விண்ணப்பஞ் செய்த பிரம
தேவனுக்குச் சொல்லுகின்றார், அகஸ்தியன் மற்றொன்றும் வேண்
டினானில்லை நம்முடைய தென் கைலாயத்திற்கு தீர்த்தமாக ஒரு நதி
யை விரும்பித் தவஞ் செய்கின்றான். அவனுக்காகத் தெய்வ கங்
கையை விடும்போம். நீ அவனிடஞ் சென்று கண் களிக்கும்படி
யிருந்து விரும்பிய வகையே அதனைக் கொடுப்பாயாகவெனத் திரு
வாய் மலர்ந்தருளவும், யாவரும் களிகூர்ந்து திரும்பினர். பிரமதேவர்
அன்னவாகனத்தி லாரோகணித்துத் தென் கைலைபடைந்து அகஸ்
திய முனிவர் முன்னின்று தரிசனந் தரவும், முனிவரெழுந்து வணங்
கிப் பணிய, பிரமதேவர் நீ விரும்பிய தென்னவெனக் கேட்க, அகஸ்
திய முனிவர் இங்கே ஒரு நதி வேண்டினே னெனக் கூற பிரமதேவர்

ஆகாயத்தை நோக்க, அம்மலையின்மேல் கங்கையே ஒரு நதியாய் இறங்க அகஸ்திய முனிவர் கண்டு மலடாயிருந்தவள் வெகு காலந் தவமிருந்து பெற்ற பிள்ளைபோலப் பெருங்களி யெய்தினர். அப்பொழுது அந்நதி பொன் னிறத்தோடும் ஓசையோடும் வந்தபடியால், பிரமதேவர் அதற்குப் பொன்முகரியெனப் பெயர் தந்து அந்தர்த் தானமாயினர்.

அந்த நதியானது மலையைப் பிளந்துக்கொண்டு அதில் தேக்கு, சந்தனம், வாழை, மூங்கில், வேங்கை, பலா, சண்பகம், பனை, முதலிய மரங்களைப் பெயர்த்துக் கொண்டு, கொலைத் தொழில் புரியுந் துஷ்ட மிருகங்களைத் திரளாகக் கொன்று பலரத்தினங்களையும் அவற்றோடு வாரிக்கொண்டு ஓசைமயமாகி, அகஸ்தியமுனிவர் தவஞ் செய்த காரணத்தால் அகஸ்திய மலையெனும் பெயர்பெற்ற அம்மலையை விட்டிழிந்து, திருவேங்கடம் காசி ராமேசுவரமெனுந் தலங்கட் கருகே சென்று, சீகாளத்தியாகிய தென் கைலாயத்திற்கு ஓராரம் போல் அக்கினி திசையிற்றிரும்பி ஒங்காரேசுவரமெனுந் தலத்தைச் சமீபித்துச் சமுத்திர சங்கம மாயிற்று. அதுகண்டு களிப்பு மிகுந்த அகஸ்திய முனிவர் அம்மலையின் றிறங்கி அந்நதிக்கரையில் அநேக சிவலிங்கங்களைத் தாபித்து அன்போடு அர்ச்சனை செய்தனர் தன் மனைவியாரோடு அந்நதியில் மூழ்கிச் சிவத்தியானஞ் செய்துக்கொண்டிருந்து பின்னர் ஒரு மலையில் வீற்றிருந்த அகஸ்திய முனிவரிடம் அங்கிருந்த பல முனிவர்களும் வந்து இவ்வாறு துதிசெய்தார்கள்.

மஹா புண்ணியராகிய அகஸ்திய முனிவரே! தேவரீர் பஞ்சாக்கினி மத்தியிலிருந்து அருந்தவஞ்செய்து, பிறவி நோயை யழிக்கத் தக்க மருந்தாகிய இந்நதியைத் தருவித்தலால் யாங்களெல்லாம் உஜ்ஜீவித்தோம் தேவரீர் திருவருளுக்கு ஓரளவுண்டோ. பூர்வம் சூரிய சந்திரர்களை ஆகாயவழியிற் செல்லவொட்டாது தடுத்த விந்த மலையை ஒருகழற் சிக்காய்போலத் தேவரீர் உள்ளங்கையா லழுத்திப் பாதாளத்திறக்கினீர் அலைகள்பொருந்திய பெருங்கடலை அதில் ஒளித்துக்கொண்ட விருத்தி ராசுரனைக் கண்டுபிடிக்கும்படி இந்திரன் வேண்டிக்கொள்ள அவ்வேண்டுகோளுக்கிணங்கி, ஒ ருமுழுந்தளவு ஜலமாகச் சேவிக்கச்செய்து உள்ளங்கையிலேற்று ஆசமனஞ் செய்தருளினீர். தேவரீர் பிரபாவங்களை அடியேங்கள் அளவிட்டுச் சொல்ல வல்லமையுடையோமா? சர்வலோக நாயகனான பரமேசுவரன் தனக்கும் தன் கணுதிபர்கட்கும் மற்றனைவர்க்கும் தேவரீர் ஒருவரே சமானரென்று இவ்வுலகினை நிலைபெறச் செய்தலென்னுந் தொழிலைக் கட்டளை செய்தானென்றால், தேவரீரது மகிமாவிசேடங்கள் அளவிடப் பாலனவோ கனவிலுந் தேவரீரை யன்றிப் பிறரைப் பணியாது தேவரீர் கருத்தின் வழி யொழுகும் இந்த வொப்பில்லாத கற்பின் விக்கிரகமாகிய உலோபா முத்திரையை மனைவியாகப் பெற்ற சிறப்பினை வாய்ந்தவரே?

இல்லறமென்பது தேவரீரையன்றி வேறொன்றுளதோ. இதுவரையில்
யாங்கள் இந்தத் தென் கைலாயத்தில் வசித்திருந்த புண்ணிய மிகுதி
யால் தேவரீருடைய பாதங்களைத் தரிசிக்கப் பெற்றோம். மாநட
யாக்கை யெடுத்ததனாலாகிய பெரும் பிரயோசனத்தை யடைந்தோ
மென்று பலவாறு துதித்த முனிவர்களை நோக்கி அகஸ்திய முனிவர்
அவர்களைப் புகழ்ந்து தோத்திரமான வார்த்தைகள் பின்வருமாறு
சில சொல்லினர்.

வேதத்தின் முடிவில் விளங்கும் பொருளை நிச்சயித்தறிந்த நல்ல
ஞான முடையவர்களே! தங்கள் திருவருளினாலல்லவா பெறுதற்
கரிய இந்த நதியைப்பெற்றது அல்லாவிடில் இதனை யடியேன் பெறுந்
திறமையும் உடையேனோ தேவரீர் இக்காரியம் செய்தற்கு எளிய
தேயாயினும், தேவரீர்களை யடைந்து யானும் மேம்பட்டவனாயி
னேன். அழகிய கொன்றைமாலை யணிந்த சடா முடியை யுடைய சிவ
பெருமானை தெய்வமென்று தென்கைலாயத்தில் வாழ்ந்து விளங்
கும் பாக்கியமுற்ற சடைமுடி தரித்த பெரியோர்களே! உங்கள் சிற
ப்புகள் பலயுகங்களாகப் புகழ்ந்தாலும் முடிவு பெறுமோவென்று,
இத்தகைய வார்த்தைகளால் அவர்களைச் சந்தோஷிப்பித்து, இந்தச்
சிறந்த பொன்முகரி நதியில் மூழ்கினவர்கள் பரிசுத்தமான மோட்
சத்தை யடைவார்கள். சிறந்த சிவபெருமானுடைய திருவருட்பெ
ருக்கமே இந்நதியன்றுரைக்கத் தக்கது. கோவத்தை கர்ப்ப ஸ்திரீ
வதை, சிசுவதை, முதலிய கொலைத்தொழில் புரிந்த பாவிகளாயினும்
இந்நதியிற் படிந்தவர்கள் தேவராவார்கள். இதில் மூழ்கிய அன்னம்
கருடன் முதலிய பறவைகள் வாகனமாகப் பெறும் உயர்பதவிகளை
யடையும். இதில் வசிக்கும் மீன்கள் ஆகாயத்திலுள்ள விண்மீன்
நக்ஷத்திரங்களாக விளங்கும். இத்தகைச் சிறப்புவாய்ந்த தீர்த்தத்
தில் எக்காலமும் தோயும்படியான பெரும்பாக்கியத்தைத் தாங்கள்
பெற்றுள்ளீர்கள். அப்புண்ணியத்தை யடியேன் அடைந்திலேன்
எனக்கூறி அவர்கள் பால்விடை பெற்றுக் கொண்டு அகஸ்திய முனி
வர் மனைவியாரோடு தமிழ்வலம் பெருகிய பொதிய மலையை யடைந்
தனர்.

யாதவமகாராசனே! இவ்வுலகிலுள்ள தெய்வ தலங்களிற் சிறந்த
கயாரணியத்தில் விளங்கும் பொன்முகரியானது எல்லா நதிகளிலுஞ்
சிறந்தது. தத்துவாதீனன சிவபெருமானுக்குச் சமானமான அகஸ்
திய முனிவரே வெகுகாலந் தவஞ் செய்து அத்தலப் பலனாகப்
பெற்ற இந்தப் பொன்முகரியோடு, ஓராசனாகிய பகிரதன் கடுந்தவஞ்
செய்து நிலவுலகிற்குக் கொண்டுவந்த கங்காநதி சமானமாகுமோ?
மேற்கடல் மடைதிறந்து ஒருவழிக்கொண்டு கீழ்க்கடலிற் புகவெழுந்
தார்போலும் வருகின்ற இப்பொன்முகரியானது பகீரதன் கொணர்ந்
தமையினால் பாகீரதியெனவும், அது செல்லுகையில் சன்னு முனிவர்
தவச்சாலை யழியுமென்று கருதி அவராற் பானஞ் செய்யப்பட்டு

மீண்டும் தம்மை வேண்டியிருந்த பகீதரனுக்காகச் (சன்னு—செவி) செவி வழியால் விடப்பட்டமையால் சாநவியெனவும் பெயர் பெற்ற கங்கையும் கவேர பர்வத்தில் அகஸ்திய முனிவர் கமண்டல நீரைக் காகங்கவிழ்ப்ப வோடிய காவேரி நதியையும் ஒப்பென்று சொல்வது தகுதியாமோ! இந்நதியோ தன் கட்பட்டிறந்த யானை முதலியவற்றின் உடலையும் கடலிற் செலுத்தி, அவற்றின் உயிரையும் வெள்ளி மலையாகிய கைலாயத்தில் விரைந்து செலுத்தத் தக்கது இவ்வுலகத்தில் பொன்முகரியில் மூழ்கின்றவராயினும் பல துன்பங்களைத் தரத்தக்க பிறவிப் பெருங்கடலைக் கடந்து முத்திரைக்கரை யேறுவர் என்றிவ் வகையாகப் பொன்முகரியின் சிறப்புகளை யெல்லாம் கரும்பு வில்லோனாகிய மன்மதனை யெரித்த நெற்றிக்கண்ணை மறைத்துவந்த சிவபெருமானாகிய சங்கமர், சத்துருக்களை வெல்லத்தக்க யாதவமன்னனுக்குக் கூறி, இதுவேயல்லாமல் இன்னுஞ் சில தீர்த்தங்கள் அங்குள்ளனவென மேலுங் கூறலாயினர்.

அரசனே! இருவினைகளையு மொழிக்கத்தக்க இந்திரதீர்த்தம், பாவியாகிய பாம்பைக் கொள்ளும் மயூர்தீர்த்தம், பிறவியென்னும் புரத்தைச் சுடத்தக்க உருத்திர தீர்த்தம், யமனை வெல்லச் செய்யும் மார்கண்ட தீர்த்தம், அரகர தீர்த்தம், யாவரும் விரும்பத்தக்க மோகினி தீர்த்தம், அலையெறிகின்ற மகாள தீர்த்தம் இவை முதலாகிய மிகப்புண்ணியகரமான தீர்த்தங்கள் எண்ணில்லாதன உள அவற்றில் மூழ்கினவர்களைத் தேவர் கூட்டங்கள் பணியத்தக்க உயர்பதத்திலிருந்தும், இத்தகைய தீர்த்தங்களில், சூரிய கிரகணம், சந்திர கிரகணம், விதிபாத முதலிய விசேட தினங்களில் ஸ்நானஞ் செய்தவர்கள் பஞ்சாக்கினிக் கிடையில் நெடுங்காலம் * நோற்றும் அடையப் பெறாத உயர்ந்த இன்பத்தை யடைவார்களென்று, பொன்முகரி முதலிய தீர்த்த விசேடங்களைக் கூறி முடிப்ப, யாதவ மன்னன் மனமகிழ்ந்து, சுவாமிகளே! அடியேனுக்கு இன்னுமோர் சரிதையைச் சாற்றியருளவேண்டுமென வேண்ட விடசங்கமர் மிகமகிழ்ந்து, பிரமதேவன் சரிதையைச் சொல்லுகின்றோம். மனமமைந்து கேட்பாயாகவென மேலுஞ் சொல்லத் தொடங்கினர்.

பொன்முகரிச் சருக்கம் முற்றிற்று.

---

* நோற்றும் — எ-து — தவஞ் செய்தும்.



சிவபெருமான் பிரமதேவருக்கு நல்லவரமளித்தல்.

# நான்முகச் சருக்கம்.

## கலிவிருத்தம்.

நீதில்பொன் முகரியின் செய்தி கூறினும்
வேதியன் கதையினி விளம்ப லுற்றனம்
யாதவ மன்னமர்ந் தினிது கேளென
மாதவ வடிதருள் வள்ளல் கூறுவான்.

எந்தை நீபணித் தாங்கவர் யாரையு
நந்து வித்தன னென்னவந் நான்முகன்
மைந்தர் மாண்ட துயரான் மனங்கொதித்
துந்து சீற்றத்தி னுக்கிரற் பார்த்தனன்.

பார்த்த காலைப் பரிதிவே லுக்கிரன்
போர்த்த நால்வாய்ப் பொருகளிற் றீருரித்
தீர்த்த வார்சடைச் செம்மல் விழித்தகாட்
பூத்த வைங்கணை யானெனப் பொன்றினான்.

பொன்றல் கண்டவன் புத்திரர் யாரையுங்
கொன்று நின்ற கொடுமையு மன்றியின்
நின்ற மைந்தனை யும்முயிர் நீக்கினே
னென்று நெஞ்சத் தெழுந்துய ரெய்தினான்.

எல்லா வுலகங்களையும் படைத்த பிரமதேவர் ஒரு பகற்காலத்தில் சத்திய லோகத்திலே ஒளிசொரியும் செம்பொன் மாளிகையில் மலர்ந்த ஆயிரவிதழ்களையுடைய தாமரைத் * தவிசில் நாரதர் முதலிய மகரிஷிகள் சூழவும், இந்திரன் முதலிய தேவர்கள் இருபுரத்திலுங் கைகட்டி வரிசையாய் நிற்கவும், அழகிய யக்ஷர், விஞ்சையர் துவாதசாதித்தர், ஏகாதச ருத்திரர், அஷ்டவசுக்கள் இரண்டு மருத்துவரெனும் முப்பத்து முக்கோடி தேவர்கள், உரகர், சித்தர், கின்னரர் முதலினோர் நெருங்கி நிற்கவும், காந்தர்வ சிரேஷ்டர்கள் வீணாகானஞ் செய்யவும் அழகிய அப்சரசுகள் தாமரை போன்ற கைகளால் சாமரை † யிரட்டவும், பொற்பிரம்பைக் கையிற் பிடித்தவர்கள் முன்னிருந்து இவர்கள் இன்னாரின்னாரென்று குறிப்பிட்டுக் காட்டவும், பணிவோரைக் கண்டு அவர்களுக்குத் தக்கபடி திருவருள் புரிந்து நான்கு சிரங்களும் நான்கு மகமேருபோல விளங்கவும் சிறந்த அரசு வீற்றிருந்தனர்.

அவ்வமயத்தில் திருப்பாற் கடலிலுதித்த தேவாமிர்தமும் சந்திரனிடத்திலுதித்த அமுதகிரணமுங் கலந்து குற்றமில்லாத வடிவெடுத்தாற் போன்ற அழகு மிகுந்தொழுகிய திருமேனியையும் கொவ்வைக்கனிபோன்ற வாயையும் ஒளிதங்கிய விழியையும் குவிந்த குசங்களையு முடைய கலைமகள் சிறந்த ஆடையாபரணா லங்கிருதையாய், அநேக அரம்பாஸ்திரிகள் புடை சூழக் கணவன்பால் வந்து அவரோடு தாமரைப் பீடத்தில் ‡ (ஏகாசனத்தில்) இருந்தனள். பிரமதேவர் தம் மயலிலிருந்த மனைவியின் அவயவலங்காரங்களைக் கண்ணுரக்கண்டு உண்ணிகழ்ந்த அடங்காக் காதலைக்கொண்டுக் காமக்கடலின் மூழ்கி, அங்கு வந்திருந்தவர்களை யெல்லாம் அதிவிரைவில் ஒருங்குசேர விடை தந்தனுப்பி, கரிய கூந்தலையும் வெள்ளிய சரீரத்தையுமுடைய கலைமகளுக்கு ஒன்று சொல்லுகின்றார் எனது நாவின் கண் விளங்கும் அமுதம் போன்றவளே! உன்மேலுண்டாகிய பெரும் விருப்பத்தைத் தீர்ப்பதற்கு உன்னுடைய ஒருவடிவமே போதாது. உயிரோடு கூடிய சித்திரப் பதுமைபோல்வாளே! கொவ்வைக்கனி போன்ற இதழையும் அன்னத்தைப்போன்ற நடையையும் உடையாளே! என்கண்மணியிலுள்ள பாவை நிகர்த்தவளே! அழகிய தனங்களையுடைய மயிலின் சாயலை யுடையாளே! நூறு என்னுந் தொகையாகிய வடிவங்களை யெடுக்கக் கடவா யென்றனர். உடனே சரஸ்வதி, தன் கணவன் விரும்பிய படியே தாமரை மலர் போன்ற முகமும் மாந்தளிர் மேனியும், பொன் மலையனைய தனமும், அரிபடர்ந்த விழியும் மேகநிகர்த்த கூந்தலும் அழகிய மேகலையுமுடைய நூறு

---

* தவிசில்—எ-து—ஆசனத்தில்.

† இரட்டவும்—எ-து—வீசவும்.

‡ ஏகாசனம்—எ-து—ஒரே ஆசனம்.

மாதர் வடிவமெடுத்தனள் பிரமதேவன் பாரதியின் நூறுவடிவங்களையும் தமது எட்டுத் திருவிழிகளாலும் ஆசையடங்கக்கண்டு, எளியவன் பொன்னிரம்பிய குடத்தை ஒருவருமில்லாத விடத்தில் எதிர்ப்பட்டாற் போல மகிழ்ச்சி மிகுந்து, மலர்க்கூந்தல் பொருந்திய மங்கையர் வடிவங்களைத் தனித்தனியே தழுவலாயினர்.

அம்மங்கையரில் ஒவ்வொருத்திபால் லதாவேஷ்டிதம் (கொடி போலச் சுற்றித்தழுவல்) விருக்ஷாதி ரூடம் (மரம்போலேறித் தழுவல்) திலதண்டுலம் (எள்ளும் அரிசியும் போலக் கலத்தல்) க்ஷீரநீரம் (பாலு நீரும் போலச்சேரல்) ஊருப் பிரகூடம் (தொடையால் நெருக்கல்) சுகனேப சிவேஷம் (குறிகள் நெருங்கச்சேரல்) ஸ்தனு லிங்கனம் (கொங்கையழுந் தத்தழுவல்) லாலாடிகாலிங்கனம் (நெற்றி பொருந் தத் தனுவல் (எனப்படும் அஷ்டவகை ஆலிங்கனங்களைச் செய்து, ஒவ்வொருத்தியின் உதடு நெற்றி, விழி, நா, கன்னம், கழுத்து, மார்பு, கைம்மூலம், குசம், அல்குல் முதலிய விடங்களைச் சுவைத்தும், ஒவ்வொருத்தியின் கைம்மூலம் மார்பு, தோள், பிடர், கழுத்து, கன்னம், கொங்கை, அல்குல், வாய், தொடை, விலாப்புறம் ஆகிய பதினோரிடங்களில், அர்த்த சந்திரன் மண்டலம் புலிங்கம், மயூரபதம், முயலடி, உற்பல முதலிய நகக் குறிகள் வைத்தும், மேலே சுவைத்த தானங்களில் நாவிழி, மேலுதடு, நீங்கிய விடங்களில் மூஷகம், அநுச்சூனகம், பிரவாளமணி, பிந்துமணி, பிந்துமாலை முதலிய தந்தகுறிகளமைத்தும், அங்குலியோகம், கரிகர முதலிய அஷ்டதானங்கள் செய்தும், உத்தானிதம், திரியக்கு, ஆசிதகம், ஸ்திதம், ஆனமித மெனப்படு நால்வகைத்தான அறுபத்து நான்குவித லீலைகளாற்றியும், இதனால் அவரில் ஒருவர்க் கொருவர் மேம்பாடு காரணமாக வெழுந்த ஊடலைத் தவிர்த்தும் நூற்றுவரிடத்திலும், மலர்தோருமிருந்து மதுவுண்ணும் வண்டுபோல அரும் பெறலின்ப மநுபவித்தனர். பிரமதேவர் மங்கையர் மயக்கால் காலமும் சமயமுங் கருதாது தம்மைத் தரிசிக்க வந்தோர் பலர்திருவாயிலிற் குழுமி யிருக்கவும் மங்கையர் மையலில் அழுந்தி யிருந்தனர்.

சதுமுகக்கடவுள் இப்படி ஆநந்த மெய்தி யிருக்கையில் வாளுங் கேடகமுந் தாங்கிய கைகளும், செவ்வரி நிறஞ் செறிந்த தலை மயிரும் நெருப்புப் பொறிபறக்கும் கண்ணும் பிறைச்சந்திரன் போன்ற வக்கிர தந்தமும், கோப சொரூபமும், ஆகாய மளாவிய தேகமும், இடி போல வெடிபடு குரலும், கடல் நீர் பருகியெழுந்த கார்மேகம் போன்ற நிறமும், மலைகளையும் பெயர்த்தெரியும் வல்லபமும் வாய்ந்து கண்டோர் அஞ்சத்தக்க முப்பதினாயிரம் அரக்கர்கள் இயமனும் உடல் நடுங்கும்படி ஒன்று சேரப்பிறந்தார்கள். அவ்வரக்கர்கள் உடனே பதுமயோனியின் பதமலரிற்பணிந்து, சப்ததீவுகளையும் பசி தீரவுண்ணலாமா? சப்தசாகரங்களையும் நீர்வறளக்குடிக்கலாமா? மேரு

முதலிய பர்வதங்களை * அநாயாசமாகப் பந்தாடலாமா? நக்ஷத்திரத் தொகுதிகளை யெல்லாம்வாரி வாயிற் பெய்யலாமா? அஷ்டநாகங்கள், அஷ்டகஜங்கள் அஷ்டதிக்பாலர்கள் இவர்களை வெல்லலாமா? விஷ்ணு, அக்கினி இயமன்வருணண், வாயு, குபேரன், ஈசானன் முதலினோரை அடக்கலாமா? எந்தையே! அடியேங்கட்கு ஒருகுற்றே வலைக் கட்டளையிடவேண்டு மெனக்கேட்க, பிரமதேவர் காலமல்லாத காலத்தில் இவ்வனிதையரைக் கலந்தமையின் இத்தகைத் தீயோருதித்தனரெனமனங் கொண்டு, மகாகோப சொரூபிகளாகப் பிறந்த அப்புதல்வரை நோக்கி, நீங்கள் ஆகாயமளாவிய விந்தகிரியில் வசித்திருங்க ளெனக்கூற அவர்கள் ஒன்று சேர ஆண்டடைந்திருந்து இந்திராதி திக்குப்பால கருமெதிர்த்தோட அவர்களாற் கொடுக்கப் பெற்ற கப்பங்களாகிய நவரத்தினங்கள், பொன், யானைகள், குதிரைகள், முதலியவற்றைப் பெற்றுக் சுகித்து வாழ்ந்திருந்தார்கள். அவர்கள் தேவர், யக்ஷர், பூதர், கருடர், கந்தருவர், நாகர், அசுரர், சித்தர், வித்தியாதரர், கின்னரர் முதலினோர் அடிபணிந்து குற்றேவல் கேட்க உலக முழுதும் தடைபடாது கட்டளை செலுத்தி அரசாண்டு, சடைமுடி தரித்த முனிவர் தவத்தை யழித்தும், மாதர் கற்பை விலக்கியும், வேதியர் புரியும் யாகத்தை வேரோடறுத்தும், தேவர் பெருமையைத் தீர்த்தும் வந்தார்கள். அந்தணர்கள் ஒரு கடிகைக்குள் காலைக் கடனைக் கழித்துச் சடைகுலையவோடி அரக்கர் செல்வம் பெருகுக வென்று வாயில் வாழ்த்தித் திரிந்தார்கள். இந்திரன் அரக்கருடைய சமயம் நோக்கி அவர் பாற் சென்று சிவபெருமான் திருவடிப்போலப் பணிந்து நம்பால் என்ன குற்றங் கற்பித்துத் தண்டிப்பார்களோ வெனப்பயந்து மனத்தில் அச்சத் தீச்சுட விருந்தான் தெய்வ நடன மாதர் அவ்வரக்கரிடத்தில் பாடியும் புணர்ந்தும் சிறுவர் கையிலகப் பட்ட மலர் மாலை போலக் கசங்கி வருந்தினர். இவ்வகையாகத் தேவர்களெல்லாம் வருந்த கொடிய அரக்கர் வாழ்க்கையில் வச்சிர பாணியாகிய இந்திரன், ஒருநாள் பிரமதேவர்பாற் சென்று பணிந்து தமக்குற்ற சங்கடங்களை யெல்லாஞ் சாற்ற சதுமுகக்கடவுள் பெரிதுஞ்சினந்தனர். அக்கோபத்தினின்றும் உக்கிரன் என்னும் உக்கிர சொரூபி தோன்றித் தந்தையாரைப் பணிய, நீ விரைவில் தேவர்களோடு விந்தமலை யடைந்து அவ்வரக்கர் முன்னேசென்று கருதாது அவர்களையெல்லாங் கொன்று தேவர்கட்கு நன்மையை விளைவிப்பாயாக வென விளம்பி குதிரை, தேர், யானை, சேனை, முதலியன கொடுப்ப உக்கிரன் அக்கணமே தக்கபடி தந்தை தாயார் பாதங்களைச் சிந்தையிற்கொண்டு இந்திரனோடு கூடிப் போர்க்கு சிங்கத் தேரின்மேல் உதயகிரியிற் சூரியன் உதயமானாற்போ லேறினன். தான் ஏறிய ஆயிரஞ் சிங்கங்கள் பூட்டிய தேரின் சக்கரத்தி லெழு

* அநாயாசம்—எ-து—அலட்சியம்

ந்த * துகள் விண்ணுலகைமூடி மண்ணுல கெனும்படி செய்தது. தும்பமாலை சூடிப் போர்க்கோலங் கொண்டு உக்கிரன் வருஞ்செயலை ஒற்றர்களறிந்து அரக்கர்களிடத்தில் வாயு வேகமாயோடி அடிவணங்கி, தேவர்கள் உங்கள் துன்பத்திற் காற்றாது முறையிட உங்கள் பிதா ஒரு புதல்வனை யுண்டு செய்து போருக்கனுப்பி யுள்ளார். அவன் பெயர் உக்கிரன் பொன்மலை போலும், பூரித்த தோளுடையவன். கோப மிகுந்தவன் ஒளிக்கும் வீரகண்டாமணி தரித்தவன். சூரியன் போன்ற வேலேந்தியவன். சிங்கங்கள் பூட்டிய தேரைக் கொண்டவன். தேவர்களெல்லாரும் புடைசூழச் † செருச்செய வருகின்றனனெனக்கூற, ‡ ஒற்றர் உரைத்தமை செவிற் புகுமுன், உள்ளேயிருந்து கோபாக்கினி யெழுந்தாற்போலக் கண்கள் சிவந்து, வில்போன்ற புருவத்தையும் நெற்றியையும் நெரித்துக்கொண்டு, உதடு துடித்து, பற்களைக் கடித்து, உடல் துடித்தார்கள். நமக்கெல்லாம் இளையவனான ஒருவன் நம்மீது போருக்கு வந்தானென்றால், இவ்வுலகத்தில் நம்மிலும் எளியாரொருவருண்டோ. வென்று சொல்லி, இடிபோலச் சிறித்து கடல்போ லார்ப்பரித்து விரைந் தெழுந்தார்கள். அவ்வாறு யுத்தசன்னத்தரான திவாந்தகன், சயோத்துங்கன், நீலாங்கன், சமரகேசரி, அரிலுண்டவன் முதலானவர்கள் ஆயுதங்களோடும் இரதாரூடராய் நால்வகைச் சேனையும் புடைசூழ வீராவேசத்தோ டெதிர்த்துப் பெரும்போர் செய்தார்கள். உக்கிரனும் உக்கிரமாகப் பலபடைகளைச் செலுத்தி அவ்வரக்கரைத் தக்கபடியே தனித்தனிமாய்த்து எஞ்சிநின்ற ஏனைய சேனாதிபர் முதலினோர் மீது அக்கினியாஸ்திரத்தைப் பிரயோகித்து அவரனைவரையும் ஒரு விநாடியிற் சாம்பராக்கினன். அக்காலத்தில் எண்ணிறந்த பூதங்களும் நாய் நரிகளும் கழுகு பருந்துகளும், விருந்துண்டு சந்தோஷித்தன, கவந்தங்களாடின, உதிரவாறோடியது. தேவர்கள் மலர்மாரி சொரிந்து வாழ்த்திருந்தார்கள்.

பிரமதேவராகிய பிதாவின் கட்டளைப்படி அரக்கர் முப்பத்தினாயிர வரையு முடித்து, யுத்தகளத்தை நீங்கி, தேவர்கள் புடைசூழ்ந்துவர, உக்கிரன் சத்தியலோகமடைந்து பிதாவை பணிந்து, எழுந்து எதிரே நின்று, எந்தையே! தேவரீர் கட்டளைப்படியே யாவரையும் கொன்று தேவர் துயரத்தைத் தீர்த்து வந்தேனெனத் தெரிவிக்க, நான்முகக் கடவுள் தன் புதல்வ ரிறந்த துன்பத்தால் மனங்கொதித்து உக்கிரன் முகத்தைப் பார்க்க, அப்பொழுது சிவபெருமான் திருநெற்றி விழியால் பார்க்கப்பட்ட மன்மதன்போ லெரிந்தொழிந்தனன்.

---

* துகள்—எ-து—புழுதி.

† செரு—எ-து—போர்.

‡ ஒற்றர்—எ-து—தூதர்.

அவ்வாறு உக்கிரன் இறக்கக் கண்டு, பிரமதேவர் ஐயோ! நான் புத்திரர்களை யெல்லாங் கொல்வித்த பாவத்தோடிராமல் அவ்வாறு செய்த இந்த உக்கிரனையும் இறக்கச் செய்தேனே யென்று மனத்திற் பெருந்துயர்கொண்டு, ஒருவாறுதாமே தணிந்து தமக்குப்புதல்வரில்லாமையும் புதல்வரைக் கொலை செய்த பாவத்தையும் விலக்க விரும்பி, சிவபெருமான் எழுந்தருளியுள்ள புண்ணிய ஸ்தலங்களெல்லா வற்றினும் மேம்பட்ட தென்கைலை மலையை யடைந்து, பொன்முகரி தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து சந்திர சேகராகிய நாகலிங்க பெருமானைத் தரிசித்து அஷ்டாங்க பஞ்சாங்கமாக நமஸ்கரித்தினர்.

பின்னர், பிரமதேவர் தென்கைலாய மலைக்கும் நீல மலைக்கும் நடுவே யிருந்து தமது மனத்துயரை யொழிக்கத்தக்க நல்ல தவஞ் செய்யத் தொடங்கி, மனத்தை ஐம்புலன் வழிச் செல்லவொட்டாது நீலகண்டராகிய சிவபெருமான் பாதத்திலிருத்தி, அருந்தவத்தில் அமர்ந்திருந்தமையின், கருணாமூர்த்தியாகிய சிவபெருமான் அவர் செய்த தவத்திற்கு அருள்புரிய விரும்பி, காளகண்ட சதுர்புஜ உமாசமேதராய் இடபாரூடராய்க் காட்சி தந்தருளவும், பிரமதேவர் * துணுக்குற்றெழுந்து உடல் புளகிக்கவும் கண்கள் ஆனந்த பாஷ்பஞ்சிந்தவும் மனமுருகவும் இறைவரது தாட்டாமரையில் சாஷ்டாங்கமாகப் பணிந்து எழுந்து நின்று, கைகளைச் சிறமிசைக் கூப்பி † நாத்தழும் பேறவேத வாக்கியங்களாற் றுதித்து நிற்கையில், சிவபெருமான் திருவுள மகிழ்ச்சி மீக்கொண்டு, பிரமனே! நீ விரும்பியது யாது? சொல்லுகவென வினவ, நான் முகக்குரிசில், கிருபா மூர்த்தியே! யான் காலத்தையும் சமயத்தையுங் கருத்திற் கொள்ளாது மாது மயக்குற்றமையின் வலி தங்கிய பகைஞராகிய முப்பத்தினாயிரம் அரக்கர் அக்கினிபோலப் பிறந்தார்கள். அவர்கள் யாவரும் விந்தகிரியிற் சேர்ந்திருந்து உலகிற்கெல்லாம் பெருந்துயர் விளைத்தனர். தேவர்கள் அத்துன்பத்தை என்னிடஞ் சொல்லி யாசிக்க, எனக்குப் பெரிய வடவா முகாக்கினி போன்ற கோபமுண்டாயிற்று. அப்போது உக்கிரனெனும் பெயரேற்ற ஒரு மகன் உதித்து என் கட்டளையை மேற்கொண்டு விந்தத்தை யடைந்து அரக்கர்களனைவரையுஞ் சிந்தும்படி கொன்று திரும்பி நிகழ்த்த செய்தியை எனக்குத் தெரிவிக்க, முப்பதினாயிர மக்கள் முடிந்தது காரணமாக மனம் வருந்தி அவ்வுக்கிரன் முகத்தைப் பார்க்க அக்கணமே அவன் திக்கென வெரிந்து போயினன். தேவரீர் தர்ம சொரூபராதலால், என் மக்களில்லாக் குறையையும் மக்கட் கொலை செய்த மிக்க பாவமும் தீர்க்கக்கருதி இங்கு தவமியற்றினே னெனச்சாற்ற, சிவபெருமான் நீ தென் கைலாயத்தின் சிகரத்தை நன்றாகத் தரிசித்தனை நீ கொலை புரிந்த தனாலுண்டாகிய பாவத்தை விலக்கினவனாயினை நமது

---

* துணுக்குற்று—எ-து—பயப்பட்டு.

† நாத்தழும்பு—நாக்கு தடிப்பு-

தென் கைலாய மலையின் உயர்ந்த சிகரத்தைக் கண்டோர் யாவராயி னும் சூரியனைக்கண்ட பனிபோலத் தன்பாவங்களி னின்று நீங்குவர் நீமகப்பேறு கருதினையாயின், மாசிமாத மக நக்ஷத்திர தினத்தில் சூரியோதய காலத்தில், பொன்முகரியில் ஸ்நானஞ்செய்து இந்நாக லிங்கப் பெருமானை யடைந்து நூற்றெட்டுமுறை பிரதக்ஷிணஞ்செய் து நூற்றெட்டு நமஸ்காரம் புரிந்தால் பாவங்களை விலக்கத்தக்க சற் புத்திரனைப் பெறுவாய். இஃதுனக்கே யன்றி, வேறொருவர் யாவ ராயினும் இங்ஙனம் புரிவோர் புதல்வனைப் பெறுவது நிச்சயமெனத் திருவாய் மலர்ந்தருளி அந்தர்த்தான மாயினர். அம்மொழிப்படி செம்மையாகச்செய்து விரதமிருந்த பிரமதேவருக்குச் சிவபெருமான் திருவருளால் பேரறிவுடைய புத்திரன் கலைமகள்பா லுதித்தனன்.

மகப்பேறுண்டாகலின் மகிழ்வெய்திய கலைவாணியும் நான்முகக் கடவுளும் உச்சிமோந்து களித்தார்கள். அக்காலத்தில் சிவபெருமான் ஆங்கெழுந்தருளி அம்மனுக்கு. ரிபு வென்று நாமகரணஞ் செய்து வேதமுதலிய கலைஞானங்களில் பூரண அறிவு அநுக்கிரகித்து மறை ந்தனர். பின்னர் சிலகாலஞ்செல்ல, ரிபு தந்தையரை வந்தனை செய்து விடைகொண்டு காடுமலை ஆறு முதலிய விடங்களில், வசித்து * நிதா நருக்கு ஞானோபதேசஞ் செய்தனர் அந்த நிதாகரே சனகனுதியர்க் குபதேசித்தன ரென்பார்கள். பிரமதேவர் தம் மனைவியாருடன் சர்ப் பாபரண ராகிய நாகலிங்கப் பெருமானுடைய திருவடிகளில் நமஸ் கரித்துத் தமது சத்திய லோகமடைந்து நித்திய வாழ்வி லமர்ந்தனர். சிவதலங்க ளெல்லா வற்றிலும் இத்தென் கைலாயம் மிகவும் புகழத் தக்க புண்ணிய பூமி. யாதவ மன்னனே! இஃதுபசாரமன்று என்று விடசங்கம வடிவாக வந்த சிவபிரான் திருவாய் மலர்ந்தருள, அரசன் மகிழ்ச்சி மிகுந்து அடியேனுக்கு இன்னும் அந்த க்ஷேத்திர மகிமை யைச் சொல்ல வேண்டுமென வேண்ட இறைவர் இதுகாறும் பிரம தேவர் சரிதையைச் சொன்னோம். இனிச் சிலந்தி, பாம்பு, யானை களின், சரிதையைச் சொல்வோம் கேட்பாயாக வென்ச் சொல்ல லாயினர்.

நான்முகச் சருக்கம் முற்றிற்று.

---

* நிதாகர்—எ-து—சூரியர்.

 

சிலந்தி சிவானுக்கிரகம் பெறல்.

## ஸ்ரீகாளத்தி சருக்கம்.

### கலி விருத்தம்.

ஆதிநான் முகன்கதை யறைந்திட் டோமினி
மேயாதுதுஞ் சிலந்திபாம் பொருத்தலின் கதை
யாதவ மனனமர்ந் தினிது கேளென
மாதவ வடிவருள் வள்ளல் கூறுவான்.

### தரவு கோச்சகக் கலிப்பா.

மணியிமைக்கு மார்பவெழு வாயுகத்தி லொருசிலம்பி
புணருமுதற் பிறப்புணர்வாற் பொன்முகரிம் புனன்மூழ்கி
யிணையிறிருக் கயிலாயத் திறையைவழி படவெண்ணித்
தணிவிலன்பின் கோயிறன்வாய்த் தந்துவினூற் சமைத்தன்றே.

யாதவமன்னனே! இதன்முன் நடந்த கிரேதாயுகத்தில் ஒரு சிலந்தியானது தன் பூர்வஜனன வுணர்ச்சியால் பொன்முகரி நதியில் மூழ்கி, தென்கைலாயத்தி லெழுந்தருளிய நாகலிங்கப் பெருமானை வழிபாடு செய்யக்கருதி, அடங்காத ஆசையோடு தன் வாய்நூலினால் திருக்கோயில் கட்டியது. திருமதில் திருக்கோபுரம் திருமண்டபம் திருமாளிகை, திருக்கர்ப்பக் கிருக முதலிய ஆலய வுருப்புகளை யெல்லாம் செய்தமைத்தது. ஒருதினைப்பொழுது காலமாயினும் ஓரிடத்தி

விருந்து இளைப்பாறவும் அவகாசமில்லாமல், அழிந்த விடத்தை யெல்லாம் பழையபடி ஜீர்ணோத்தாரணஞ் செய்துகொண்டு நெடுநாளாகத் தவறாமல் தன் திருப்பணியைச்செய்து காத்துக்கொண்டு வந்தது அங்ஙன நிகழ்கையில், சிவபெருமான் அச்சிலந்தியின் அன்பினைப் பரிசோதிக்கும் தம்முன்னெரிந்து கொண்டிருந்த திருவிளக்கை மேலோங்கி பெரியச் செய்தமையால், மெல்லிய நூலினாலமைக்கப்பெற்ற திருக்கோயில் முழுதும் ஒரு விநாடியில் வெந்தொழிந்து போயிற்று. அரசனே! அதுகண்ட அச்சிலந்தி உயிர் நீங்கியதுபோல கீழே வீழ்ந்து, ஐயோ! இத்திருக்கோயில் தீப்பற்றி யெரிந்தது யாது காரணமோ? இது யான் முற்பிறப்பிற் செய்த நீங்காப்பாவமோ? அல்லது என்னுயிர்த் துணையாகிய சிவபிரானுக்கு இந்த அற்பமான * ஊர்கையாற் செய்த கோயில் பொருத்த மில்லாமையோ? அறிகிலேன் அநேக நாட்கள் உடல்வருந்தி இரவுலுந் துயில் கொள்ளாமல் வருந்தி யிழைத்தது, தீப்பட்டெரியத் தானோ எல்லாவுயிர்கட்குந் தாய்போன்றவனாகிய எம்பெருமான் திருவருள் என் விடயத்தில் இப்படியாக முடிந்ததோவென்று, பலவகையாக மிகவும் வருத்தமெய்தி, எம்பெருமானுடைய திருக்கோயில் அழிந்ததுகண்டும் யான் என்னுயிரைப் போக்கிக் கொள்ளாதின்னும் இருப்பது கொடியது என்று, அந்த அன்புடைய சிலந்தியானது இந்த எரிகின்ற தீபத்தில் வீழ்ந்து உயிர் நீங்குவேனென் றெழுந்திருக்க, அடியார் துயரை அரைக்கணமும் பொறுக்கா அருள்வள்ளலாகிய சிவபெருமான் கண்டு, அதற்கு வெளிப்பட்டுத் தரிசனை தந்து, அதனைத் திருவிளக்கில் வீழாமற்றடுத்து, நம்மிடத்திற் பேரன்புடைய சிலந்தியே! நீ விரும்பியவற்றை விளம்பினால் விரைவில் தருவோமென, சிலந்தி அடியேன் தேவரீர் திருவடி நீழலிலிருக்க விரும்பினேன். அதனை யநுக்கிரகிக்க வேண்டுமென வேண்டியது. வேதமுடிவையும் நன்கறிந்த பெரிய தவசிகளுக்கும் கிடைக்கப் பெறாத திருவடித் தாமரையின் கீழ் அதனைச் சிவபெருமான் ஒடுக்கிக்கொண்டனர். அவ்விரைவனது திருவருட் பிரகாசத்தை எவர் தாம் எடுத்துக்கூறவல்லவர் ஒருவருமிலர், இது சிலந்தியின் சரிதை, இனி பாம்பு யானை இவற்றின் சரிதையைச் சொல்லுவோம்.

---

* ஊர்கையால்—எ-து—நூலிழையினால்.





## அரவும் யானையும் அண்ணலினருள் பெறுதல்.

---

### வஞ்சித்துறை.

இதுசி லந்தியின் கதைக டும்பணி
மதவெறும் பியின் கதைவி ளம்புதும்.

திரேதாயுகத்தினிறுதில், சர்ப்பமொன்று அரிய ரத்தினங்களைக் கொண்டுவந்து தென்கைலாயப் பெருமானை அர்ச்சித்து வருங்காலத்தில், பெரிய மலைபோலுந் தேகத்தை யுடைய யானை யொன்று துவாபாயுகத்தின் முதலில் அப்பெருமானை யர்ச்சிக்க ஆங்கடைந்து, பொன்முகரி யாற்றுப்புனலில் மூழ்கித் துதிக்கையில் நீரைமுகந்து நாகலிங்கப் பெருமானை யடைந்து, அரவினா லர்ச்சிக்கப்பட்டிருந்த இரத்தினங்களைக் கீழே தள்ளி நீரினால் அபிஷேகித்து வில்வதளங்களைக் கொணர்ந்து சிரசிலணிந்து சென்றது, மறுநாள் சூரியோதய காலத்தில், பாம்பானது வந்து சிவபெருமான் திருமுடியின்மேல் வில்வ விலைகளிருக்கப் பார்த்து, இறைவன் திருமுடியிலிருந்த பிரகாசமுடைய மணிகளைக் கீழேதள்ளி இலைக்குப்பையை யிவ்வாறு வைத்தவர் யார்? ஐயோ! அறியேனே வென்று வழக்கப்படி யர்ச்சித்துப் போயிற்று. அதன் பின்னர் யானை அங்கு வந்து பார்த்து பெருமான் முடிமிசை யான்சூட்டிய வில்வபத்திரங்களை விலக்கி பலகற்களை யேற்றிவைத்த தீயோர் யாரோ? ஐயோ! வென்றிரக்கப் பட்டுத் தன் பூசை முடித்துச் சென்றது. அடுத்த தினத்தில், பாம்பு வந்து பரமேசுவரன் திருமுடியில் இலைகளிருக்கக்கண்டு இடிவிழுந்தார்ப்போல கலக்கமெய்தி, ஐயையோ! அதிக வொளியோடு கூடிய ரத்தினங்க

ளைச் சிறிதும் யோசியாமல் கீழேதள்ளி யிப்படிச் செய்தவர்கள் என் விரோதிகளே யாவர். இது என்பாற்கொண்ட பகை காரணமேயாம். இப்படிச் செய்து போனவர்களை நான்காணப் பெற்றால், என் விஷப் பற்கள் நான்கும் அழுந்தும்படி கோபத்தாற் கடித்துக் கடித்து அவருயிரை வாங்காது விடுவேனோ. பரமசிவத்திற்கு இக்குற்றமாற்றியும் பிழைத்துப் போனார்களே. பகவானுக்கு இது சம்மதமோ வென்று பலபலவிதமாகக்கூறி, நாளையதினம் எல்லாவற்றையும் பார்ப்போமென்று கருதி நமது பெருமானை யர்ச்சித்துப் போயிற்று. யானை யுடனே வந்து பரமசிவன் திருமுடிமேல் கற்கள் வழக்கப்படி யிருக்கப் பார்த்து, அஞ்சன மலைபோல ஜலத்தில் விழுந்து கையைக் கீழே மோதித்துக் கடலி லமிழ்ந்து, எந்தையே! இஃது தேவரீருக்குச் சம்மதந் தானோ? தாமரை, குவளை, வில்வ முதலியனபோல இக்கற்களையுந் தரித்தீரோ. * இற்றை யெப்படிச் சுமந்திருக்கிறீர். இறைவரும் பகைவர் பக்கத்திலிருந்தால் எனக்கு யார் துணை யாவார்கள் என்றிப்படிப் பலவாறு வருத்தமெய்தி, நாளையதினம் எவ்வகையிலாவது என்பகையை முடிப்பேன் அல்லது இறப்பேனென்று தீர்மானித்துக் கொண்டு பெருமானைப் பூசைசெய்து போயிற்று மற்றைய நாள், அருணோதய சமயத்தின்முன், பாம்பானது தன் தலைவன் பூசைக்கு விரோதிக ளானவரைக் கண்டு பிடிக்குங் கருத்துடன் சிறிய வுருவாகிப் பெருமான் திருமுடி கண்டு பிடிக்குங் கருத்துடன் சிறிய வுருவாகிப் பெருமான் திருமுடிமேற் சாத்தியிருந்த மெல்லிய பூங்கொத்தினுள் புகுந்து ஒளித்துக்கொண்டிருந்தது. இஃதிப்படி யிருக்க, யானையும் தன் பகையைக்கண்டு கொல்லக்கருதி விரைந்து வந்து, இறைவர் திருமுடியிலிட்ட திருப்பள்ளித் தாமம் இட்டவகையே யிருக்கக்கண்டு மனங்குளிர்ந்து, சிவபெருமான் அடியேன் பூசைக்கு அகமகிழ்ந்தார்போலு மென்று எல்லையில்லாத சந்தோஷமடைந்து, பிறகு அர்ச்சனை செய்யப் பொன்முகரி யாற்றில் நீர் முகந்து வந்து நாகலிங்கப்பெருமான் திருமுடியிற் சாத்தியிருந்த மலர்களையும் பத்திரங்களையும் கையினாலே தள்ளுகையில், நாகமானது கோபத்தோடு சீறித்துதிக்கையின் † புழையிற் புகுந்து கொண்டது விஷப்பற்களையுடைய பாம்பானது மத்தகத்தினுட்புகுந்து குடையவும், மதயானையானது, பிரளய காலமேக கர்ஜனைபோல ‡ பிளிறிக் கொண்டோடி ஜலத்தை முகந்து முகந்து அதிவிசையாக ஊற்றிப்பார்த்துக் கைசலித்ததாய், அதன்பிறகு துதிக்கையைப் பூமியில்மோதியும் உதிரமொழுகும்படி வலியுடன் மத்தகத்தை யுரிஞ்சியும், ஆகாயமளாவியும், நிலத்தில் வேர்பொருந்தியுமுள்ள பெரிய மரங்கள் சாயும்படி

---

* இற்றை—எ-து—இன்று.

† புழையில்—எ-து—உள்துவாரத்தில்.

‡ பிளறி—எ-து—இரைச்சலிட்டு.

தலையினால் பாய்ந்து இடித்தும், அதிக விஷந்தங்கிய பாம்பின் குடைச்சல் தீராமை நோக்கி, நம்முடைய சத்துருவையுங்கொன்று நாமுமிறப்பதே தீர்வென்று கருதிக் கோபமிகுந்து, விரைந்து பின்சென்று துதிக்கையை முடக்கிக் கொண்டு மலையும் பூமியும் அதிரும்படி வேகமாகப் பாய்ந்தது. அப்பொழு துண்டான முழக்கத்தைக் கேட்ட தேவர்களும் மனநடுங்கினார்கள். மரங்களெல்லாம் அதிர்வினால் பூக்கள் காய்கள் இலைகள் முதலியவற்றை சிந்தின. நீர் நிலைகளெல்லாஞ் சிதறின. பறவை தொகுதிகள் மேலே கிளம்பிக் கற்பகச் சோலையை யணுகின. குகைகளிற் றவஞ்செய்யும் பெரியோரும் மயங்கினார்கள் மாதர்கள் தம் ஊடலகன்று கணவரைத் தழுவினர் யானையோ தலைபிளவு பட்டு முத்துகளுதிரக் கீழேவிழுந்து விட்டது, பாம்பும் உள்ளேயே நுறுங்கி விட்டது. அப்போது சிவபெருமான் உமாசமேதராய் இடபாரூடராய்க் காட்சிதந்து தமது சாரூப மளித்து அவற்றை யுடன் கொண்டு சென்றனர். இந்தத் தென்கைலாயத்திற் சிலந்தியும் பாப்பும் யானையும் முத்தியெய்திய காரணத்தால் சீகாளத்தியென்னும் பெயர் வழங்கலாயிற்று. எனக்கூறிய விடசங்கமரை யாதவ மன்னன் நமஸ்கரித்து, இன்னும் ஒரு நல்லசரிதையைச் சொல்ல வேண்டுமெனக் கேட்க, விடசங்கமர் வடிவாக விளங்குஞ் சிவபெருமான் இனி வேடுவராய் கண்ணப்ப நாயனார் சரிதையைச் சொல்வோம். யாதவ மன்னனே கேட்பாயாக வெனச் சொல்லலாயினர்.

சீகாளத்திச் சருக்கம் முற்றிற்று.



கண்ணப்பர் கண்ணளித்து சிவாநுக்கிரகம் பெறுதல்.

# கண்ணப்பச் சருக்கம்.

### கலி விருத்தம்.

ஓதினஞ் சிலந்திபாம் பொருத்த லின்கதை
காதுவில் வேட்டுவன் கதைவி ளம்புதும்
யாதவ மனனமர்ந் தினிது கேளென
மாதவ வடிவருள் வள்ளல் கூறுவான்.

### கலித்துறை

மதியின் மானிளங் கன்றினை வரிசிலைக் குறவர்
குதலை மென்மொழிப் பேதையர் பச்சிளங் கொடிப்புல்
பதும மென்கையா னீட்டுபு பரிவுட னழைக்கும்
புதுமை கொண்டவெற் புடுத்தது பொத்தப்பி நாடு.

பூங்குழல்வை னெடுங்கண்ணாள் புனலாட்டிப் புனைந்துதா
வாங்குசிலை மறவர்கோன் மணிமகனைத் தடக்கையாற்
றாங்குபுதிண் ணென்றிருந்த தன்மையாற் றிண்ணனெனத்
தேங்கியபே ருவகையெடுந் திருநாமஞ் சாத்தினான்.

சந்திரனிடத்துள்ளமானை, குறவர் குலத்திலுதித்த குகலை மொழி பேசும் இளம்பெண்கள், கையில் பசியபுல்லைக்காட்டி ஆசையோடு அழைக்கும் புதுமைதங்கிய மலையையுடைய பொத்தப்பி நாடென்று ஒரு நாடுண்டு. அந்நாட்டிலுள்ள சிற்றூர்களில் உடுப்பூரென்றோரூருண்டு. அதில் வசித்தவேடர்களுக்கு அரசனாக நாகனென்பவனொருவனிருந்தான். அவன் மனைவிபெயர் தத்தை. நாகனுந் தத்தையும் பலவகைச் செல்வமுங் குறைவின்றி யடைந்திருந்தும் மகப்பேறொன்றில்லாமையால் வருத்தமுற்றிருந்தனர். அப்பொது நாகன், கண்ணில்லாத உடலும், சந்திரனில்லாத இரவும், மந்திரியில்லாத அரசாட்சியும், அன்பில்லாத மனமும், புலவரில்லாத சபையும், மக்களில்லாத வாழ்க்கையும் பயனில்லை மண்பதித்த காலோடும் சோற்றைத் துழாவிய கையோடும், வாயினின் றொழுகும் நீரால் நனைந்த மார்போடும் இளங் குழந்தைகள் தம்மீதேறுகின்ற இன்பத்தை அடையப்பெற்ற வுடம்பே உடம்பென்று பெரியோர் சொல்வார்கள். குழந்தைச் சொல் கேளாத காதுகள் மரப்பதுமையின் காதுகளுக் கொப்பானவை. புத்திரப் பேற்றினாலேயே இம்மை மறுமை யின்பங்களை யநுபவிக்க வேண்டுதலின், எம்மை யடிமையாகப் கொண்ட முருகக்கடவுள் திருவடிகளைப் பணிந்து நற்புத்திரனைப் பெறுவோமென்று கருதினவனாகி, குமாரசுவாமியின் திருக்கோயி லொன்றனை யியற்றுவித்து நித்திய நைமித்தியாதிகளைக் குறைவற நடத்தி, மயில்களையுஞ் சேவல்களையும் விடுத்து, துடிபறை முதலிய வாத்திய முழக்குடன் திருவிழாச் சிறப்பு நடத்தி, வேல் கொண்டு திரியும் வெறியட்டாளன் மேற் சன்னதங் கொள்விக்க அப்பொழுது யாவருங் காணும்படி வேலாயுதமேந்திய முருகப்பிரான் அவ்வெறி யாட்டாளன் மேற்றோன்றி நீ அன்போடு செய்த இச்சிறப்புகளுக்குக் களிப்பெய்தினும். உலக மெல்லாம் புகழத்தக்க சற்புத்திரனைக் கொடுப்போமென்று கூறினர். அவ்வமுத மொழியைக் கேட்டுப் பெரு மகிழ்வெய்திய நாகனுந் தத்தையும் திருவடிகளிற் பணிந்து புகழ்ந்து நிற்ப, குமாரசுவாமி கோயிலேறினர். பின்னர், அவ்வெறி யாட்டாளனுக்குப் பெருஞ் சிறப்புகள் செய்து, சுற்றத்தார்க்கெல்லாம் செய்யத்தக்க மகிழ்ச்சிகளை நடத்தி மனைவியோடு களிப்பெய்தி யிருக்கையில், சிறிது தினங்களுக்குள் தத்தை கர்ப்பதியாகி, உரியகாலத்திலே தங்குலத்தின் குறைவை விலக்கத்தகக் பொன்போன்ற ஒரு அரிய புதல்வனைப் பெற்றனள். குலத்தவர் யாரும் பெறுதற்கரிய ஆண்மகவிற்காக பெருமகிழ்வெய்தினர். அப்பொழுது தத்தை கொண்ட சந்தோஷத்தை அளவிட்டுரைக்க முடியுமா? நாகனை பெருஞ் சந்தோஷத்தினல் வேலாயுதந் தாங்கிய குமரவேளுக்கு அதிகமாகிய பெருஞ் சிறப்புகள் நடத்தினன். நகரமுழுவதும் எண்ணெய் விழாகொண்டாடப் பட்டது. தத்தை அப்புதல்வனுக்கு வாசநீராட்டி முலைப்பால் பூமியில் விட்டு

நிலப்பொட்டிட்டு, பாலூட்டி அலங்கரித்துத் தந்தையாகிய நாக னிடங் கொடுக்க அவன் இருகையாலும் வாங்கித் திண்ணென் றிருந்த காரணத்தால் திண்ணரேன்று நாமகரணஞ் செய்தனன்.

அக்குழந்தை யானைத் தந்தத்தாற் செய்த தொட்டிலி லிட்டு நிலாமுற்றத்தில் வளர்கையில் திருப்பாற் கடலில் * நாகணையிற் றுயி ன்ற திருமாலை யொத்திருந்தது. நாகன் தன்குடிக்கேற்ற சடங்கு களைச்செய்து இளந்தளிர் சூட்டி, வேம்பின்கோலிழைத்து இடை யிற் கூடிய அரைமணியோடு கூடிய பலகரை மாலைபைக் கட்டி, பல ஆபரணங்களணிந்து அழகுற வளர்க்கையில், திண்ணனுர் முறையே தால், சப்பாணிப் பருவங்கள் கடக்கக்கண்டு. வனதெய்வங்கட்குக் காய் கிழங்கு மாமிச முதலிய பல பரப்புகளைத் தனித்தனிகுவித்து நிவேதித்த லாகிய பெருமடை கொடுத்து இனத்தவர்க்கு விருந் திட்டான். ஓராண்டுப் பருவம்வர, தலையிற் புலிககத்தாலான நெற் றிச்சுட்டி சாத்தி, முட்பன்றியின் முட்களறிந்து கோத்த புலிப்பல் லோடு சேர்ந்த தாலி சரமாலையை மார்பிற்கட்டி, சதங்கை மாலையும் அரைஞாணையும், காப்பினையும், யானைக்கொப்பாற் செய்த தண்டை யையும், மணிக்குதம்பை செவியணியையும் தரித்து அழகுற வளர்த்தான். செவ்விய சொற்களைச் சொல்லும் பருவங்கடந்து இள நடைப் பருவம்வர உடுக்கை வடிவாகச்செய்த கட்டையை புருட்டி அதன் பின் ஒடியும், வேட்டைநாய்களின் கயிற்றை யறுத்துவிடுத் தும், வேடச்சிறுமியர் விளையாடுஞ் சிற்றில்களை யழித்தும், பல குறும்புகள் செய்தும், ஐந்துவயது கடந்ததன்மேல் சிறுவலைகளையுங் கண்ணிகளையுங்கொண்டு வேடச்சிறுவரோடு தம் சிற்றூரைச் சூழ்ந்த உழலை வேலியின் புறத்தேயுள்ள சிறு காட்டிற்சென்று, முயற் குட்டி, காட்டுபன்றியின்குட்டி, வேங்கைக்குட்டி, செந்நாய்க்குட்டி, முதலியவற்றைத் தொடர்ந்து சரபம்போலப் பிடித்து முற்றத்தில் இட்டுவளர்க்கும் மரக்கூட்டத்திற் பிணித்து விளையாடியும், பகற்பொ ழுது கழிந்த மாலையில் குறக்குல மூதாட்டியானவள் கடுகாலாகிய காப்புப் புகையைக் காட்டி உணவினையூட்டி நித்திரை செய்விக்கத் துயின்றும், விடிந்தவுடன் உணவூட்டி விளையாட விடவும் சில வரு டங்கள் கழித்து வில்வித்தை கற்கும் பருவத்தை யெய்தினர்.

நாகன் திண்ணனாரைப் பார்த்துச் சந்தோஷித்து அணைத்துக் கொண்டு வில்வித்தை கற்பிக்க விரும்பி அதிற்றேர்ந்தவர்களை வரு வித்துத் தின நியமனஞ் செய்து தன்னுறவினர் பலருமறிய உடுக்கை யடித்துத் தெரிவித்தான். அதனையறிந்த வேடர் தலைவர்கள் தங்கள் மலையிலுள்ள இரத்தினங்கள், முத்து வேங்கைத்தோல், யானைக்கோடு மயிற்பீலித் தொகுதி கொம்புத்தேன் பலவகைக்கள் மாமிசங்கள் பழங்கள் கிழங்குகள் முதலியவற்றை எடுத்துக்கொண்டு

* நாகணை—எ-து—பாம்புமெத்தை

வந்து சேர்ந்தார்கள். நாகன், வீரர்கள் ஆயுதங்களைத் தாங்கி அருகே நிற்க, பழைய வில்லாசிரியருக்குச் சன்மானங்கள் செய்து, என் மகனுக்கு வில்வித்தை பயிற்றுக வெனக்கூற, அச்சமயத்தில் அய லூரிலிருந்து வந்தவர்களும் இனத்தவர்களுமாகிய வேடர்கள் உச் சிப்போதில் பலவகைக் கள்ளைக்குடித்து மயக்கமும் மகிழ்ச்சியுங் கொண்டு, பச்சிலை மாலைகளும் மலர்மாலைகளுஞ்சூடி, தோல் வட்டங் களை அரையிற்கட்டி, உடலில் பலகரை யாபரணங்க ளணிந்து வெட்சி, கரந்தை, முதலிய மாலைதரித்து ஆசிரியன் தாங்கிய வில்லைச் சூழ்ந்து கொண்டு, குறிஞ்சிப்பறை, முரசு, கொம்பு, உடுக்கை புள்ளாங்குழல் முதலிய வாத்தியங்க ளொலிக்கப் பேரோசையோடும் உடுப்பூரை வலம் வந்து செய்யுஞ் சடங்குகளை முடித்து, வேடமாதர் துணங் கைக் கூத்தாட மங்கல்வோசைமிக, திண்ணனுரை முறைப்படி வில் பிடிப்பித்தார்கள். அழகிய மலையிடத்தில் முன்னே பூசைகள் செய்து முடித்து வில்வித்தை பயிலுமிடத்தை யடைந்து அன்றுமுத லாகத் திண்ணனுர் வில்வித்தையிற் பயின்று ஈட்டி தண்டமுதலிய படைகளின் வித்தையிலுந் தேர்ந்து பதினறு வயது நிரம்பிய பருவ மடைந்தனர். அக்காலையில் திண்ணனுரைக் கண்டோர் யாவரும் சுவேதப்புரவி கட்டிய தேரையுடைய வில்விஜயனே இப்படி யுதித் தானெனச் சிறந்து சொல்வராயினர்.

இவற்றை யெல்லாங்கண்ட நாகன் திண்ணனுரைக் கன்னிவேட் டை யாடுவிக்க விரும்பினவனுகி இனத்தவர் புடைசூழ வனத்தை யடைந்து வனதேவதைகட்குப் பூசையெடுத்து, தேவராட்டியை வரு வித்து அவள் முன்னிலையில் வெறியாடல் முதலியன நடத்தி உடுப் பூரை யடைந்து மைந்தனை யருகழைத்து, இன்று முதலாக நீயே இவ் வேடர்கட்குத் தலைவனுப் பகைவரை வென்று குடிகளுக் குதவி புரிந்து பெருவேட்டங்கை கூடிச்சிறந்து வாழ்கவென்றுசீர்வதித்து தங்கள் பரம்பரையில் முன்னோராற் பிடித்த பழைய வில்லைத் திண் ணனுர் திருக்கரத்திற் கொடுத்து, பெருஞ்சந்தோஷத்துடன் தோள் களழுந்தத் தழுவிக்கொண்டு, குறிஞ்சி நிலத்தவரும், நமது குல தெய்வமுமாகிய குமாரசுவாமியின் திருவருள் துணையாகச் சென்று கன்னிவேட்டம் பலித்து விரைவில் வருகவெனக் கூறினன். திண் ணனுர் அப்படிச் சொன்ன தந்தை தாள்களைப் பணிந்து விடை பெற்று, தாயினை வணங்க, அவள் மகனுரை அணைத்துக் கொண்டு ஆசையோடு உச்சிமோர்ந்து தனங்களிற் பால்சொரிய, குழந்தாய்! நீ வேட்டைக்குப் போகையில் குளிர்ந்த சோலைவழியே சென்று வேட்டையாடி, உடலில் முட்கிழிவு படாமல் வில்லாளிக ளோடுந்திரு ம்பி வருகவென்று கூறிக் கண்ணேறு படாவண்ணம் வெண்ணீறு நெற்றியிலிட்டனள். அதன்பின் திண்ணர் தாயினை மீண்டும் வணங்கி விடைபெற்று, நீலநிறக் கச்சையும் உடைவாளுந் தரித்து, இளந்தளிர் சேர்த்துக்கட்டிய மாலைசூடி, காலிற செருப்பிட்டு, வில்

லினைத்தாங்கி அதனை வளைத்து நாணேறிட்டுக் குணத்தொனிசெய்ய அவ்வொலி கேட்ட தாய் தந்தையர் உடல் புளகித்தார்கள். பறவைகளெல்லாம் பயந்தோடின. மிருகங்கள் கூட்டத்தினின்று பிரிந்து வெவ்வேறுக்க் சிதறின. வில்லேந்தியும் அம்புபிடித்தும் வெடிப்பட்ட குரலோடும் வாயுவேகத்தோடும் மின்னுகின்ற வாளோடும், கொல், அடி, பிடி, துரத்து, குத்து, வெட்டி எறி, எய், யென்னுஞ் சொல்லோடும், தணியாத கோபத்தோடுங்கூடிய அநேகர் தம்மைச் சூழ்ந்துவரத் திண்ணனர் வேட்டமேற் சென்றனர். பிரயோகித்த அம்பும் பின்னிடும்படி விரைந்தோடத்தக்க வேகமுடையவும், தனியே வேடஞ் செய்ய வல்லவும், கடுங்கோபமுடைய சிங்கத்தின் மேலுஞ் சொல்லக்கூடியவுமாகிய எண்ணிறந்த வேட்டை நாய்கள் உடன் சென்றன. சுருண்டவாலையும் நீண்ட நாவையும் வளர்ந்த செவியையுமுடைய * ஞமலிகள் வலப்புறம் இடப்புறம் முற்புறம் பிற்புறமாக மாறி மாறி யோடவும், எண்ணிறந்த வலியவேடர்கள் சூழ்ந்துவரவும் வேட ராசாவான திண்ணனர் வேட்டைக்காட்டை யடைந்தனர். கணக்கில்லாத விலங்கு கூட்டங்கள் இருக்குமிடந் தெரிந்து சுற்று வலையை வீசி வழியொதுக்கிய பிறகு, வேடர்கள் செய்த துடி, பம்பை முதலிய வாத்திய கோஷத்தால் மிருகங்களை வளையிற் புகத் துரத்தி, அவை அப்படிப் புகுந்த பிறகு காடுகளை வெட்டிச்சரித்து புலி, கரடி, பன்றி முதலிய பார்வை மிருகங்களை வளைக்குள் விட்டு வேடர்கள் மறைந்துநிற்க, அவை பார்வை மிருகங்களின் குரலால் அகப்பட் நாய்களாலும் அம்புகளாலும் ஈட்டி, வேல், முதலிய ஆயுதங்களாலும் வேட்டையைச் சிறப்பாகச்செய்தனர். இவ்வகையாகத் திண்ணனர் பலமிருகங்களையும் வேட்டை முடித்துக் காட்டை யகன்று வேட்டுவக் ‡ குழாத்துடன், தம்மூரை யடைந்தனர்.

இவ்வண்ணமே திண்ணனர் பலமுறையும் வேட்டையாடி வந்து தாய் தந்தையரை மகிழ்ச்சி செய்து கொண்டிருந்து, ஒருநாள்வேட்டையில் விருப்புடையவராய் வேடர்தொகுதியோடும் ஓரடர்ந்த காட்டிற் புகுந்து வேடர்களைப் பிரிந்து தனித்துலாவி, மிக விளைப்பாய் ஓடர்ந்த ஆலமர நீழலில் துயிலுகையில், சிவபெருமான் திருநீறும் புலியதளும் சடைமுடியும் விளங்க கனவிற்றோன்றி, மகனே! இம்மலையில் கல்லாலமர நீழலில் பொன்முகரி யாற்றங்கரையில் ஓரிலிங்க முள்ளது, அது தரிசித்தோர் துயரங்களைப்போக்கி இஷ்ட சுகங்களைக் கொடுக்கத்தக்கது. நீ யதனைக்கண்டு வணங்குகவென திருவாய் மலர்ந்து மறைந்தருள, திண்ணனர் $ துண்ணெனவிழித்து அதிசயித்து நாற்புறமும் பார்த்தனர். அப்பொழுது வேடர்செய்த ஆரவாரத்தால் பெரியதொரு பன்றி வலையை யறுத்துக்கொண்டு வாயு

---

* ஞமலி—எ-து—நாய்

‡ குழாம்—எ-து—கூட்டம்.

$ துண்—எ-து—விரைந்து.

வேகத்துடன் மலையிற் புகச்செல்வதைப் பார்த்து, திண்ணனார் வில்லைக் கையிலேந்தி அதனைத்தொடர்ந்து விடாது செல்ல, ஆலமர நீழலிலிருந்த சிவலிங்கத் தருகேபோய் மறைந்தது. திண்ணனார் இதெப்படி மறைந்ததென்று அதிசயித் தெண்ணுகையில் அங்கே, சிவலிங்க மிருக்கக்கண்டனர். கண்டவுடனே சிவபெருமான் கிருபா நோக்க முற்றவராய்த் * தரிசனவேதியின் எதிர்ப்பட்ட இரும்பானது தன்னுருவமாறிப் பொன்னுருவ மடைவதுபோல, திண்ணனார் தமது பண்டைய குணங்கள்மாறிச் சிவபெருமான் பால்வைத்த அன்பே வடிவமாயினர். பலநாள் பிரிந்திருந்த மகனைக்கண்ட தாயைப்போல விரைந்தோடி இரும்பினும் வலியதோள்களால் இறுகத் தழுவி உச்சிமோந்து நெருப்பிலிட்ட அரக்குபோல மனமுருகிமுத்தமிட்டு, கண்களில் நீர் துளிக்கவும் உடல்புளகிக்கவு மெதிர்நின்று, குருடனுக்குக்கிடைத்த தெய்வ மணிபோல இப்பெருமான் எனக்ககப்பட்டனரெனப் பற்கள் தோன்றச் சிரித்து, உடல்முழுதும் அன்பின் மயமான திண்ணனார் சொல்லுகின்றார். யானை, புலி, கரடி, யாளி, முட்பன்றி காட்டுப்பன்றி முதலிய துஷ்டமிருகங்கள் சஞ்சரிக்குங் காட்டில் ஒரு துணையு மில்லாமல் வேடர்போலத் தனித்திருக்கின்றீரே, ஐயோ, மாமிசமும் உணவும், உமக்கு உண்ணும்படி கொடுப்போர், யார்? தேனும், தினைமாவும், பழமும், காயும், கிழங்கும், மானிறைச்சி, முயலிறைச்சி, பன்றியிரைச்சி உடும்பிறைச்சி, முதலிய, வெல்லாமும், யானே நன்றாகக் கொடுப்பேன். வேடர் துணையுமிருக்கின்றது. இப்பொழுதே எம்மூவருக்கு வரவேண்டும். நீர் தனித்திருக்க வேண்டாமென்று பலவாறு கெஞ்சிக்கேட்டும், இறைவர் ஒன்று முரையாடாமையால், இனி இவருக்கு இங்கிருப்பதே பிரியம். யானோ இத்தெய்வத்தைப் பிரிந்து உயிரோடிரேன் என்று உற்றுநோக்குகையில், திருமுடியின்மேல் அபிஷேகஞ் செய்து மலர்களும் வில்வமுதலிய பத்திரங்களு மிட்டிருத்தல் பார்த்து இதுவே அப்பருக்குப் பிரியமானவையென்று தெளிந்து அவ்வகைப் பணிவிடை செய்வதே கடமையெனத் துணிந்தனர்.

அதன்பிறகு, வேடர் தலைவராகிய திண்ணனார் ஐயோ! பெரும்பகலாயிற்றே. என்பெருந் துணையாகிய சிவபெருமான் சாலப் பசித்திருக்கின்றார். இன்சுவை பொருந்திய மாமிசத்தைக் கொணர்ந்து ஊட்டவேண்டுமென்று யான் போய்விட்டால் கொடிய மிருகங்கள் வந்து என்ன துன்பஞ் செய்யுமோ அறியேனென்றுகருதி விசனித்து, எம்பெருமானுக்குப் பசிப்பிணி அதிகரிக்குமுன்னரே க்ஷணநேரத்திற் போய்த் திரும்புவேனென்று தீர்மானித்து, குன்றில் விளங்குங் கொழுஞ்சுடரே! உழுந்துருட்டு நேரத்தில் நல்லிறைச்சி தேடி வருவேன். மிருகாதிகள் வருமென்று சிறிதும் அஞ்சவேண்டாமென்று

* தரிசனவேதி—எ-து—காட்டும் போதே இரும்பை பொன்னுக்கு மருந்து.

கைகூப்பிப் பணிந்து அரிதில் நீங்கி, இறைவர் தனித்திருத்தற்காக வருந்த கன்றினின்று பிரியும் இளம்பசுவைப்போல அடிக்கடி திரும்பிப் பார்த்துக்கொண்டு பன்றிகள் மிகுந்த காட்டை யடைந்து, ஓர் பன்றியைக்கொன்று தாமே சுமந்து கொண்டு பொன்முகரி நதியை யணுகி, மரநீழலில் வைத்து, தீக்கடை கோலினால் நெருப்புண்டாக்கி, மயிரையகற்றி அப்பன்றியை அம்பாற் கிழித்து தசையினுள் மிகஇனிய சுவையுடைய பாகத்தையெல்லாம் தெரிந்து வெவ்வேறாக வெடுத்துத் தேக்கிலையில் வைத்து, அம்பிற்கோத்து அழலிற் பதமுறக் காய்ச்சி வாயிலிட்டுப் பல்லினாலே மெல்லமெல்ல அதுக்கிச் சுவைபார்த்து, நற்சுவையுடைய * கொழுவிய மாமிச முழுவதையும் தேக்கிலையிற் றைத்த கல்லை (தொன்னை) யில் வைத்துக்கொண்டு, சுவையில்லாத தனவற்றை வெளியே யுமிழ்ந்துவிட்டு, இளந்தளிர்களையும் மலர்களையும் கொய்து தலையிற் சூட்டிக்கொண்டு, அபிஷேகத்திற்கு ஜலத்தை வாயில் முகந்துகொண்டு, மாமிச வுணவையிட்ட தேக்கிலைக் கல்லை யொரு கையிலும் அம்பும் வில்லும் மற்றொருகையிலுங் கொண்டு அதிவிரைவில் சீகாளத்தி யப்பரிடந் திரும்புகிறவர், என்னுயிர்த் துணையான இறைவர் மிக்கபசியால் உடலிளைத்தாரோ, கொடிய மிருகங்களாற் பயமுற்றாரோ வென்று பதைத்து தன்குஞ்சுக் குணவு கொண்டு திரும்பும் பறவைபோலத் தன்மனமும் பிற்படும்படி வேகத்துடன் முற்படவோடி எம்பெருமானைக் குறுகி, கொடியேன்வரக் காலந்தாழ்ந்ததால் பசிமிகுந்து வருந்தினீரோ வென்று மனங்கரைந்து, திருமுடிமேற் சாத்தியிருந்த பத்திர புஷ்பங்களைச் செருப்பணிந்த காலினாலே தள்ளி, வாயிற்கொணர்ந்த ஜலத்தினால் உடலேபன்றி உள்ளமுங் குளிரும்படி அபிஷேகித்து தமது தலையிற் கொணர்ந்த புஷ்பங்களையும் பத்திரங்களையும் இறைவர் தலையை யுயர்த்தி வளைத்துச் சூடி, இலைக்கலத்திற் கொணர்ந்த இறைச்சி யுணவைத் திருமுன்னர் வைத்து இனிய வார்த்தைகள் சொல்லி உண்பித்து இன்பக்கடலிலாழ்ந்து பிரியமாட்டாமல் அருகே நின்றிருந்தனர்.

அதற்குள், வேடர்கள் திண்ணனாரைக் காணாமல் மிகப்பயமெய்தி, காடு முழுவதுந்தேடி, மலையில் ஆலமர நிழலி லிருக்கின்ற சிவலிங்கப் பெருமானுக் கருகே நீலமலைபோல நின்றிருக்கக் கண்டு அருகேசென்று, ஐயனே! நீ யெங்களைவிட்டு மலையில் வந்ததென்ன காரணம். நாங்கள் ஏதாவது தவறு செய்தோமா. சூரியன் உச்சியைக் கடந்தனன். பசியோடு இங்கிருக்க வேண்டாம் வருகவென திண்ணனார் அவர்கள் சொல்லியவற்றிற்கு ஒன்றும் மறுமொழி புகலா திருந்தமையில், வேடர்கள் வருந்தி, அரசனே! எங்கண்மேல் யாது கோபமோ, தெரிவிக்க வேண்டுமெனக் கேட்க, அதற்கும் ஒன்று முரையாடாது சிவலிங்கப் பெருமானையே பார்த்துக் கொண்

* கொழுவிய—எ-து—கொழுத்த.

டிருக்க, அவ்வேடர்கள் இவர்க்கு நம்மிடங் கோபமன்று. இது வேறென்னக் காரணமென்று மயங்கி, இறுதியில், இத்தெய்வம் இவனிடத் தேரியிருக்கின்றதோ யாதோ அறியோம். நாம் எவ்வளவு காரியஞ் செய்யினும் நம்மோடுடன் வரான். நம்முடைய அரசன் நாகனுக்கு யாது சொல்வோம். தத்தை என் மகனெங்கே யென்றால் அவனுக்கு என்ன விடையிறுப்பது எனப்பலவாறு யோசித்து, இறுதியில் நடந்த விடயத்தை நாகனிடம் தெரிவித்தால் அவன்தக்க படியே உபாயஞ்செய்து திண்ணனை யழைத்துவரக் கூடுமெனுந் தீர்மானித்துடன் சென்றனர். உடனே சூரியன் மேற்கடலி லமிழ்ந்தனன். இருள் எங்கும் நிறைந்தது, மாணிக்கங்கள் பேரொளி செய்தமையின் எம்பெருமானிடத் திருந்த திண்ணனுருக்கு ஒரு சிறிதும் இருளில்லை ஆயினும் துஷ்ட மிருகங்கள் துன்ப செய்யுமென் றஞ்சி, கூர்மையான அம்பு பூட்டிய வில்லைக் கையிலேற்று மறந்துங் கண்ணிமையானது இராமுழுதுங் காளத்தி நாதரைக் காத்துக்கொண்டே யிருந்து பொழுது புலர்கையில் இறைவருக்கு * ஊனமுது சேகரிக்க வேட்டைமேற்கொண்டு காட்டிலிறங்கினர்.

இது நிற்க, சிவகோசரியார் என்பவர் அருள், பொறுமை அறிவு, விரதம், சிவபக்தி, அவாவின்மை, கல்வி, உண்மை முதலிய நற்குணங்களே உருவாக வுதித்தவர், தமக்குத் துன்பு செய்வோரையும் இன்பு புரிவோரையும் சமமாக நோக்குபவர், மாதர்கள்வலியப் புணரவரினும் தாயெனக்கருதித் தடுக்கு மியல்பினர், ஓடும், பொன்னும் ஒப்பெனப் பாராட்டுபவர், சிவபெருமான் திருவடித் தாமரையில் வேதாகம விதிப்படி பூசை புரிதலைத் தொழிலாகக் கொண்டவர். அதிகாலையி லெழுந்து பொன்முகரி நதியில் மூழ்கி, திருப்பள்ளித் தாமமுந் திருமஞ்சனமுங் கொண்டு நாகலிங்கப் பெருமானைப் பூசிக்க † நண்ணுபவர், இவர் பூஜைக்குரிய உபகரணங்களோடு சிவநாமங்களை யுச்சரித்துக் கொண்டு சந்நிதியடைய, சிவலிங்கப் பெருமானுக் கருகே ஊன்கள் சிந்தியிருக்கப் பார்த்து, மனநடுக்க மெய்தி நாற்றிசையும் பார்த்து, இக்கொடுந் தொழிலும் எம்பெருமானுக்குச் சம்மதமோ. ஐயோ! இக்கொடுமையை வேடுவரே செய்திருப்பார்கள். இதனை நல்லார் கண்டால் உடனே யிறப்பார்களே, நான் மகா பாவியாதலின் சகித்துக்கொண்டு நிற்கின்றேன் என்று பலவகையாகச் சொல்லி வருந்தி யழுது, சிவார்ச்சனை செய்ய வேண்டியபொழுது நீடிக்கின்றதாற் பயனில்லை யெனக் கருதி, அப் ‡ புலால் முழுவதையும் விளக்கி யெறிந்து சாணந் தெளித்து, மீண்டும் பொன்முகரியில் ஸ்நானஞ்செய்து வேதமந்தி

---

* ஊனமுது—எ-து—மாமிசச்சாதம்.

† நண்ணுபவர்—எ-து—அடைபவர்.

‡ புலால்—எ-து—மாமிசம்

ரத்தாற் புண்ணியாஹவாசனஞ் செய்து, உருத்திர மகா மந்திரத் தால் சிவபெருமானை யபிஷேகித்து மலர்களா லர்ச்சித்து, திருமுன் னின்று கைகளைச் சிரமேற் கூப்பி இருகண்களில் ஆநந்தபாஷ்பம் பெருக்கி உடல் சிலிர்த்து நெருப்பிற்பட்ட அரக்குபோல மன முருகி நாத்தழும்பேற ஏகமனதோடு சாமகீதம் பாடி, பலமுறை பிரதக்ஷிணஞ் செய்து நமஸ்கரித்து அரிதில் விடை கொண்டு சிவத் தியானத்துடன் தமதிருக்கை சார்ந்தனர். வேடர்கள் முன்புரிந்த தவப்பயனு யுதித்த திண்ணனார் திருத்தொண்டின் செயலைக் கூறு வோம்.

சிவார்ச்சனையிலேயே மனம் பதிந்த திண்ணனார் பன்றியையும் மானையும், அம்பாலெய்து கொன்று பண்டுபோற் கொழுவிய † தசை களைப் பதஞ்செய்து கொம்புத்தேனை மிகுதியாகப்பெய்து ஏனைய உபகர்ணங்களோடு கொண்டு, தேவர் பசியால் வருந்துவரேனுங் கலக்க மிக்குடையவராய், தா மெய்யும் அம்பின் வேகத்திலுங் கடிது சென்று இறைவரைப் பூசித்து உணவுட்டிக் கடல்போலும் பேரன்புடையரராய் நாகலிங்கப் பெருமா னருகே நின்று கொண்டி ருந்தனர். அந்தவேளையில், வேட்டைக்குத் தம்முடன் காடுவந்த வேடர்கள் திரும்பி உடுப்பூரை யடைந்து திண்ணனார் செய்தியைச் சொல்லக் கேட்ட பிதாமாதாக்கள் பெரிதும் மனவருத்தங்கொண்டு நாகலிங்கப் பெருமானிடம் நின்றுகொண்டிருக்கும் புதல்வர் பால் ‡ நணுகி, அநேகவகையால் சுவாதீனப் படுத்திப் பார்த்தும் அவர் கட்கு வசப்படாமல் இருத்தல்கண்டு, இனியாது செய்வதென்று மனநொந்து மைந்தரைப் பிரிந்து சிந்தை வருந்தி வந்தவழியே திரும்பிக் குறிஞ்சி யுகுந்தனர். திண்ணனாரோ தன் தாய்தந்தையர் வந்ததும் சென்றது முதலிய செய்திகள் சிறிது முணராது, சிவ பெருமானிடத்திற் பொருந்திய மனத்துடன் பகற் காலமெல்லாம் மிருகங்களை வேட்டஞ்செய்து இறைவருக்கு அமுதூட்டியும், இராக் காலமெல்லாம் துயில்கொள்ளாது மிருகாதி பயங்கள் அண்ண லாருக் குண்டாகாமல் அம்பு பூட்டிய வில்லேந்தி அருகே நின்று காத் தும் திருத்தொண்டு புரிந்தும் வந்தனர். சிவகோசரியாரோ நிய மனப்படி நாடோறும் பூசிக்க வருகையில் திருமுன்னே ஊன்கள் சிந் திக் கிடக்கக் கண்டு அழுதழுது மனம் வருந்தி அவற்றை விளக்கிப் பரிசுத்தஞ் செய்து சிவபெருமானை யர்ச்சித்துத் துக்க சாகரத்தில் மூழ்கி மனநொந்து கிடந்தனர். இவ்வாறு ஐந்து தினங்க ளகன்றன சிவபெருமான் சிவகோசரியார் மனவருத்தத்தை யகற்றத் திருவுளங் கொண்டு அவர் கனவிலே யெழுந்தருளி மேலான தவமுடைய சிவ வேதியனே! நீ நம்முன்னே இருக்கக்கண்டது மாமிசமெனக் கருதி

† தசை—எ-து—இறைச்சி

‡ நணுகி—எ-து—கிட்டி

வருந்தாதே. அதுவே நாமுண்ணற்குரிய பெறுதற்கரிய அமுதமென்றறிக. அதனை நமக்கு ஊட்டுவோன் திறத்தைச் சொல்வோம் கேட்பாயாக பல தீர்த்தஸ்நானமும் அரிய விரதங்களும் நல்லதானங்களும் செய்து பெற்ற நல்லழகுடைய புதல்வன் மீது தாய்க்குண்டாகிய புதிய அன்பினு மேலாகிய அன்பு எனக்கு அப்புண்ணியன் பாலுள்ளது. நம்முடைய சிரசி லணிந்துள்ள மலர்களை செருப்பணிந்த காலினாலே மாற்றுங் காலத்தில், ஓரிளங் குழந்தை தன் அழகிய கையினால் முலையை வருடப்பெற்ற தாயின் மனம்போலும் பெரிதும் மனமுருகின்றோம், அவர்வாயிற் கொணர்ந்து திருமஞ்சனமாக என்மே லுமிழும் நீரானது ஆற்றுநீருமன்று முனிவர் அபிடேகிக்கும் மந்திர தீர்த்தத்திலும் மிகமேலானதென்று சொல்லத் தக்கது. அதுவே மேனோக்கி யெழுகின்ற பேரன்பின் மயமாம் வியாக்கிரபாதர் முதலிய முனிவர்கள் சகஸ்திர நாமார்ச்சனை புரியும் தேன் பொருந்திய சிறந்த மலர்களிலும், அவன் கழுத்தை மிகவும் வளைத்து அணிகின்ற மயிர்களோடு சேர்ந்த மலர்கள் மிக மேம்பட்டனவாம். இந்திராதி தேவர்கள் செம்பொற் பாத்திரத்தில் எமக்கு நிவேதிக்கும் தேவாமுதமாயினும், அவன் முற்படத் தன்வாயிற் பெய்து ருசிபார்த்த சுவையோடும் இளஞ்சூட்டோடுங்கூடிய இறைச்சியை யுண்ட பின்னர், வேம்பும் விடமுமாயின. அவன் என்முன்னின்று அன்போடு வாய்திறந்து பேசுஞ் சொற்களைப்போல, பஞ்சேந்திரியங்களை வெறுத்த முனிவர் பாடுகின்ற சாமவேத கானமும் இனிதாகவில்லை. அவன் மனமே எமக்குத் திருக்கோயில், அவன் வார்த்தைகள் வேதமொழிகள். அவன் செயல்களெல்லாம் புண்ணிய கருமங்கள். இதற்குச் சிறிதுஞ் சந்தேகமில்லை. அன்பனே! அவன் நிலைமையை நாளையே உனக்குக் காட்டுகின்றோம். நீ அவனறியாத வகையாக அயலில் ஒளித்திருந்து காணக்கடவாய், இனி மனத்துயர் விலகுக வென்று கூறி மறைந்தருள, சிவகோசரியார் சொப்பன நீங்கிச் சாகர மெய்தி இறைவர் திருவாக்கை கருதி அதிசயித்து, சூரியோதய காலத்திற்கு முன்னரே சென்று பொன்முகரியில் மூழ்கி நித்திய கருமங்களை முடித்து, சிவசந்நிதி யடைந்து நியமானப்படி பூசையியற்றி, அந்தப் பரிசுத்தமாகிய நாகலிங்க மூர்த்தியின் பிற்பக்கலில் தெரியாமல் ஒளித்திருந்தனர்.

ஆறாந்தினத்தில், திண்ணனார் நாகலிங்கப் பெருமானுக்காக வேட்டமாடி அமுதங்கொண்டு இறைவர் பசித்திருப்பாரென்னுங் கருத்தோடு விரைந்து திரும்புகையில், வழிலே துன்பங்காட்டத் தக்க சகுனங்கள் கண்டு, இத்துர் நிமித்தங்கள் உதிரங்காட்டத் தக்கவை. என் கண்மணியாகிய தெய்வத்திற்கு யாது துன்பம் உண்டாயிற்றோ. அறியேனே யென்று மனக்கலக்கங்கொண்டு அதிக வேகமாய் நாகலிங்கப் பெருமானையடைய, எம்பெருமான் (மறைந்து கொண்டிருக்குஞ் சிவகோசரியாருக்குத் திண்ணனார் அன்பைக்

காட்ட விரும்பி,) தமது வலத் திருக்கண்ணில் உதிரவொழுக விருந்தலைத் திண்ணனார்கண்டு, வாயிலிருந்த திருமஞ்சன நீரொழுகவும், கையிலுள்ள மாமிசவுணவு சிதறவும், மற்றொரு கையிலேந்திய அம்பும் வில்லும் விழவும், சிரமிசைக் கொணர்ந்த திருப்பள்ளி * தாமஞ் சிந்தவும், சூத்திரமகன்ற பதுமைபோலத் துணுக்குற்று நிலத்தின் மேல் விழுந்து, நெடுநேரம் உயிர் நீங்கினார் போலிருந்து ஒருவாறு தெளிந்தெழுந்து நீங்காத துன்பமானது மனதைக்கொள்ளை கொள்ள, வாய்விட்டழுது, மீண்டும் வீழ்ந்து புரண்டழுது பின்னரெழுந்து தமது முகத்தில் உதிரமொழுகவும் மார்பு வீங்கவும் கைகளாலடித்துக் கொண்டு, தலைபிளக்கவும் கைகள் சிதையவுங் கற்களில் மோதி, எம்பெருமானுக்கு இத்துயரம் என்பகைஞரான வேடர்களால் உண்டாயிற்றோ? இம்மலையிலுள்ள துஷ்ட மிருகங்களால் விளைந்ததோ அறியேனே அப்பகையை யானறிந்தால் உடனே உயிர்க்கவராது விடுவேனோவென்று நெடுந்தூரம் ஓடி, வேடரையாவது, மிருகங்களையாவது காணப்பெறாமல் திரும்பிவந்து, மலையில் எனக்குக்கிடைத்த மரகதமே! செஞ்சொற்குன்றமே! எந்தையே! எம்பெருமானே! உமதுகண்ணில் உதிர மொழுகுதற்குக் காரணமியாது? சிறிதும் திருவாய் மலர்ந்தருளா திருக்கின்றீர் என்றுகூறி, உயிர்சோர்ந்து பெருமானைச் சமீபித்து, கையினார் பலமுறை துடைத்தும் சோரி சோரிவது நில்லாமையின், சிவலிங்கத்தை இறுகத் தழுவிக்கொண்டு பெருங் கூச்சலிட்டு நெடுநேரங் கதறி, பச்சிலை மருந்தைப் பிழிந்தால் உதிரம் நிற்குமென்று கருதி அதனைத் தேடப் போய், காடு முழுதுந் திரிந்து கண்ட கண்ட இலைகளையெல்லாம் பறித்து வந்து கண்ணிற் பெய்து பார்த்து உதிரம்வடிந்து கொண்டே யிருந்தமையின் உயிர் சோர்ந்து இனியாது செய்வேனென்று நெடுநேரம் யோசித்து ஊனுக்கு ஊனிடல் என்னும் பழமொழி ஞாபகத்திலுதிக்க, தம்முடைய கண்ணை வாங்கி இறைவன் கண்ணிலமைத்தால் இதுமாறுமென்று மனத்திடங்கொண்டு தமது கண்ணைப்பறித்து அண்ணல் கண்ணில் வைத்தவுடன் சிவபெருமான் திருவிழியினின்று உதிரஞ் சிந்துதலை நிறுத்த, திண்ணனார்கண்டு பேரானந்தக் கடலில் மூழ்கி, தேள்கொட்டிக் கூத்தாடி, திசைகள் குறுங்கச் சிரித்து வாயில் வந்தபடி சந்தோஷப் பாடல்களைப்பாடி, கைகொட்டி, ஆநந்தக் கூத்தாடித் துள்ளித் துள்ளி யாரவாரித்தார். ஆ! ஆ! நான் செய்த காரியமே நல்ல காரியமென்று அளித்தார்.

இவ்வகையாகத் திண்ணனார் கழிபேருவகை கொண்டிருக்குஞ் சமயத்தில், நாகலிங்கப் பெருமான் அவருடைய அன்பின் * மிகையைச் சிவகோசரியாருக்கு மேலுங் காட்டவிரும்பி, மற்றொரு திருவிழியிலும் செந்நிறந்தங்கிய உதிரத்தை யொழுகச்செய்ய, அது

---

* தாமம்—எ-து—கொன்றை மாலை

திண்ணனாருக் குற்ற சந்தோஷத்தைச் சடுதியில் குறைத்தது. எரி நரகிற் கிடந்து வருந்தி அதினின்றேறி மோக்ஷமடைந்தவன், மீண்டும் அதிலேயே வீழ்ந்தார்போல, திண்ணனார் தமக்குற்ற உவகைமாறி எல்லையில்லாத துக்கமெய்தி, பின்னர்த் தம்மிடத்தில் கைதேர்ந்த மருந்திருத்தலின் மனமாழாது தெளிந்தார். இன்னும் எனக்கோர் கண்ணிருக்கின்றது. ஆதலால் இதற்குப் பயப்படேனென்று, அதனைத் தோண்டிய காலத்தில் நாகலிங்கப் பெருமான் திருவிழி யிருக்குமிடத்தை யறியவேண்டிய, தமது செருப்பணிந்த காலை ஊறுபட்ட இறைவர் திருவிழியி லூன்றிக்கொண்டு, தமது கண்ணில் அம்பினை யூன்றினர். அக்காலத்தில், அருட்பெருங் கடலாகிய சிவபெருமான் மனம் பொறாதவராகி, வேதமொழிகள் தோன்றிய தமது திருவாயைத் திறந்து "நில்லு கண்ணப்ப நில்லுகண்ணப்பவென், னன்புடைத் தோன்ற னில்லுகண் ணப்பவென், றின்னுரை யதனொடு மெழிற் சிவலிங்கந், தன்னிடைப் பிறந்த தடமலர்க் கையா, லன்னவன் றன்கை யம்பொடுமகப் படப்பிடித், தருளினனருளலும் விண் மிசைவானவர் மலர் மழை பொழிந்தனர், வளையொலி படகந் துந்துபி கறங்கின தொல்சீர் முனிவருமேத்தின, ரின்னிசை வல்லே, சிவகதி பெற்றனன் றிருக்கண்ணப்பனே" நக்கீர தேவரருளிய கண்ணப்பதேவர் திருமறம். நில்லுகண்ணப்பவென மும்முறை மொழிந்து, சிவலிங்கத்தினின்று தோன்றிய திருக்கரத்தால் திண்ணனாரைப் பிடித்துக்கொள்ள, பிரமாதி தேவர்கள் புஷ்பமாரி சொரிந்தனர். அப்பொழுது வேடர் தலைவராகிய திண்ணனார் தமது கையிலிருந்த அம்பினை யகலவெறிந்து சிவபெருமானுடைய திருவடித் தாமரை நீழலிலமர்ந் தருளினர். வைதிக சைவராகிய சிவகோசரியார் அதிசயமுற்ற மனமுடையவராய்ப் பரமசிவனைப்பணிய, நீலகண்டராகிய சிவபெருமான் அந்த வஞ்சகமற்ற நெஞ்சுடைய சிவகோசரியாரைக் கிருபாநோக்கஞ்செய்து, நெருப்பிடை நின்று மனமொடுங்கி நெடியதவம் புரிந்தவர்களுக்கும் அடைதற்கரிய தமது திருமேனியில் அடக்கிக் கொண்டனர். அன்று முதலாக உலகினர்யாவரும் சிவபெருமான் "கண்ணப்ப" வெனக். கூறியதையே காரணமாகத் திண்ணனாரைக் கண்ணப்பர் என்று சொல்வாராயின ரென்று, சந்திரசூட முதலியவற்றை மறைத்து வந்த விடசங்கமராகிய சிவபெருமான் சொல்லக்கேட்ட, யாதவமன்னன் அவரைப் பணிந்து இன்னும் ஓரரிய சரிதையைக்கேட்க விரும்புகின்றேனென வேண்ட, இனி நக்கீரனார் சரிதையைச் சாற்றுகின்றோம் கேட்பாயாக வென்று, தவவடிவேற்றுவந்த சங்கரர் சாற்றலாயினர்.

கண்ணப்பச்சருக்கும் முற்றிற்று.

---

* மிகை—எ-து—மிகுதி



நக்கீரர் சிவா நுக்கிரகம் பெறல்.

## நக்கீரச்சருக்கம்.

---

கலிவிருத்தம்.

தீதற உரைத்தனஞ் சிலைவல கண்ணப்பன்
காதைநக் கீரனார் கதைவி ளம்புதும்
யாதவ மனனமர்ந் தினிது கேளென
மாதவ வடிவருள் வள்ளல் கூறுவான்.

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

அமுதுறழ் தமிழொண் முத்த மையசந் தனமெல் வாசங்
கமழ்குளிர் தென்ற லென்று கரையரும் பொருள் படாம
லிமிழ்கடல் வரைப்பெ லாந்தோன் றெண்பொருள் படுநா டெள்ளித்
தமிழ்முதல் பிறக்கு நாடாய்த் தயங்குமாற் பாண்டிநாடு.

தென்றமிழ்ப் பாண்டிய நாட்டில், சோமசுந்தரப் பெருமான் அறுபத்து நான்கு அற்புதத் திருவிளையாடல்கள் புரிந்த மதுராபுரியில், கலைமக ளுருவா யிலகிப் பூமிமுழுதும் புகழ்நிறுத்திய பொய்

யடிமை யில்லாத புலவராகிய நக்கீரர், கபிலர், பரணர், முதலிய நாற்பத்தெண்மர் புலவர்களும் ஒருகாலத்தில், சுந்தரேசப் பெருமான் றிணையடி பணிந்து, இறைவரே! யாவரும் எங்களிடம் வீண் வாதஞ் செய்யாமல் அவ்வவர் புலமையை யளவிடுங் கருவியாகச் சங்கப்பலகை யொன்று தந்தருளவேண்டுமென விண்ணப்பிக்க சோமசுந்தரக்கடவுள் புலவர் வடிவேற்று, முழவளவிற் சதுரமாகிய பலகையொன்றனைக் கொடுத்து, இஃது உம்மை யொப்பார்க்கு முழம் வளர்ந்திடங் கொடுக்கும். இதுவேயளவிடு கருவியெனச் சாற்றி மறைய, புலவர்கள் மனம் பொங்கி ஆலயத்தின் வடமேற்கிலே வங்கிய சேகரன் தங்களுக்காகக் கட்டுவித்த சங்கமண்டபத்தில் அப்பலகையை யமர்த்தி அதிலிருந்துகொண்டு, தர்மார்த்த காமமோக்ஷமெனும் சதுர்வித புருஷார்த்தங்களையும் புதிய நூல்களால் வெளியிட்டு, நவரசகற்பனலங்காரங்கள் எங்கும் பரவப்பல பிரபந்தங்களாக்கி, சோமசுந்தரக் கடவுளே இறையனாரெனுந் திருநாமங் கொண்டு தங்களுடன் ஒரு புலவரா யமர்ந்திருப்பச் செந்தமிழ் மொழியைத் தேயமுழுதும் ஐயந்திரிபு அறியாமையெனும் முக்குற்ற மகலப் பக்குவமாகப் பரப்பினார்கள்.

அந்நாளில், சங்கப்புலவரைத் தனக்குத் துணைவராகக் கொண்டு அவர்க்குவேண்டிய சிறப்புகளை மிகுதியாகச் செய்து அவர்பால் பேரன்பு கொண்டு நாடாண்டவங்கிய சூடாமணி பாண்டியன் வசந்த காலத்தினமொன்றில் தன் மனைவியுடன் மேன் மாளிகையில் ஏகாந்தமாகவிருக்கையில், இளந்தென்றலோடு கலந்த ஒரு திவ்விய மணம் வீச, அப்பாண்டியன் அது தன்மனைவியின் கூந்தலினிது மணமெனக்கருதி விம்மிதமுற்றவனாய், கூந்தலுக்கு இவ்வாசம் இயற்கையோ செயற்கையோவென மயங்கி, பிறரறியாது மனத்தே வைத்து, யான் சந்தேகித்த பொருளை விளக்கிச் செய்யு ளியற்றும் புலவர்க்கு இது கொடுக்கப்படுமென்று, ஆயிரம் பொன்னை ஓர் முடிப்பாக்கிச் சங்கமண்டபத்தின் முன்கட்டி வைத்தனன். அரசன் கருத்து பல புலவர்க்குந் தோன்றாமையின் பல பொருள்களமைத்துப்பாடிப் பாண்டியன் முன்பகர்ந்து, அவை தன் கருத்தல்லவென மறுக்கப்பட்டு வீணே செல்ல, அக்கிழி அங்ஙனமே அறுக்கப்படாதிருந்தது. அச்சமயத்தில், சனி உரோகணி நக்ஷத்திரப் பிரவேசமாக, சூரிய சந்திர கிரகணங்கள் முறையே அமாவாசை பூரணைகளில் அடுத்துப் பதினைந்து நாட்களில்வர, அங்காரகன் முற்பட்டுச் சுக்கிரன் பிற்பட்டமையின், மழையின்றித் தானிய விளைவு குறைந்து நாடெங்கும் பசியும் பட்டினியுமாகி பலரிறந்தனர். பிழைத்திருந்தாரினும் சிலர்க்கு உணவுகிடையாமல் நரமாமிசங்களையும் தின்னத் துணிந்தனர். குழந்தையின் கையிலிருந்த உணவைத் தாயர் பறித்துண்டார்கள். ஆடுகளுந் தின்னாத தழைகளையுஞ் சிலர் தின்றார்கள்.

அவ்வறுமைக் காலத்தில், சோமசுந்தரப் பெருமானை யர்ச்சிக்கும் ஆதிசைவர்களில் தலைமைபெற்ற தருமியென்பவர் உடல் தளர்ந்து உயிர்காக்கும் வழியிங்கில்லை. எத்திசை யாயினுஞ் சென்று க்ஷேமமான நாட்டை யடைவேனென்று மனங்கொண்டு, திருக்கோயிலையடைந்து சோமசுந்தரக் கடவு ளருகேபோய், தாயைக் காட்டினுந் தயாமூர்த்தியே! நான் இனி இங்கிருந்தால் இறப்பேன். வேற்றுத்தேயஞ் சென்று பிழைத்திருந்து நாடு செழித்தபின் ஈண்டடைவே னென்று விண்ணப்பித்து வணங்கியழுதனர். சோமசுந்தரக்கடவுள் அதனைக்கேட்டு வருந்தியழாதே. யாம் சொல்வதைக்கேள் அன்பனே! பாண்டியன் தன் கருத்தை ஒரு பாடலினால் வெளியிட்டவர்க்குக் கொடுப்பதென்று, சங்கமண்டபத்தில் ஓராயிரம் பொன் கொண்ட கிழியொன்றுகட்டி யிருக்கின்றனன். இந்தப்பாடசாலை யரசனுக்குச் சொல்லி அக்கிழியை நீ யடைக வென்று, "கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத்தும்பி, காமஞ் செப்பாது கண்டது மொழிமோ, பயிலியது கெழிஇய நட்பின் மயலியற் செறியெயிற்றரிவை கூந்தலி னறியவு முளவோ நீ யறியும் பூவே."- எனுந் திருப்பாசுரத்தை யளித்து விடைதந்தனுப்ப, தருமி உடனே திரும்பி வங்கியசேகர பாண்டியனை யடைந்து அச்செய்யுளை யோதினர். அதுகேட்ட பாண்டியன் தன் கருதின்படி அக்கவியிருத்தலின் மிகக்களிப்புற்று, நீர் சங்கப்புலவரிடஞ் சென்று அரங்கேற்றுகவென, தருமி அரசன் விருப்பின்படி சங்கப்புலவர் பாற்சாற்ற அவர்களியாவரும் மகிழுறுந்தருணத்தில் கல்விச்செல்வமிகுந்த நக்கீரதேவர் இறுமாப்புடன் இந்தசெய்யுள் குற்றமுடைத்தெனக்கூறினர்.

தருமி அதனைக்கேட்டவுடன் வாட்டமெய்தி ஓட்டமாகச் சுந்தரேசப்பெருமான் சந்நிதியடைந்து தொழுது இந்தச் செய்தியையிசைப்ப, எந்தையாகிய இறைவர், ஓர்புலவர் வடிவங்கொண்டு சங்கமண்டபத்தை யெய்தி, எம்முடைய குற்றமற்ற பாடலுக்குக் குற்றங்கூறிய புலவர்யாரென வினவ, நிலைபெற்ற புகழையுடைய நக்கீரர் நான் தான் குற்றங் கூறினேனென் றிறுமாப்புடன் கூறவும், புலவர் யாதுகுற்றமென நக்கீரர் கூந்தலுக்குச் செயற்கை மணமன்றி இயற்கை மணமில்லை யாகலின் இயற்கை மணமென்றது குற்றமாமென பெருமான் அரம்பையர் கூந்தலுக்கு இயற்கை மணமில்லையா வென, நக்கீரர் அதுவும் மந்தார மலரால் மணத்தலின் செயற்கை யன்றி யியற்கை யன்றென, சுந்தரேசர் நீ வழிப்படும் சீகாளத்தி நாதர் பக்கலிலமர்ந்த ஞானபூங்கோதையார் கூந்தலோவென, நக்கீரர் அதுவும் செயற்கை மணமுடையதே யெனச்சாதிக்கக் கண்டு, தமது நெற்றிக்கண்ணையுஞ் சடைமுடியையுங் காட்டியருள, நக்கீரர் நீர் உடல்முழுதுங் கண்காட்டினும் உமதுபாடல் குற்றமே சடையைக் காட்டி மயக்கவேண்டாம். பயந்து என் கொள்கையின் மாறேனென சோமசுந்தரப்பெம்மான் நக்கீரரைநோக்கி, அறிவிலியே! வேதங்களுந்

துதிக்கும் அம்பிகையின் கூந்தலை எம்மோடு மாறுபட்டுப் பழித்த மையால் நீ குட்டநோய் கொண்டு வருந்துகவெனக் கட்டளையிட நக்கீரர் சாலப்பயந்து சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து, கருணாமூர்த்தியே! நாயினேன் உணராது செய்த குற்றத்தைப் பொறுத்து இச்சாபம் விலகும்படி திருவருள் செய்ய வேண்டுமென வேண்ட, பெருமான் திருவுளமிரங்கி "நக்கீரனே! நீ கைலைசென்று தரிசித்தால் இக்குட்டநோயொழியுமென் றநுக்கிரகித்து ஆலயமடைந்து அந்தர்த்தானமாயினர். தருமி பொற்கிழி பெற்றுக் களித்திருந்தனர், மழை பொழிந்து நாடுவள மெய்தியது.

சிவபெருமான் சாபத்தால் தீப்பிணி சரீரத்திற் * கவிதல் கண்ட நக்கீரதேவர், இந்நோய் † முதிருமுன் கைலையைத் தரிசித்து நீக்கிக் கொள்ள வேண்டுமென்று கருதி புலவர்களைத் தனித்தனி கண்டு, அன்பர்களே! உங்களைப் பிரிந்து செல்லவேண்டிய என்னை மறவாதீர்களெனக்கூறி, நோயினிமித்தம் தூரமாக நிற்க அவர்கள் அஃதுணர்ந்து நெருங்கி அணைத்துக்கொண்டு கண்ணீரொழுக்கி மனங்கரைந்து துக்கித்து, நட்பமதி யுடைய உம்மைப்பிரிந்து வசிக்கும் நாங்களே பாவிகளென்று அழுதனர். நக்கீரர் அவர்களைத் தழுவி, நட்புக்கு ஒரு தேசத்தராகி உடன்கலந்து பழக வேண்டுவது அநாவசியம். அறிவு ஒத்திருப்பதே சிறப்பென் றுணர்ந்த பெரியோர்களே! என்பொருட்டு வருந்த வேண்டாம். போகின்றே னென்று விடைகொண்டு, அவர்கள் நாட்டமும் எண்ணமும் பின்றொடர்ந்து வர அங்கு நின்றகன்று, இனி எக்காலத்தில் மதுரையையும் சோமசுந்தரக் கடவுளையும் அங்கயற்கண்ணம்மையையும் சங்கப்புலவரையுங் காணப்பெறுவேன், தமிழினிமையை யார்பால் எடுத்துச் சாற்றுவேனென நினைந்து வருந்தி, பிரயாணப்பட்டு, சோழநாடு மகதநாடு தொண்டைநாடு இவற்றிலுள்ள சிவதலங்களையும் ஸ்ரீ பர்வதப், விருபாக்ஷம், கல்யாணபுரம், காசி, கேதாரமுதலிய வடநாட்டுத் தலங்களையும் தரிசித்து, நாளொன்றுக்கு ஒருநாக அதிவிரைவில் சென்று மநுஷ சஞ்சாரமில்லாத இமாசலத்தைச் சார்ந்து, சரீரத்தில் பிணி அதிகரித்தமையால் வருந்தி உள்ளங்கால் வெள்ளெலும்பாகத் தேய்ந்து செல்லும்போது, சாகரம்போல விசாலமான ஒரு நீர் நிலையைப் பார்த்து அதில் ஸ்நானஞ் செய்து நித்தியகடன் கழித்து, அதன் கரையிலே கிளைத்துத் தழைத்திருந்த தெய்விகம் பொருந்திய ஓராலமர நீழலில் சிவத்தியானஞ் செய்து கொண்டிருந்தனர். அவ்வால மரத்தின் கிளையினின்று நீங்கிய இலையொன்று பாதி நிலத்திலும் பாதி நீரிலுமாக வீழ்ந்தது, நிலத்தில் வீழ்ந்த பாதி பறவை வடிவும் நீரில்வீழ்ந்த பாதி மீனுமாகி, பறவை நிலத்திலும்

---

* கவிதல்—எ-து—வளைத்தல்.

† முதிருமுன்—எ-து—முற்றுமுன்.

மீன் நீரிலுமாக ஒன்றையொன்று தம்மில் மாறுபட்டு இழுத்தன. அப்புதுமையைக் கண்ட நக்கீரர் சிவத்தியானத்தினின்று தவறினவரானார். அப்பொழுது வடவாமுகாக்கினிபோலும் உதராக்கினியுடையதும். அருளென்பது ஒரு சிறிதும் அணுகப் பெறாததும் மேகத்தையும் இடியையுஞ் சேர்த்துப் பிரமதேவர் படைத்தாற் போன்றதுமாகிய ஒரு கரிய பெரிய பூதமானது தோன்றியது. கொலைத் தொழிலிற் பழகிய அப்பூதமானது தளர்நடை பொருந்திய இளங்கன்றைப் புலியானது கவர்ந்து சென்றாற்போல, நக்கீரதேவரை எடுத்துக்கொண்டு சென்று ஒரு மலையின் இருட் குகையில் தான் முன்னரே சிவபூஜையாதிகளில் வழுவின. தொளாயிரத்துத் தொண்ணூற்றொன்ப தின்மரை யடைத்து வைத்து, இன்னும் ஒருவன் வேண்டுமெனக் காத்திருந்ததால், இவரையும் அதனுள்ளடைத்து ஆயிரவராக்கித் தன் நியமனப்படி நீராடச் சென்றது.

முன்னரே அவ்விருட் குகையில் அடைப்பட்டிருந்த தொளாயிரத்துத் தொண்ணூற்றொன்பதின்மரும் தங்கள் புண்ணிய வசத்தால் தங்களோடு நக்கீரதேவர் வந்து சேர்ந்தன ரென்பதைச் சிறிதுந் தெரிந்து கொள்ளாதவர்களாகி, அவரைநோக்கி, இப்பூதம் ஆயிரம்பேரை ஒன்று சேர வுண்ணக்கருதி யிருந்தது. ஒருவர் குறைந்திருந்தமையின் நாங்கள் இதுகாறும் பிழைத்திருந்தோம். நீ வந்தபடியால் ஆயிரமெனுந்தொகை நிறைந்தது. இனி நம்மையெல்லாங்கொன்று நம்முடலால் தன் வயிற்றிலெழுந்த தீபாக்கினியை யவிக்கப்போகின்றது என மனம் வருந்தித் துக்கத்தோடு சொல்ல, நக்கீரதேவர் அவர்கள் கூறிய சொற்களைக் கேட்டுச் சிந்தித்து, எல்லோருக்கும் இன்பமுந் துன்பமும் எய்துவது இயற்கையே யாயினும் இவர்கள் துன்பத்தை விலக்குவதே நமக்குத் தக்கதாமென்று தீர்மானித்து, குறிஞ்சி நிலத்துத் தலைவரும், கிரௌஞ்சகிரி பிளவுறும்படி வேலாயுதத்தைச் செலுத்தியவரும், கடப்பமலர்மாலை விளங்கிய வலிய புயத்தையு முடைய முருகக்கடவுளின் அழகிய பாத தாமரைகளைப் பணிந்தால் துன்பமுழுதுஞ் சூரியனைக்கண்ட பனிபோலத் தொலையும். பன்னிரு திருத்தோள்களையுடைய அப்பகவானது ஷடாக்ஷரங்களையும் ஜபிப்போர் பலவகை நோய்களிலிருந்து விலகுவரென்பது ஆச்சரியமோ, அவர்கள் மாற்றுதற்கரிய பிறவிப் பிணிமாறி, வேதாகமங்களும் அளவிட்டுரைத்தற்கரிய மோக்ஷவீட்டிற் குடிபுகுந் திருப்பார்கள். பஞ்சமஹா பூதங்களின் வாயிலகப்பட்டு வருந்தும் உயிரைத் திருப்பி தமது சதங்கையணிந்த தாட்டாமரை நீழலில் இருக்கச்செய்யும் நமது செவ்வேளாகிய குமார சுவாமிக்கு இப்போது ஒரு சிறுபூதத்தால் இங்குண்டாகின்ற சிறு துன்பத்தைத் தீர்த்தல் எளிதன்றி அரிதன்று என்றிவ்வாறு கருதி, நக்கீரதேவர், ஒளிவீசுகின்ற வேற்படைதாங்கிய

சுப்பிரமணியப்பெருமான் பன்னிரு திருச்செவிகளும் ஆரப்பொருந்தும் அமுதமாகியும், யாவரோதினும் அவர்கள் வேண்டிய பொருள்களை விரும்பிய வண்ணமே இவ்வுலகத்தில் உதவுதாகியும், பாக்களுக்கெல்லாம் பெரிதுஞ் சிறந்து முன்னிற்பதாகியுமுள்ள "திருமுருகாற்றுப்படையை" போதித்துதித்தனர்.

உடனே, சண்முகநாதன் கன்னலும், அமுதும், தேனும், கசக்குமென்று சொல்லும்படி இனிமையான வள்ளிநாயகியாரது மதுரமான சொல்லையு மகற்றி, தம்மைநிகர்த்த புலவராகிய நக்கீர தேவர் சொல்லித் துதித்த திருமுறுகாற்றுப் படையெனும் தமிழ்ச் செய்யுளைத் திருச்செவியிலேற்று மிகவும் மகிழ்பூத்தருளி, பசுங்கடலிற் றோன்றிய செஞ்சூரியன்போல, மயில்வாகன ரூடராய் எழுந்தருளி, புலவர்பெருமானாகிய நக்கீர தேவரை அப்பூதம் உண்ணும்படி வருகையில், கதாயுதத்தாலடித்து, முடியை தகர்த்து வீட்டி, அவருடன் சிறையிருந்தயாவரையுஞ் சிறைவிடுத்துத்திருவருள்புரிந்தனர். அரசச்செல்வம் புத்திரப்பேறு, முதலிய போகங்களைக் கொடுத்து, நோய் வறுமை, பகைமை, துன்பம், பேய், துஷ்டகனவு, திருடர், அரா விஷம் என்னும் இவைபோன்ற சங்கடங்களை யெல்லாந் தவிர்க்கத் தக்க திருமுருகாற்றுப்படையைச் சொல்லிய புலவர் சிங்கமாகிய நக்கீரதேவர் குமாரக் கடவுளைப் பணிந்து கூறுகின்றார். ஆண்டவரே! அடியேன் கல்விச் செருக்கை நோக்கி ஆலவாயண்ணல் என் வடிவத்தை யெல்லாங் கவரத்தக்க இந்நோயெனக் குண்டாக சபித்தனர். யான் அஞ்சி நாயினேன் பிழையைப் பொறுத்தாட்கொள்ள வேண்டுமென, அதற்கவர் மனமிரங்கி நீ கைலையைக் காணில் இதனைத்தீரப்பெறுவாயென் றநுக்கிரகித்தனர். ஆதலால் கைலாய தரிசனஞ் செய்ய விரும்பி இங்கு வந்திருந்த எளியேனைப் பூதமானது துன்புசெய்ய வணங்கினவருக்கிணங்கி யனுக்கிரகிக்குந் தேவரீர் எழுந்தருளி அதனைத்தீர்த்தீர். அதுபோலவே அடியேனுக்குக் கைலாயத்தைத் தரிசிப்பித்து என்குட்ட வியாதியையும் விலக்கியருள வேண்டுமென விண்ணப்பஞ்செய்யவும், கந்தசுவாமியானவர் உனக்கு ஆலவாயுடையார் இன்ன கைலையென அளவுபடுத்தாமையின் தென் கைலையைத் தரிசனஞ் செய்யினும் நீயிப்பிணியினின்று தீருவையெனத் திருவாய்மலர்ந்தருளி, அருகே ஒரு பொய்கையைக்காட்டி நீ இதில் மூழ்கினால் தென்கைலையையடைவை யென்றருள் புரிந்தனர். தன் தலையாலே நடந்து சென்ற புனிதவதியார் (காரைக்காலம்மையார்க்) கன்றி ஏனையோர் இருகாலால் நடத்தலின் கைலைமலை கிடைத்தற் கெளிதோ வென்று, நக்கீரர் மீண்டும் முருகப்பிரானைப்பணிந்து நிற்ப, நீ எம்மைத்துதித்த இப்பிரபந்தத்தை யோதுவோர் இஷ்ட சித்திகளை யெய்துகவென்றும் கட்டளையிட்டு அந்தர்த்தானமாயினர்.

அவ்வா றருளப்பெற்ற நக்கீரதேவர் கந்தவேள் கழலிணையைச் சிந்தனை செய்து பணிந்து அப்பொய்கையில் மூழ்கி, மேற்கடலில் விழுந்த சூரியன் கீழ்க்கடலி லெழுந்தாற்போல, தென்கலை தெரியும்படி பொன்முகரி நதியில் எழும்பினர். முன்னேபுலவராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் பொன்னை மணிமுத்தா நதியிலிட்டுத் திருவாரூர்க் கமலாலய தீர்த்தத்தில் எடுக்கச்செய்த சிவபெருமானுடைய குமாரராகிய சுப்பிரமணியப் பெருமான் நக்கீரதேவராகிய புலவரைப் பொய்கையில் மூழ்கச்செய்து பொன்முகரி நதியில் மேல்வரச்செய்த தன்மை வியக்கத் தக்கதன்று பொன்முகரியி லெழுந்த புலவர் திலகர் தம்மேனியிலிருந்த குட்டநோய் விலகப்பெற்று விளங்கினர். தேவர்கள் மலர் மழை சொரிந்தனர். நக்கீரர் உள்ளத்தில் அன்பதிகரிக்க விழிகளில் நீர்சொரிய, கைகளைச் சிரமிசைக்கூப்பி, நாகலிங்கப் பெருமானையும் ஞானப்பூங் கோதையாரையும் பன்முறைவணங்கிப் பஞ்சாக்ஷரம் ஜபித்து அன்பின்மயமாய், கைலை வேறு காளத்தி வேறென்று கருதாது கைலைபாதி காளத்திபாதி யென்னும் ஒரு வெண்பா வந்தாதியால் துதித்து நின்றனர். சிவபெருமான் மகிழ்வுற்று யாது வரம் வேண்டுமெனக் கேட்ப, எம்பெருமானே! அடியேனுக்குற்ற உடற்பிணியை யொழித்தருளிய வகையே, அறிவிற்குற்ற ஆணவத்தையும் அகற்றியருளவேண்டுமெனப் பிரார்த்திக்க, சிவபெருமான் சத்திநிபாதத்தால் பந்தபாசங்களை யறவொழித்து, பன்றியாய் வந்த திருமாலுங்காண்டற்கரிய பாததாமரையி னீழலிலமர்த்தி யருளினரென்று, நக்கீரதேவர் சரிதையைக் கூறிய விடசங்கமரை யாதவமகாராசன் பணிந்து, இன்னுமொரு சரிதையைத் தேவரீரியம்ப விரும்புகிறேனென்ன, மான் மழு சதுர்புஜங்களை மறைத்து வந்திருக்கும் மகாதேவராகிய விடசங்கமர், அரசனே! இனி, கன்னியர் சரிதையைக் கழறுவோம் கேட்பாயாகவெனச் சொல்லத் தொடங்கினர்.

நக்கீரச் சருக்கம் முற்றிற்று.



கன்னியர் சிவபெருமான் கருணையைப் பெறல்.

## கன்னியர் சருக்கம்.

கலித்துறை.

மல்லன் ஞாலமோர் முடிமிசைக் கிடத்தலை மறந்த
தொல்லை நாகமொன் றழகிய சொக்கனு ரருளா
லெல்லை காணிய சூழ்கிடந் தனையவிஞ் சியின்மே
லல்லு லாமதி தவழ்திரு வாலவா யதன்கண்.

பாண்டிய நாட்டிலே மதுரைப்பதியிலே பொது மடந்தையர் மரபிலே மாதரியற்கை முற்று மமைந்த மாணிக்கவல்லியெனப் பெயரிய மங்கை யொருத்தி யிருந்தனள். அவளோ முத்துமாலைபோன்ற பல் வரிசையும் நீலரத்தினம் போன்ற கண்களும், நெடிய குழலும் ஒளி வாய்ந்த முகமுடையவள் அவள் தன்னழகாகிய தாம்பினுல், அரசிளங்குமரரென்னும் குடங்களைப்பூட்டி அவ்அவர்கள் மாளிகையிலிருக்கும் பொக்கிஷசாலை யென்னுங் கிணற்றில் விட்டு, திரவியமெனும் ஜலம் வற்றும்படி நாடோறும் மொண்டு பெரும் பொருள் சம்பாதித்து வாழ்கையில், புண்ணியவசத்தால் முலைமுகங் கறுக்கவும் உடல் விளர்க்கவும் நரம்புகள் பசப்பெய்தவும் கர்ப்பவதியாகி, திருமகள் கலைமகளெனு மிருவரும் சிவஞான மங்கையர்களாகி அவதரித்தனர் போலவும், வேதசிவாகமங்களே சிவஞானத்தை வெளிப்படுத்த

உருவேற்று வந்தாற்போலவும், உலகத்தார் யாவருஞ் சந்தோஷமெய் தவும், மன்மதன் தனக்குற்ற இறுமாப்படங்கவும், இரண்டு புதல்வியரை யீன்று, நீராட்டிப் பாலூட்டி ஆபரணங்கள் பூட்டி, தொட்டிலிற் கிடத்தித் தாலாட்டி தன்னிரு கண்மணிபோலக் கண்ணேறு படாவண்ணம் வளர்த்து வருகையில், அப்புத்திரிகள் அரிவைய ரிலக்கண மடங்கலும் அமையப்பெற்று, திருமகளிற் சிறந்த அழகினராகி கவிழ்ந்து இருந்து தவழ்ந்து நடந்து ஓடி நாளடைவில் வளர்ந்து பேதைப் பருவங்கடந்து * பெதும்பைப் பருவமெய்தி, கலைகளைக் கற்கும் காலமடைய, மாணிக்கவல்லி மனமகிழ்ச்சி மிகுந்து, தமக் கியற்கையாகவே புணரவேண்டிய கல்வித் தொழில்களை அவர்கள் கற்றுத் தேர்ச்சி பெறத்தக்க உத்தி யாதென் றுள்ளத்திற் கருதி, கண்டோருக்கு விரக மிஞ்சத் தக்க லீலா சித்திரங்களை மாளிகை முற்றிலும் எழுதுவித்தும், போக வோசை பயிற்றுகின்ற, மயில், புரு முதலிய பறவைகளையும் வீணை முதலிய இசைக் கருவிகளையும் அதிகமாகச் சேகரித்தும் அவ்விரு புதல்வியருக்குங் காமக்கல்வியோடு கானக் கல்வியையும் சிறந்தோரைக் கொண்டு பயிற்றுவித்தனள். அவையாவும் சூரியனுக்கு இருளைச் சேர்ப்பித்தல் போலப் பயனற்றவாறுயின.

மாணிக்கவல்லி பற்பல வகையாக அவர்கட்கு மிக முயற்சியோடு கற்பித்தபோதிலும், சிவபெருமான் அவ்வனிதை யருள்ளத்திலே விளங்கி, சிவாகமங்களென்னும் † அபரஞான வுணர்ச்சியையும். பந்த பாசங்களைப் பற்றறக் களையும் அநுபவமாகிய ‡ பரஞான வுணர்ச்சியையும், கொடுத்தருள, கண்ணிற் காணப்படுவனவும் காதிற் கேட்கப் படுவனவும் மனத்தில் எண்ணப்படுவனவும் வேறெவ்வகைப் பட்டனவும் சிவமாகவே எண்ணத்தக்கவ ராஞர்கள். மாயா கற்பனைகள் ஒன்றிலும் அகப்பட்டிலர். பலவிடங்களிலுந் தேடி, உண்மையான சிவனடியார்கள் தம் கண்ணெதிர்ப்பட்டால், அவர்களைப்பாடிப் பரவிப் பாதங்களைப் பணிந்து தொண்டு புரியும் செயலில் மேம்பட்டிருந்தார்கள். அவர்கள் கண்கள் காம வேட்கைக் குறிப்பையும், சொற்கள் வஞ்சக மொழியையும், மனம் பழிபடு செயலையும், கால்கள் பரத்தை வழியையும் அறிந்ததில்லை இன்னும் அம்மாதர்கள் உலக வார்த்தைகட்கு ஊமைபோலவும் சிவநாம மகிமையில் கலைமாதாகவும், கிருபா சமுத்திரத்திற்குக் காமியாகவும், பஞ்சேந்திரியங்களையும் அடக்குதலின் ஆமையாகவும் விளங்கினர். இவர்கள் பெதும்பைப் பருவமெய்தியும் காமவேட்கையில் பேதைமையராய், ஆதி மூர்த்தி

---

* பெதும்பை—எ-து—பதினொருவயதுபெண்.

† அபரஞானம்—எ-து—வாலஞானம்.

‡ பரம்—எ-து—முற்றுந்துறந்த.

யாகிய கடவுளை யுணரவேண்டு மென்னும் ஞானத்தால் பேரிளம் பெண்கள் போலாயினர். இம்மங்கையர் தங்கள் மதுரையில் சங்கப் புலவர்களில் சிறந்தோங்கிய நக்கீரதேவர், சந்திர சேகரராகிய சிவ பெருமானது தென் கைலாயத்தை யடைந்து அங்கே ஞானமயமாகிய கைலைபாதி காளத்திபாதி யென்னும் வெண்பாவந்தாதி யுரைத்ததும், ஆசையோடு சீகாளத்தி யப்பர் திருமேனியிற் கலந்ததும் சில சிவனடியார் சொல்லக் கேள்வியுற்று, பெருவிருப்பு கொண்டு நாமென்று தென்கைலையைச் சென்று சேவிப்போமென்னும் எண்ணத்தோ டிருந்து ஞானவந்தாதியை நாடோறும் நியமனமாகப் பாராயணஞ்செய்து, கண்ணிற் காணப்பெற்ற கண்ணப்ப நாயனாரைப் போலவே கேட்ட மாத்திரத்திற் சீகாளத்தியப்பர் ஆசைமிகுந்து உண்ணல் உடுத்தில் முதலியவற்றில் நினைப்பின்றிப் பித்தர் போன்றிருந்தனர்.

மாணிக்கவல்லி தன்மகளிர் சாதிமுறைமையை விட்டு விலகியதும் பரமே சுவரனிடத்திற்கொண்ட பக்தியும்கண்டு மனதிற் கோபங்கொண்டு கட்குடியன் அதனைக் குடியாதவனுக்குச் சொல்வதுபோலசொல்லுகின்றாள். அடி பெண்களே! ஒருமழை பெய்தகாலத்தில் உழுநர் தங் கொல்லையை விதைப்பதுபோல, இளைஞர்கள் உங்களை யவாவுஞ் சமயத்தில் பொருளைப்பெறாதிருந்தால் நாளை உங்கட்கு இளமை வருமோ! அஃதுள்ளபொழுதே பொருள் தேடவேண்டாவா? நீங்களெப்பொழுது வளர்வீர்கள், எப்போது முலைகளைப் பெறுவீர்கள், எப்பொழுது காமக்கலைகளைக் கற்பீர்கள், எப்பொழுது * காவினத்தையை யறிவீர்கள், எப்பொழுது உதவுவீர்களென்று கருதி வருந்தியிருந்த எனக்கு நீங்கள் எப்பொழுதுதான் உதவுவீர்கள். உங்கள் உதவி இவ்வளவுதானோ? இளைஞர்மார்பை யணையுஞ் செயலை யறியாத உங்கள் பூரித்தமுலைகள், கொடையாளி யல்லாதவனிடத்துள்ள பொன்னையும் பெருஞ்சபைக்குப் பயந்த அறிவிலி கற்ற நூலையும் ஆண்டகைமை யில்லாதவன் கையிலுள்ள வேலையும் நிகர்க்குமன்றி யாது பயனுறும்? உன்னைக்கண்டால் உயிரிருக்கும், காணாவிடிற் போம். உன்மேல் ஆணைப்படியென்று, பொய்க்கண்ணீ ரொழுக்கி பெரும் பொருளைக்கொண்டு ஆடவர்கட்கு ஆசையூட்டும் அறிவில்லாமல் மரப்பதுமை போன்றிருக்கின்றீர்களே. நீங்கள் என்வயிற்றிற் கர்ப்பமாய்ப் பொருந்தி என்வாயில் மண்ணைப் போட்டீர்கள். அழகு முழுவதையும் இழக்கச் செய்தீர்கள். இளைஞரை மயக்கி அவர்கள் செல்வத்தைப் பெற்று உங்களையீன்ற எனக்கு நீங்கள் செய்யவேண்டிய உதவியைச் செய்திலீர், ஐயோ! மணிமந்தர மருந்துகளாலும் யந்திரங்களாலும் வாலிபரை வசப்படுத்திப் பொருளைக் கிரகித்தால் நம்மிடம் வரும் அடியார்களுக்கும் சிவபெருமானுக்கும் மிகுதியாகப்

* காவினத்தை—எ-து—மருந்துண்டை.

பயன்படாதோ? கல்வியுடைய மெல்லியரே! உங்கள் தனங்கள் மார்பினின்று வயிற்றுக் கிறங்கியபின் உங்களைக் * காமுகர்கள் இச்சிப்பார்களோ? சிறிதும் அழகில்லாதவர்களும் ஆடையாபரணாதிகளால் அலங்கரித்துக்கொண்டு சிலரை மயக்கிப் பொருள் தேடுவார்களே, நீங்கள் பேரழகோடு கூடி உலகத்தைமுற்றும் மயங்கச் செய்யு நிலைமையி லிருந்தும் ஓரழகு மில்லாதவர்கள் போலவிருப்பது விவேகமல்லவே? உலகத்திலுள்ள பொதுமாதர்கள், காமுகராகிய ஆடவர்முன் ஆடையை யவித்துடுத்தியும், முலைகளும் மேலாடையும் குலுகுங்கும்படி நடந்தும், நாடகம் நடித்தும், நல்ல இசைப்பாடல் பாடியும் மோகசாகரத்தில் மூழ்கச் செய்வார்கள். நம்மவர்களெல்லாம், பெருஞ் செல்வரென்னும் யானைகளை நெடிய † உகிரங்குசத்தால் நிறுத்தி, தோளாகிய பாசத்தைப்பூட்டி, பூரித்த கொங்கையாகிய கட்டுத்தறியில் கட்டுவார்கள் என்று இத்தன்மையாக மாணிக்கவல்லி தன் குலதர்மங்களை அநேக வகையாக எடுத்துக்கூற, அக்கொடுஞ் சொற்கள் யாவும், கவிழ்த்த குடத்தின்மேற் பொழிந்த மழை நீர் போலொழிய குற்றமற்ற சித்தமுடைய அக்கன்னியர் சொல்லுகின்றார்கள்.

தாயே! மின்னல்போ லழியும் உடம்பினை வளர்க்கக் கருதி, நரகத்தினுல் விழுங்கி வெளியிடப்படாத தீச்செயல்களை நாங்கள் செய்யும்படி நீ போதிக்கலாமா? இப்பியி னிடந்தோன்றிய முத்தானது இப்பிக்குப் பயன்படாது தன்னை யணிபவருடலையே பொருந்துமாறு, நாங்கள் உனக்குப் பயனற்றவரானேம் செஞ்சடைப் பவள வண்ணராகிய சிவபெருமானையே யடைவோம். சிவபஞ்சாக்ஷரத்தை ஜபிக்கும் எங்கள் வாய், பாவிகளாகிய மனிதரை வருவிக்கத் தக்க வசிய மந்திரங்களை மீண்டும் ஜபியாது உடல்முழுதும் ஆயிரங்கணக்கான ஆபரணங்களை யணிந்தாலும் உடல்பாரமன்றி உடன் பருவதொன்றுண்டோ. சிவசின்னமாகிய உருத்திராக்கமணி யொன்றனை ஓரேநாள் உடலிலணிந்தாலும் எல்லாத் தீவினைகளும் ஒழியும். சந்தனம் புனுகுமுதலிய பரிமள வஸ்துக்களைப் பூசி நவத்துவாரங்க ளமைந்த மலபாண்டமாகிய சரீரத்தை அழகுசெய்தால் ‡ மலமகனுமோ. சிவபெருமானது திருவெண்ணீற்றை யணிந்தால் ஆணவாதி மலங்களும் அடியோடகலும் சூரிய சந்நிதானத்தில் இருள் நுழையாத வகையே சிவத்தியானம் பொருந்திய எங்கள்மனதில் அறிவையகற்றுங் காமநோய் அடையுமோ? தத்துவாதீதமாகிய தனியிடத்திலே சிவபெருமானைக் கண்டு மெய்யின்ப $ நுகரும் நாங்கள் மாளத்தக்க மனிதரைக்கலந்து பொய்யின்பத்தைப் பொருளெனக்கொள்வேமா? யானை

---

* காமுகர்—எ-து—நாகரிகர்.

† உகிர்—எ-து—நகம்.

‡ மலம்—எ-து—ஆணவம்—காமியம்—மாய்கை—முதலியன.

$ நுகரும்—எ-து—அனுபவிக்கும்.

யை யேறி நடத்துவோர் கழுதைமேலேறுவரா? சிவதருமங்களைக் கடைப்பிடித்த நாங்கள் உம்முடைய குலதர்மங்களைக் கொள்வேமா? இம்மை மறுமை யின்பங்களைப் பயக்கும் எம்பெருமானை வழிபடும் நாங்கள், பொய்ப்பொருளை † யவாவிப் ‡ புல்லிய அரசரைப் புகழ்வேமா? இளமையிலேயே தருமங்களை நடத்தாவிடின் முதுமையில் அது கைகூடுமா? உண்டபொருளை யுடனே மலமாகமாற்றும் உடலைப் போஷிக்கு நிமித்தமாகத் தீத்தொழில்புரிந்து திரியும் மனிதரை மக்களுட்பதரென்று மதிவாணர் கூறுவர். பொதுமகளிர் தம்மைநம்பிய ஆடவர்பால் மேலுறவு பாராட்டி உள்ளுறவின்றியே பொருளனைத்துங் கவர்ந்துகொண்டு அவரை நரகத்திற்கும் அனுப்புவதால், திருடரினும் பெருந்திருடான்றோ! குயில் காகத்துடன் ஒரு கூட்டிலிருந்தாலும், காகத்தின் செயலைக் கற்றுக்கொள்ளாதது போல நாங்கள் உம்மோடிருப்பினும் உமது தொழிலைக் கற்றுக் கொள்ளோம். ஆனதால் நீயினி எங்களை வசப்படுத்த வேண்டுமென்று கொண்ட கருத்தை யிப்பொழுதே விட்டுவிடுகவென வெளிப்படையாக விளம்பினர்.

இவ்வண்ணமாகப் பெண்கள் சொல்லக்கேட்ட மாணிக்கவல்லி, தன் தளர்ந்த முலையைப்போலத் தலைவளைந்து சிந்தை நொந்து, அடி பெண்களே! நான் மலடியுமா யிலேனில்லை. உங்களைப்பெற்று மகிழ்ச்சிபடையும் சிறப்புற்றேனுமில்லை பூர்வபுண்ணிய முடையோர்க் கன்றிப் புதல்வரால் உதவியுண்டாதல் ஏனையோர்க்கில்லையென்று வருந்தி, ஒருவாறு தெளிந்து, மதிமயக்குற் றிருக்கும் இம்மங்கையரை மணிமந்திர ஔஷாதிகளால் வழிப்படுத்திக் கொடுப்பவர் பொருள் கொடாமலே இவர்கள்மோக நலத்தை யனுபவிக்கக் கடவரென்றும் பலர்க்கும் வெளிப்படுத்த, அக்கன்னியர் தாயின் கருத்தை யறிந்து சிறிதுஞ் சகியாதவர்களாய், என்றும் நாம் தென் கைலையைக் காணப்பெறுவோ மென்னு மெண்ண மிகுந்தவர்களாய், பாம்பின் வாய்த் தேரைபோல மனம்நைந்து, எந்தச் சமயத்தில் தாயைப் பிரிந்து போய்விடலாமென்று சமயம் பார்த்திருக்கையில், இதனை யறிந்த இரண்டு கள்வர்கள். அந்த ஞானக்கன்னிய ரணிந்த ஆபரணங்களை யபகரிக்கும் உபாயமித வென்று யோசித்து, சிவனடியார் வேடந்தாங்கி, பாலில் மறைந்த, விஷமும் பழத்தில் மறைந்த புழுவும், மாமிசத்தில் மறைந்துள்ள தூண்டிமுள்ளும் மிருகங்களைக் கொல்லமறையும் வேடரும்போலத் தங்கள் நிலைமை வெளிப்படாது ஞானக்கன்னிய ரிருக்குமிடத்தைச் சார்ந்து உங்களைக் காளத்தி நாதன் காக்கவென்னுஞ் சொல்லோடுவர, அக்கன்னியர் தாய்மொழி கேட்ட குழந்தைகள் போலச் சந்தோஷமிகுந்து தம்மிருக்கைக்குள்

† யவாவி—எ - து—வேண்டி.

‡ புல்லிய—எ - து—அடைந்து.

வருவித்துச் சிறப்புகள் செய்து சொல்லுகின்றார்கள். நீர் இருக்குமிடமாது செல்லுமிடமாது என வினவ, நாங்கள் சிவதலங்களை உலகெங்குஞ் சஞ்சரித்துத் தெரிசிப்போம். இப்போது சீகாளத்தியை தரிசிக்கும் விருப்புடையவர்களாகப் போகின்றோமென, கேட்டமாத்திரமே அவர்கள் பாதங்களைப்பணிந்து, நாங்களும் தென்கைலையைக் காணப்பேரவாவுடையோமாதலின், எங்களையும் உங்களுடன் கொண்டு செல்லுவீர்களாயின், உங்களுக்கு நாங்கள் செய்யும் பிரதியுதவியுண்டோ என்று சொல்ல, கள்வர் அக்கன்னியரை நோக்கி மங்கையரே! நீங்கள் கோமள மேனியுடையவர்கள் வெப்பமிக்க பாலைநில முதலியவற்றை எப்படிக் கடப்பீர்களென்றும், உங்களை யழைத்துப் போனால் பழிச்சொல்லுக் கிடமாமே யென்றும், உங்களைப்பெற்ற தாய் கன்றிழந்த பசுப்போற் கலக்க முறுவாளே யென்றும் யோசிக்கின்றோம். ஆயினும் காளத்தியைக் கண்டகண்களே கண்கள், காளத்திக்குப்போகுங் கால்களே கால்கள், காளத்தியைக் கருதும் மனமே மனம் காளத்தியைத் துதிக்கும் நாவே நாவென்று நூலறிந்தோர் சொல்லுவர். இவ்வுடலோடு யான் சீகாளத்திக்குச் செல்வேனென்று விளையாட்டாகச் சொல்லினவரும் கைலாயபதவி யடைவர். அவ்வாறு சொல்வோரை விநோதார்த்தமாகத் தடுத்தவரும் வெகுகாலம் நரகிற்கிடப்பர். நீங்கள் சீகாளத்திகாணும் விருப்பத்தை நாங்கள் தடைசொல்ல மாட்டோமென, * பசப்பு வார்த்தைகளாற் சொன்னதை, அவ்வுத்தம மங்கையர் உண்மையென் றுள்ளத்திற் கொண்டு, நாங்கள் சிவபெருமானை யடைந்தால் இவ்வுடல் எவ்வகையாயினும் என்ன? உலகினர் பழித்தாலென்ன? புகழ்ந்தாலென்ன? எங்களை எவ்விதமாகவேனும் நீங்கள் தென் கைலையைச் சேரச் செய்ய வேண்டுமெனப் பலவாறு பணிந்து வேண்டிக்கொள்ள, அவ்வஞ்சகச் சிவவேடதாரிகள் நன்றென் றங்கீகரித்து, நீங்கள் பாதியிரவில் உங்கள் தாயறியாத விதமாக இன்னவிடத்தில் வந்து சேருகவென்று குறித்துக் கூறிப்போயினர்.

ஞானக்கன்னிய ரிருவரும், தங்களை நிழல்போலப் பிரியாத இரண்டு தோழிகள் பலபொருளைக் கொண்டுவர, † சங்கேதப்படி அர்த்தயாமத்தில் குறித்த விடமறைந்து, கள்ளர்களோடு பொழுது விடியுமுன்னமே இருகாத தூரஞ்சென்று, வழியில்நேர்ந்த ஸ்தலங்களைத் தரிசித்துக்கொண்டு, சோணாடடைந்து கும்பகோண முதலிய தலங்களை வணங்கி, சிதம்பரஞ் சார்ந்து திருவெல்லையைப் பணிந்து வீதிப்பிரதக்ஷிணம் வந்து ஆலயத்தெதிரே நின்று நமஸ்கரித்து, திருமூலட்டானரையும் பஞ்சகிருத்திய ஆநந்ததாண்டவம் புரியும் ஸ்ரீ நடராஜப் பெருமானையும் சிவகாமியம்மையாரையும் கண்கள்

* பசப்பு—எ-து—மயக்கும்.

† சங்கேதம்—எ-து—கட்டுப்பாடு.

பயன்பெறத் தரிசித்து அத்தலத்திலுள்ள பத்துத் தீர்த்தங்களிலும் ஸ்நானஞ் செய்து காலந்தவறாது சிவதரிசனஞ் செய்து கொண்டு சிலநாளிருந்து, அங்குநின்றும் புறப்பட்டுக் காஞ்சிபுரஞ் சார்ந்து பணிந்து, திருக்காளகிரியென்னும் தலத்தையடைந்து நதியிலே மூழ்கி, சித்தகணங்கள் வழிபாடு செய்யும் சித்தி வைரவைப் பணிந்து பிரதக்ஷிணஞ் செய்து, தரிசித்தோர்க்குப் போக மோக்ஷங்களைக் கொடுக்கும் வாலிநாதரைத் தரிசித்து வணங்கி, வெளியே வந்து ஒரு புராணிகரைச் சந்தித்து நமஸ்கரித்து அந்த ஸ்தல மகிமையைக் கேட்ப, அவர் சொல்லுகின்றார்.

கன்னிகைகளே! பண்டைக் காலத்தில் மகாபலவானான வாலியென்பவர் தம்முடைய ஆன்மார்த்த சிவலிங்க மூர்த்தியை இத்தடாகத்தின் கரையிலே யமர்த்தி யபிடேகமுதலிய பூசாகிரியைகளை முடித்து, பலவாறு தோத்திரஞ் செய்து அன்பின் மிகையால் ஆநந்தக் கூத்தாடி, வழக்கப்படி பெட்டகத்தில் எழுந்தருளுவிக்கக் கையாலெடுக்கையில், இலிங்கமூர்த்தி யசையாதிருந்தமை கண்டு இரண்டு கைகளாலும் இறுகப்பிடித் தெடுத்தும் அசையாமையால் மனக்கலக்க மெய்தி அப்பெருமானை வாலினாலே நன்றாகச் சுற்றிக் கொண்டு, கைகளை யூன்றி அண்ட கடாகமட்டும் உயர்ந்து பெயர்க்கவும் பெயராமையின், வாலைவிட்டுப் பெருமூச்செறிந்து பின்வருமாறு துதித்தார். தேவாதிதேவரே! தேவரீரே திருவருள்வைத்தெழுந்தா லல்லது பொய்த் தன்மையுடன் நான் வலியால் பெயர்த்தற் கெளியூரோ? என்வாலினால் தேவரீர் திருமேனியில் தழும்புண்டாகத் தீங்கிழைந்தேன். என்செய்வேன் கொடியேன். எண்செய்வேண். ஆ! ஆ! என்செய்வேன். தாயானவள் இளங்குழந்தையைக் காட்டில் விட்டுப் போனதுபோல அடியேனைக் கைவிட்டு இங்கமர்ந்து விட்டீர். நான் என்ன பிழைசெய்தேனோ? கருணைக் கடலே! என்னுயிரும் நீ, என்றுணையும் நீ, என் வாழும் நீ, என் அன்னையும் நீ, தந்தையும் நீ, உன்னையன்றி வேறு எனக்குயார் உறவாவார்? உன்னை நீங்கினால் என்னுயிர் நில்லாது நில்லாதென்று பற்பலவிதமாக வருந்தி நிற்க, பெருமான் பிரசன்னமாகி, அன்பனே! நாம் இவ்வனத்தில் இத்தடாகக்கரையில் வசிக்க விரும்பினோம். கவலையடைய வேண்டாம். இன்றுமுதல் உன் உள்ளத்தி லிருந்து உன் பூசையை யங்கரிப்போ மென்றாஞ்ஞாபித்து அந்தர்த்தானமாயினர்.

வாலியானவர் இறைவர் வார்த்தைக் கேட்டு, இவர் இங்கமர்ந்தது இத்தடாகத்தின் ஆசையினாலன்றி வேறன்று இதனை யழித்துவிடுவதே யிதற்குத்தீர்ப்பென்று, பெருமலை யொன்றைப் பெயர்த்து ஆகாயம் வரையில் நீர்த்துளிகள் செல்லும்படி ஒங்கி யெறிய, அம்மலையினின்றுஞ் சிதரிய மருந்துகளால் உலகில் நோய்புண் முதலி

யன வுடையோர் அவற்றை நீக்கினர். இறந்தவர் பிழைத்தார்கள். கிழவர் பாலியராயினர். அத்தடாகம் அழிவின்றிப் பலர்க்கு முதவும் பெருநதியாகிப் பெருகி யோடுதலை வாலிபார்த்து எம்பெருமான் திருவுள்ளம் இஃதாயின் யாது செய்வேனென்று பணிந்து பிரியா விடைகொண்டு போயினர். இந்நதியில் மூழ்குவோர் பிறவிக்கடல் கடந்து முத்திக்கரையை யடைவர். இது தீவினையென்னுஞ் செத்தைக்கு ஜலரூபமான நெருப்பு. கைலையைப் போலவே சிவபெருமான் இங்கு வாலிநாதரென்று உமாபிராட்டியாரோடு எழுந்தருளியிருக்கிறார் இப்பரமனைப் பணிவோர் பாதமெல்லாந் தவிர்ந்து பரகதியடைவர் இது சிறந்ததொரு தலமென் றுரைக்க, ஞானக்கன்னியர் களிப்பு மிகுந்து அவர்பாதங்களைப் பங்கயமுதலிய பலமலர்களா லர்ச்சித்துப் பணிந்து, அன்றைய இரவிலும் வாலிநாதரை வணங்கி ஒருமலையிற்றங்கினர் இவர்கள் இப்படித் தங்குந்தோறும் சிவபெருமான் இவர்கட்குக் கள்வரால் துன்பெய்தாத விதமாக அடியவர் வேடமேற்றிருந்து காத்துவந்தனர்.

அவ்வாறு, திருக்காளகிரியிற் றங்கி கன்னியர் சூரிய னுதிக்கு முன்னேயே யெழுந்து * நியதி முடித்துச் சென்று. அன்றோர் நகரிற் றங்கி மற்றையநாள் தென்கைலைக்கு நெருக்கமாகச் சேர்க்கையில் வஞ்சக ரிருவரும். இனி தென் கைலாயம் குறுகிவிட்டது. யாதுசெய்வோம், இதனைக் கடந்தால் தக்கவிடம் கிடைக்க மாட்டாதே இதுவே தனித்தவிட மாதலின், இவ்வனத்திலேயே இந்நான்கு மாதரையும் மாய்த்து இவர்களிடத்துள்ள பொன் பூஷண முதலியவற்றைக் கவர்ந்து போகவேண்டு மென்னுந் தம் விருப்பத்தை வெளிப்படுத்த அவர் நிலையை யறிந்த, இளையாள் உளநடுங்கி தமக்கையே! இவர்கள் நம்மை முடிக்க முயல்கின்றன ரெணவுணர்த்த முதியாள் இதுகாறுங் கார்த்த சீகாளத்தி நாதர்இன்றுங் காப்பார் அஞ்சற்க வெனத்தேற்றி, நிற்கும்போது, தென் கைலாய நாதர் பாம்பின் வாயிலகப்பட்ட தேரையைப் பாதுகாப்பவர்போல, கள்ளரிடத்திருந்து கன்னியரைக் காக்கத் திருவுளங்கொண்டு, திருப்பள்ளித் தாமத் திருத்தொண்டு செய்யும் அடியவர் வேடமேற்று அருகேவர, அவர் வருகையைக் கண்ட வஞ்சகர் விரைந்தோட, பெருமான் பெண்களருகே வந்து, தம்மைப் பக்தியுடன் பணிந்து நின்ற பாவையரைப்பார்த்து, நீங்கள் எவ்விடத்திலிருந்து வந்தீர்களென வினவி, அம்மங்கையர் நிகழ்ந்தன யாவுஞ் சொல்லக்கேட்டு, கன்னியர்களே! உங்களைத் தென்கைலையிற் சேர்ப்போம் வாருமென்றழைத்துக் கொண்டு பூமிதேவி புரிந்த தவப்பயனால் பாதங்கள் நிலத்திற்றோயத் திருவடி வருந்த நடந்து தென் கைலை சேர்ந்து மங்கையரே! இதுவே தென்கைலை மலை அது துர்க்கைமலை, அது நீலபர்வதம், இவ்வாறே பொன்முகரி, இது மயூரதீர்த்

---

* நியதி—எ-து—நேமநிஷ்டை.

தப், என ஏனைய வற்றையு முணர்த்தி அந்தர்த்தான மாயினர், அம்மங்கையர் திசைகளை நோக்கி நம்மை யழைத்துவந்து வழிகாட்டி மறைந்தவர் தென்கைலாய நாதரேயென்று தெளிந்து, மூவர முதலியவ ரருளிய திருமுறைகட்கு உவந்த எம்பெருமான் இரக்கமெய்தி இத்தென்கைலையி லிருந்து சங்கமராகத் திருவருட் பெருக்கத்தால் வந்தனரென்று பெரும்வியப்புற்றனர். ஐயோ காளத்தியண்ணல் கண்ணெதிர்ப்பட்டும் முத்திபெறாது, மணிபெற்றிழந்த வறிஞனையும் அமுதம் பெற்றிழந்த அறிவில்லாதவனையும் ஒப்பானோமே என வருந்தி மயங்கி, மீண்டும் இங்குள்ள சிறப்புகளை யெல்லாம் இறைவரே காட்டப் பெற்றோமென்று தெரிந்து, பின்னர் பொன்முகரியில் மூழ்கி, திருவெண்ணீறு தரித்து உருத்திராக்க வடம்பூண்டு பஞ்சாக்ஷரஞ் சபித்து, ஞானவந்தாதியை நியமனப்படி யோதிக்கொண்டு நாகலிங்கப்பெருமான் சந்நிதியடைந்து நமஸ்கரித்து வலம் வந்து அன்பின் மிகையால் நடனஞ்செய்து பரவசராகி நின்ற கன்னியரைப் பரமசிவன் திருவருள் மிகுந்து அச்சிவலிங்கத்திலே செவ்வொளியும் மரகத வொளியுமாகத் தரிசனமளித்து, அவர்களன்பை நோக்கி மனமகிழ்ந்து, திருமாலி தேவா சேவிக்கவும். உமாபிராட்டியார் உள்ளம் நாணவும், அவர்களைத் தம்முள்ளே கலப்பித்துப் பண்டுபோல் விளங்கினர் அப்போது, அவர்களோடு உடன் வந்த தோழியர், ஆலய மடைந்த கன்னியரைக் காணோமே யென்று தேடி மயங்குகையில், அக்கன்னியர் முத்தியடைந்தனர். நீங்கள் அவர்கள் பெயராற் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்யக்கடவீரென் றுண்டான ஆகாய வாணியைகேட்டு, அத்தோழிகள் கன்னிலிங்கமென் றிரண்டு சிவலிங்கப் பிரதிஷ்டை செய் தர்ச்சித்து நற்கதிபெற்றனரென்று விடசங்கம வடிவாய் வந்த விமலர் கூற, யாதவமகாராசன் மனங்களிமிகுந்து, அடிகளே! தேவரீர் முற்கூறிய சிலந்தி முதலியவற்றின் ஜன்மாந்தர வரலாற்றின் அடியேனுக்கு உபதேசிக்கவேண்டுமென வேண்ட, நெற்றிக்கண்ணைக் காட்டாது மறைத்து விடசங்கம வடிவாக வந்த சிவபெருமான் மேலுஞ் சொல்லலாயினர்.

கன்னியர்ச் சருக்கம் முற்றிற்று.

* முதியாள்—எ-து—மூத்தவள்—தமக்கை



பிரமதேவர் மாதவவூறனை சிலந்தியாகச் சபித்தல்.

# சிலந்தி முதல முற்கதைச் சருக்கம்.

கலி விருத்தம்.

கோதையர் கதைகலங் கூறி ஞாமினி
யேதமி லுலண்டின்முற் கதையி யம்புதும்
யாதவ மனனமரந் தினிது கேளென
மாதவ வடிவருள் வள்ளல் கூறுவான்.

அன்ன வூர்தி யழைத்த தறிந்தவன்
முன்னர் வந்துறமுற்ற வெகுண்டுநீ
சின்ன நூல்செய் சிலந்திய தாகென
வின்ன லெய்தின னேத்தி யிறைஞ்சினன்.

## சிலந்தி.

தாமரைப் பீடத்தில் எழுந்தருளியுள்ள நான்முகக்கடவுள் சிருஷ்டித் தொழிலைச் செய்துக்கொண்டு வரவும், தேவகம்மியனான விசுவகன்மனுடைய கண்ணிற்றோன்றிய ஆசைக்குமாரனாகிய மாதவவூறன் என்பவன், பிரமதேவர் பாற் பகைமை கொண்டு அவரைச்சிறிதும் மதியாது தானும் உலகத்தைப் படைத்துவர, அதனை யுணர்ந்த பிரமதேவர் அவன் மீது கோபங்கொண்டு அவனைத் தம்மிடம் வரும்படி சிந்திக்க, மாதவவூறன் அவர் அழைத்ததை யறிந்து அவர் முன்னே வந்து நிற்க, நீ நம்மை மதியாது இத்தகைச் செயலிழைத்தமையின், சிறிய நூலினையுண்டு செய்யுஞ் சிலந்தியாகுக வெனச் சபிக்க, மாதவவூறன் வருத்தமெய்திப் பணிந்து பலவாறு துதித்தனன். பிரமதேவர் கண்டு மனமிரங்கி, வருந்தாதே. சிவபெருமானெழுந்தருளிய கபாரண்ணிய க்ஷேத்திரத்தில் விளங்கும் வில்வவனத்தை யடைந்து அங்கோர் சிலந்தியாகி யிருந்து, தேவதேவனாகிய சிவபெருமானை ஆசையோடு அர்ச்சனை புரிந்து அரியமுத்தியை யடைவா யென்று சபாநுக்கிரகஞ் செய்தனர். அக்காரணத்தினால், மாதவவூறன் சிலந்தியாகிப் பரமேசுவரனைப் பூசித்து வினையை யொழித்து மோக்ஷமெய்தினா னென்று விடசங்கமர் கூறி இனிபாம்பின் முற்பிறப்பைப் பகர்வோம். யாதவமகாராசனே! கேட்பாயாக வென்று விடசங்கமசாக விளங்கும் விமலர் விளம்பலாயினர்.



சிவபெருமான் பாம்பை சபித்தல்.

### கலி விருத்தம்.

நடந்த காலை நகமகள் சீறியிவ்
கடைந்த வத்தநீ யத்தியா கென்றனள்
மிடைந்த வூழை விலக்குந ருண்டுகொ
லுடம்பு நானெனு வுத்தமர்க் கன்றியே.

### அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

உயிர்த்தொகை யனைத்து முற்ற வொருவனு முணர்ந் தழைத்து
செயிர்த்திலன் காம நோயாற் சிந்தனை கலங்கிச் சென்றாய்
கயப்பெய ரடவி மேவிக் காளநீ பாம்பா கென்று
பெயர்த்துமா ரருளி னாலே பிறைமுடிக் கடவுள் கூறும்.

### பாம்பு.

பதிப்பொருளாகிய பரமேசுரன் கொண்டுள் ளசத்துவகுணங்களே அகன்றும் உயர்ந்தும் ஒளி வீசநின்ற காட்சி போலவும், கோடி சந்திரர்கள் ஒருரு வெடுத்தாற்போலவும், விளங்கிப் பரமசிவனோ டிருக்கின்ற வளங்களமைந்தது கைலாயமலை அதனை மகாவலியையுடைய கணங்கள் எண்ணிறந்தன காதல்புரியாநிற்கும். அம்மலை அநேக அற்புதங்களோடு கூடியுள்ளது. கற்பகமரங்களுங் காம

வல்லியென்னுங் கொடிகளும் அழகிய புதர்களும் அங்கடைந்தவருடைய பிறவி முதலிய துன்பங்களை விலக்குமென்றால் அம்மலையின் வளப்பத்தைச் சொல்லவேண்டுமோ! அதனிடையே சிவபுர முள்ளது. அதன் சிறப்பைக் கமலாசனராகிய பிரமதேவரும் சொல்லமுடியாதென்றால், என்னைப்போலும் ஏழை மதியுடையோர் சொல்ல நினைத்தாலும் வசையேயல்லாமல் சிறப்புண்டாமோ பெருமை வாய்ந்த அச்சிவபுரம் இரத்தினங்களாலும் பொன்னாலும் வெள்ளியாலும் செய்யப்பட்ட மாளிகைகளும் தெய்வீகம் பொருந்திய மதில்களும் செய்குன்றுகளும் கோபுரங்களுமாகக் கணக்கின்றி விளங்கும். அச்சிவ புரத்தின் மத்தியில் எம்பெருமானுக்குத் திருவாலயம் இத்தன்மைத் தெனயாவராலுங் கூறமுடியாது, அழகும் உயர்வும் சமானமற்றதுமான சிறந்த மணிகளால் நியமிக்கப்பட்டுப் பிரகாசித்து விளங்கும். அதனிடையவே தம்முடிவைப் போலவும் அன்பர் மனம் போலவும் வடிவும் குண முதலியவற்றைக் கடந்த சிவபெருமான் உமாநாயகனும் மதிப்பொருளுமாக எழுந்தருளி யிருப்பார். அவ்விடத்தில் தேவர்களும் கணங்களும் முனிவர்களும் பூதர்களும் கருடரும் யக்ஷரும் நாகரும் கடல்போலக் கலந்து துதிசெய்வார்கள்.

ஒப்புயர் வற்ற சிவபெருமான், ஒருதினத்திற் சிங்காதனத்திலெழுந்தருளி யிருப்பக் கருதி, தமது திருமேனியில் அணியத்தக்க புலித்தோலாடை முதலியவற்றை அணிந்து கொண்ட பிறகு, ஆயிரம் பணமுடிகளை யுடைய ஆதிசேடன் முதலிய நாகங்களை ஆபரணமாக வணியும் போது, காளனென்னும் நாகன் தனக்குற்ற காமநோயால் தன் காதலிமாரிடஞ் சென்றிருந்தனனாகலின், சிவபெருமான் ஏனைய நாகங்களைப்பூண்டு காளனைக் காணமல் கருதுகையில் அவன் செயலை யறிந்து காளனை யழைத்து, நீ காமநோயால் மனங் கலங்கினை ஆனபடியால் கயாரண்ணிய மெய்தி நீ பாம்புரு வெய்துகவென்று கட்டளை தந்து, மீண்டும் அவன் பால் வைத்த கிருபையால், நீ அத்தென்கைலையில் பாம்பா யிருக்கையில், சிவலிங்கத்தை யடைந்து பூசிப்பாய். அப்பொழுது ஒரு யானையும் பூசிக்க அங்கெய்தும் அதனை நீ கொல்லமுயன்று இருவரு மிறந்து முத்தியடைவீர்கள் என்றும் சிவபெருமான் சபாநுக்கிரகங் கூறிவிடுப்ப, காளன் பாம்பாகிச் சென்றனன். காமநோயை விலக்கினவர்களுக் கன்றிப் பிறவித் துன்பம் ஏனையோர்க்கு நீக்கற் கெளிதாகுமோ. இனி யானையின் முற்பிறப்பை கூறுவாமென விடசங்கமரான சிவபெருமான் சொல்லுகின்றார்.



அத்திகணநாதர் யானையாக சாபம் பெறல்.

## யானை.

திருக்கைலாயத்தில், பார்வதி தேவியாருடன் சிவபெருமான் ஏகாந்தமாகவிருந்த ஒருசமயத்தில், சிவகணநாதர்களில் ஒருவரான அத்தியென்பவர் யான் சந்நிதியிற் செல்லவேண்டு மெனக்கூற வாயில் காப்போர் பெருமானுந் தேவியுந் தனித்துள்ளார்கள், இப்பொழுது செல்லுத லடாது இங்கிருக்கவேண்டுமென்று இனியசொற்களாற் சொல்லவும். அத்தியென்பான் அச்சொல்லை மதியாது விரைந்து உட்புகுந்தனன். அவ்வாறு செல்லவே, மலைமகளார்க்குக் கோபமூண்டு, இப்போது இங்கே உத்தரவு கடந்துவந்த அத்தியே! அத்தி (யானை) யாகுகவென மொழிந்தனர். ஊழ்வினையை விலக்குவோருண்டோ? அப்பொழுது அத்தியும் மிகப்பயந்து, சிவபிரானையும் உமாதேவியாரையும் பலவாறு பணிந்து துதிசெய்து, அடியேன் புரிந்த பிழையைப் பொறுத்தருள வேண்டுமெனப் பெரிதும் வேண்ட, பரமசிவன் மனங்கனிந்து கயாரண்ணியத்தில் யானை யுருவோடமர்கையில், சிவலிங்கப் பெருமானை ஓர்பாம்பு பூசித்துவரும் நீயும் அப்பெருமானைப்பூசித்து உனக்கும் அப்பாம்புக்கும் பகைமையுண்டாகி இருவருமிறந்து கதியுறுவீர்கள் போவென் றநுக்கிரகித்தனர். அதனால் அத்தி, அத்தியாகி யர்ச்சனைசெய்து முக்தியடைய நேர்ந்தது எனக்கூறி, திண்ணனாராகிய கண்ணப்ப நாயனாரது முற்பிறப்பையுஞ் சொல்கின்றோம் யாதவமன்னனே கேளென்று, தவவடிவாகி வந்த சிவபெருமான் சொல்லலாயினர்.



## சிவபெருமான் அர்ச்சுனனை கண்ணப்பராகெனல்,

# கண்ணப்ப நாயனார்.

கலி விருத்தம்.

திண்ண னார்முற் பிறப்பினிச் செப்புதும்
வண்ண வேலவ கேட்டு மகிழெனப்
பண்ண வாமொழிப் பாவையோர் பாகனை
முண்ணி லாவரு ளொண்டவ னேதுவான்.

அன்னதன் மையினருச் சுனனும் வேடனாய்
முன்னவன் பூசனை முயன்று செய்துபின்
கன்னிபங் குடையகா ளத்தி நாதனார்
தன்னரு ளாலுபர் முத்தி சார்ந்தனன்.

பாண்டவரைவரில், அர்ச்சுனன் தன்பகைஞராகிய துரியோதனாதியர்மீது பிரயோகித்து வெல்லும்படி சிவபெருமானிடம் ஒப்பற்ற பாசுபதாஸ்திரத்தைப் பெறும்படி கருதி, இந்திரநீல பர்வதமடைந்து ஒரு நல்லவிடத்தில் வதிந்து ஸ்நானஞ் செய்து மடிவஸ்திர மணிந்து, தன் நியமனப்படி, திருவெண்ணீற்றினை உடல்முழுதும் பூசி, உருத்திராக்க மாலைதரித்து, சிவபஞ்சாக்ஷர மந்திரஞ் சபித்துக்கொண்டு மேன்மை யமைந்த ஸ்தானத்திற் பொருந்தி விரும்பிய

வோர தனங்கொண்டு பிராண வாயுவை இடகலை பிங்கலைகளிற் செல்லாது, சுழிமுனையிற் செலுத்தி, ஆறுதாரங்களினு மேம்பட்டு பிரமரத்திரத்தில் ஜோதி. சொரூபத்தில் மனோலயமுண்டாகக் கடுந்தவம் புரிந்தனன். இப்படித் தவத்துடனிருக்கையில் அர்ச்சுனனைக் கொல்லும்படி, துரியோதனனா லேவப்பட்டமூகா சுரனென்பவன். பன்றிவடிவோடு அங்கடைந்து அங்கேதங்கிய முனிவர் முதலிய பெரியோர்களுக்குத் துன்பம் விளைத்துக் கொண்டிருந்து, கண்டோர் இயமனே வந்தனனென்று அஞ்சும்படி செய்துவந்தது. ஒரு நாள் இந்திரநீல பர்வதமுற்று, முதுகு ஆகாயமளாவவும், மலைகளும் நிலைபெயா மூச்செறிந்தும் விளங்க, சிவபெருமான் தம்மைநோக்கித் தவநிலையி லிருக்கும் அர்ச்சுனனுக்கு அதனால் இடருண்டாகா வண்ணம் அதனையடக்கத் திருவுளங்கொண்டு, காலிற் செருப்பணிந்து புலித்தோல் கட்டிக்கொண்டு, உடைவாள் செருகிக்கொண்டு, பல கறை குன்றிமணி சங்கமணி ஆத்திமலர் கொன்றைமலர் இவற்றால் அழகு செய்துகொண்டு அம்பறாத்தூணி கட்டிக்கொண்டு, வில்லும் அம்புங் கைக்கொண்டு வேடுவ வடிவாயினர் உமாதேவியாரும் சிவபெருமான் கொண்டவேட்டுவத் திருக்கோலத்திற் கேற்ப, தாமும் வேட்டுவப்பெண் வடிவாகிப் பக்கலில் வந்தனர். காட்டில் இருவரும் ஒருவர்பின் னொருவராகச் செல்லுகையில் அப்பன்றி இறைவர்முன் ஆர்ப்பரித்துவர, சிவபெருமான் சிறிதுங்கோபமின்றி லீலாமாத்திரையாய் ஒருகூரிய அம்பினைச் செலுத்த, அது அப்பன்றியின் மேற் பாய்தலும் மழை பொழியும் மேககர்ஜனைபோல இரைச்சலிட்டு வேட்டுவனுக்குப் பயந்து குறுக்கிட்டு மறைந்தொளித்தது, இறைவர் அதனைத் துரத்திக்கொண்டு பின்றொடர, அது முனிவர் தவச்சாலைபை குறுகி யோடியது அதுகண்ட முனிவர் பலரும் பயந்து விரைந்தோடினர். அதுகண்ட அர்ச்சுனன் அப்பன்றியைச் சினந்து கையில் வில்லும் அம்புந்தாங்கிச்சென்று கோபத்தோ டெதிர்த்து வில்லை வளைத்துக் கூரிய அம்பினைப்பூட்டி யெய்தனன், அப்பன்றி விழுந்திறந்தது அப்போது வேடவடிவமாக வந்த சிவபெருமானும் அங்கடைந்து இதைநான் கொன்றேனென்று சொல்லவும், அர்ச்சுனன் நன்றிகெட்ட வேடா! நன்றாகச் சொல்லினை உன்னுடைய அம்பும் இதனுடலில் உருவுவதோ? நான் விடுத்த அம்பினாலே பன்றி உயிர் விட்டது. நீ உன்பயனற்ற வில்லையெடுத்துக் கொண்டு குறிச்சிக்குப் போகவென, அதனால் அர்ச்சுனனுக்கும், சிவபெருமானுக்கும் சண்டையுண்டாக இருவரும் அம்புகளைச் செலுத்திப் போர்செய்கையில்

அர்ச்சுனன் நாணியற்றதன் வில்லைக் கொண்டு சிவபெருமான் திரு
முடிமேல் மோதியடிக்க, அகிலசராசரங்கட்கும் அவ்வடி பட்டபடி
அவ்வடியைச் சிவபிரான் ஏற்றுக்கொண்டனர். பிரமதேவர் வெகு
காலந் தேடியுங் காணமுடியாத திருமுடியில் அர்ச்சுனன் அடியை
ஏற்றுக்கொண்ட சிவபெருமான் அடியவர்க்கெளிய னென்பதைநன்
குவிளக்கினர். மீண்டும் இருவரும் நெடுநேரம் மற்போர் புரிந்தனர்
பாண்டுமைந்தனைக் குழந்தையாடிய விளையாட்டாகக் கருதி ஆசை
யோடு தீண்டி விளையாட்டாகச் செருச்செய்து இறுதியில் தமது நிஜ
வடிவைக் காட்ட பிரமாதி தேவர்கள் ஹாஹாவென வொலிசெய்து
துதித்தனர். சிவபெருமான் காளகண்ட சதுர்புஜதாரியாய் உமாசமே
தராய் இடபாரூடராய் திருமால்முதலிய பெருந்தேவர்கள் தனித்தனி
துதி செய்ய பேரருட் டிறத்தோடு விளங்குவதை விஜயன் தரிசித்து,
உடனே அவன் புரிந்த செயல்களை இவ்வளவென்று எவர்தாஞ் சொல்
வர் ஒருவருமிலர்.

அர்ச்சுனன் உடல் நடுங்கினன். வெயர்த்தான், மனமிளைத்தான்
மிகுந்த அன்பு மனதிலடங்காமல் ஆநந்தக் கண்ணீர் பெருகினன் நில
மிசை பலமுறை பணிந்தான், மயங்கினன் ஒருவாறு மனந்தெளிந்து,
ஐயனே! அடியேன் புரிந்த குற்றத்தை மனம்பொறுத் தருள வேண்
டியது தேவரீர் கிருபைக்கு அழகாகுமென்று பலவாறு துதிசெய்
தான். அர்ச்சுனன் கூறியவார்த்தைகளைச் சிவபெருமான்கேட்டு, ஆந
ந்தித்து நீசொன்னவை தகுந்தனவே. அஞ்சவேண்டாம். நீ விரும்பிய
வாத்தைகேள் அவ்வண்ணமே வரங்கொடுப்போ மென்று திருவாய்
மலர்ந்தருள, அர்ச்சுனன் கிரமப்படி நமஸ்கரித் தெழுந்து நின்று,
அடியேன் பிறவிக்கடலிற் பட்டு வருந்தினேன். அடியேன் உஜ்ஜீவிக்
கும் வகையாக முத்தியைக் கொடுத்தருள வேண்டுமெனக் கேட்க
வும், சிவபெருமான் அர்ச்சுனா! நீ உன் சத்துருக்களைக் கொல்லும்
படி நல்ல பாசுபதாஸ்திரம்பெறத் தவஞ்செய்தனை யாதலின் அதனை
முதலிற் பெற்றுக்கொள்ளென்று * பிரசாதித்து, நீ நம்மை வேடுவ
னென்று இகழ்வாகப் பேசினபடியால், நீயும் வேடராசனாகித் தென்
கைலையை யடைந்து குறைவில்லாத அன்பின் வடிவாகி, நம்மயமாகிய
சிவலிங்கத்தைக் கல்வி யறிவு முதலியன பெறாதிருந்தும் நற்பக்தி
யோடு சந்தோஷமாகப் பூசித்து, பன்றி முதலிய மிருகங்களைக் கொ
ன்று தசையமுதை யுண்பித்து வருகையில் உனக்கு முத்தி கொடுப்
போம். இனிஉன்னிடஞ் † சார்கவென்று சிவபிரான் மறைந்தருளினர்

* பிரசாதித்து—எ-து—அருள்கொடுத்து.

† சார்க—எ-து—அடைக.

அக்கா ணத்தினல் அர்ச்சுனனும் திண்ண
து முந்தியெய்த லாயிற்று என்று சங்கம வடி
மான் திருவாய் மலர்ந்தருளினர்.

சங்கமேசர் சாற்றியருளிய தென் கைலாய
றுங் கேட்ட யாதவ மன்னர், எம்பெருமானே!
பொருளாகக் கருதிற் தாய்போலக் கருணைகொண்
ந்தருளி யான் செய்த பூர்வபுண்ணியங் கைகூடி ...றுகூறி அவர் திருவடியில் சாஷ்டாங்கத் தெண்டனிட்டெழுந்து எதிரே கைகூப்பி நின்றபோது, விடசங்கமர் நீ முதலில் சீகாளத்தி யடைந்து சிவபெருமானுக்குத் திருவாலயஞ் செய்விக்கக் கடவையென்று கூறியருளி அந்தர்த்தான மாயினர் இவ்வாறு விடசங்கமர் மறைய யாதவ மன்னர் பூமியில் வீழ்ந்து பணிந்துநின்று சொல்லற்கரிய அதிசயத்துடன் யான் பிறந்த மாநுடப்பிறவி பயனெய்தியதெனக் கருதி இன்ப மிகுந்து விளங்கினர் அவர்செய்கை யிவ்வளவென் றளவிடற் கிடமில்லை.



யாதவமன்னன் பணிப்பெண்ணுக் குபசாரஞ் செய்தல்.

கலிவிருத்தம்.

தென்பெருங் கயிலையிற் றேவ னேயிவண்
மன்பெருஞ் சங்கம வடிவந் தாங்கின
னென்பதை யுணர்ந்திடு மிறைவன் சாலவுங்
கோன்புனே தவமுள கொம்பைக் கும்பிடா.

களு மனைத்து நல்கினன்
ன்னை நீ செல்வ மோடுறீஇ'
ணியினை நீக்கென் றுரைதினு
லையன வருந்த வத்தினன்.

ன் தென் கைலாயத் திறைவரே இங்கு விடசங்கம
ன ரென்பதை யுணர்ந்து, அவ்விறைவர் இங்கெ
ழுந்தருள, கலந்திருந்தும் காரிகையென்ன தவஞ் செய்தன
ளெனக் கும்பிட்டு, ஆடையாபரணதிகளை அவளுக்கு அபரிமிதமாக
க்கொடுத்து, தாயே! நீ இனிச் செல்வத்தோடிருந்து உன் சிற்றேவ
லைச் செய்யவேண்டா வென்று கட்டளையிட்டு, சந்தோஷத்துடன்
மறுநாள் உதயத்தில் சேனைகளை வருகவென ஆஞ்ஞைதந்து அவ்வ
ண்ணமே வில், வேல் தோமரமுதலிய ஆயுதங்களைத் தரித்துப் பல
வாத்தியங்கள் முழங்கப்பெருஞ் சேனைசேர, பல்லக்கிலேறி, குடை
கொடி சாமரை முதலியன சூரியனையு மறைக்கப் பெருந் † திரளாக
ச்சென்று, தென்கைலையை யடைந்து, பாசவேரை யறுக்கும் பராபர
னுடைய வாசஸ்தானத்தைப் பணிந்து, அன்போடு கூடிய மனத்த
ராய் நல்லதோ ரிடத்திலிருந்து, சடைமுடி யணிந்த சங்கரனுக்கு கர்ப்
பக்கிரகம் அந்தராளம் அர்த்தமண்டபம் மகாமண்டபம் திருமதில்
திருக்கோபுரம் துஜஸ்தம்பம் பலிபீடம் முதலியன செய்வித்து, அவ்
வண்ணமே ஞானபூங்கோதையருக்கு ஆலய முதலியனவும், விநாயகப்
பெருமானுக்கு திருக்கோயிலும் குமாரசாமி தெய்வயானையம்மை
யார் வள்ளிநாயகியாரென்னும் இருசத்திகளோடும் விளங்குமாறு ஆல
யமும் திருமால் பிரமன் சூரியன் சந்திரன் வைரவன் துர்க்கை சண்
டிகேசர் திருநந்திதேவர் இவர்கள் முதலிய பரிவாரதேவர் கோயில்க
ளும் தூபி முதலிய பிறவும் செய்வித்து, வாகனங்கள் இரதங்கள்
விமானங்கள் முதலிய அழகுற அமைப்பித்து, சிறந்த ஆபரணங்கள்
சேர்ப்பித்து பொன்முகரி நதியை விலக்கி நகரங்கண்டு, ஆலயத்தி
ற்கு நித்திய நைமித்திக பூசைகள் முறைப்படி சிறப்பாக நடக்கச்
செய்து, திருவிழாச் செய்வித்து யாதவமகாராசன் ஆசையோடு மநு
முறைதவறாது செங்கோல் செலுத்தி நெடுங்காலம் வாழ்ந்து கைலை
கருணை நிதியாகிய காளத்தி நாதர் கமலபாதத்தி லமர்ந்தனர்.

---

* கலந்திருந்து—எ-து—மண்பானைகளை யலம்பும்.

† திரள்—எ-து—கூட்டம்.

இத்தகைச்சிறப்புப் பொருந்திய தென்கைலாயப் பெருமானுடைய மகாத்மியத்தைச் சந்தோஷமாகச் சொன்னவர்களும் கேட்டவர்களும் படித்தவர்களும், மனைவி புத்திரர் செல்வ முதலிய வளங்களோடு இவ்வுலகில் வாழ்ந்து இறுதியில் சிவபதவி யடைவார்கள்.

## நூற்பயன்.

### அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

இனைய தாகிய தென்கயி லாயம்வா ழிறைபெரும் புராணத்தை
மனமகிழ்ந்துநன்றோதினர்கேட்டவர்மாறில்வண்பொருள்சொன்னோர்
மனையு மைந்தரு மாநிதி வளத்தொடு மானிலந் தனில்வாழ்ந்து
தனைநி கர்த்திடு மிறைவன்வாழ் கயிலையிற் சார்ந்தினி திருப்பாரால்.

வையக முழுதும் வாழ்க மாதமும் மாரி பெய்க
செய்யகோ லரசன் செய்க திருவறஞ் செய்வோ ரோங்க
தையலோர் பாக னன்பர் தாணியின் மிகவு மோங்க
ஐயனு கமநூல் கூறு மருந்தவர் வாழ்க மிக்கே.

முற்றிற்று.

---

ஸ்ரீ காளத்தி நாதன் கழலிணை வாழ்க.

உ

சிவமயம்.

# விண்ணப்பம்.

---

அன்பர்களிதையத்தின்புற் றிலகும் 'அருட்பெருஞ் சோதியை இருட்கெட விறைஞ்சும்மெய்யன்புடையீர்! "வினை-கொன்ற நல்லவர் கொள்பவென் றெண்ணியே" என்றிச் சீகாளத்திப் புராணத்தை ஸ்ரீ கருணைப்பிரகாச சுவாமிகள், சிவப்பிரகாச சுவாமிகள், வேலைய சுவாமிகள், திருவாய் மலர்ந்தருளினரேனும் ஆசை வெட்க மறியாதென அத்துமீறி இதை வாசகமாக வெழுதிய யான் ஷை முதியோர்களின் கருத்திற்கு முரணி சிவாபாரதியாகாது பாதுகாக்க மறுபதிப்பைத்திருத்து வீரென வந்தனத்துடன் வழி பார்க்கின்றேன்.

நெ. மு. ஷ. ஷண்முகசுந்தர நாயனார்.



WESTWARD & Co.